குறமகள்

குறுநாவல்கள்

# கூதிர்காலக் குலாவல்கள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விளம்பரம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம் ™ குறுநாவல்கள்

## குறமகள்

# கூதிர்காலக் குலாவல்கள்

அன்புடனும்
ஆசியுடனும்
~ குறமகள் ~
416.536.8445.

1. கூதிர்காலக் குலாவல்கள்
2. அகணிதன் அல்லது நதியின் பிழையன்று

விளம்பரம் ™ வெளியீடு (ரொறொன்ரோ - கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கனடா திருநாட்டில் மூத்த தமிழ்ப்பத்திரிகையான **விளம்பரம்**™ மாதமிருமுறை வெளிவருகிறது. இப்பத்திரிகையில் எழுதிவருபவர்களுள் குறமகளும் ஒருவராவர். விளம்பரம் பத்திரிகையின் இரண்டாவது வெளியீடு இதுவாகும். குறமகள் எனும் புனைபெயரில் திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களின் **கூதிர்காலக் குலாவல்கள், அகணிதன் அல்லது நதியின் பிழையன்று** என்ற இரு குறுநாவல்களை நாம் பதிப்பு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இலங்கையின் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வளர்ப்பிடமாகவும் கொண்ட இவர் பல்வேறான புனை பெயர்களில் கதைகள் - கட்டுரைகள் - கவிதைகள் - சிறுகதைகள் - குறுநாவல்கள் - நாடகங்கள் எழுதி வருகின்றார். சமூகசேவையில் நாட்டம் கொண்ட இவர் ஒரு கல்வியியலாளர், சொற்பொழிவாளர் மற்றும் எழுத்தாளரும் ஆவார்.

எமது செய்தித்தாளில் எழுதிய கவிதை, கட்டுரை, கதைகள் என்பன மிக ஆழமான சிந்தனைகளை முன்வைத்தல், ஆய்வுபூர்வமான தகவல்களைத் தருதல், பிறரின் சிந்தனைகளை மேலும் தூண்டவல்லதாக அமைதல், பெண்கள் பற்றிய துணிச்சலான கருத்துக்களை முன்வைத்தல் போன்ற பல்துறை சார்ந்ததாக அமைந்தன.

வெவ்வேறு தளங்களில் சிந்திப்பவர்களின் சிந்தனைக்கு எந்தவொரு அணையும் போடாமல், பத்திரிகை தர்மத்தை மீறாமல் எழுதுபவர்களால் எமது பத்திரிகை வெளிவருவதில் பெருமை அடைவதுடன், திருமதி. குறமகளின் துணிச்சலான கருத்துக்களுக்கும் எமது பத்திரிகை களமாக இருக்கும் என்பதனை தெரிவிப்பதுடன் எதிர்காலத்தின் புதிய பல ஆக்கங்களையும் பதிப்பாக வெளியிடவேண்டும் என்ற ஆவலுடனும் உள்ளோம்.

விளம்பரம் பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வெளிவந்த கூதிர்காலக் குலாவல்கள் குறுநாவலும், அகணிதன் அல்லது நதியின் பிழையன்று குறுநாவலும் சேர்த்து புத்தகமாக வெளிவருகின்றது. புலம்பெயர்ந்த நாடுகளில் குறிப்பாக தமிழ்மக்கள் அதிகமாக வாழும் கனடாவில் விளம்பரம் சார்பில் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

குறமகள் அவர்களின் எழுத்துச் சேவை, சமூகசேவை என்பன தமிழ் சமுதாயத்துக்கு தொடர்ந்து கிடைக்கவும் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழவும் இறையருளை வேண்டிநிற்கிறோம்.

*ராஜா மகேந்திரன்*
*மார்கழி 24, 2009*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறமகள் பேசுகிறார்...

ஆண்டொன்றின் இறுதியில் வரும் கூதிர் காலத்தை மனித வாழ்க்கையின் அந்திமத்துக்கு உருவகித்து ---

கடுங்குளிரில் எப்படி போர்த்து மூடி குடங்கி முடங்கி கிடக்க மனம் ஏவுகிறதோ அப்படியே வாழ்க்கையிலும் தான் செய்த தொழிலிலும் ஓய்வு, வீட்டுப் பொறுப்புக்களிலும் ஓய்வு, ஆற அமர இருந்து வாழ்ந்து வந்த பாதையை திரும்பி பார்த்து ---

இன்பம் - துன்பம், மகிழ்ச்சி - துயரம் என்பவற்றை மானசீகமாக உணர்ந்து அனுபவித்து ---

தவறுகள் தோல்விகள் ஏன்? எப்படி? அப்படிச் செய்திருக்கலாமோ இப்படி நடந்திருக்கலாமோ என ஆத்ம விசாரம் செய்து ---

பகைமை காரணமாகவோ பொறாமை காரணமாகவோ நீண்ட காலமாகத் தொடர்பு விட்டுப் போன வேண்டப்பட்டவர்கள் உறவினர்களை நினைத்து ---

எவ்வளவு அந்நியோன்யமாக இருந்தோம். அற்ப விடயங்களுக்காக அநித்தியமான இவ்வாழ்வில் அருமையான தொடர்புகளை அலட்சியப்படுத்தினோமே எனக் கவன்று ---

இவை அனைத்தையும் இனி எப்படி நிவிர்த்தி செய்யலாம்; யாரில் தவறு இருந்தாலும் பரவாயில்லை நாமே முதலடி எடுப்போம் என அமைதி காணும் காலம் இது.

**த**மிழீழப்போராட்டத்தில் நடந்த சம்பவங்கள் எம்மை உலுக்கி வருத்தி உணர்விழக்கச் செய்து வந்தன அல்லவா?

மாற்றானின் காம வெறியாலோ, பழிவாங்கலாலோ எங்கள் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகித் துன்புறத்தப்பட்டு கர்ப்பவதிகள் ஆனார்கள். பரபரப்பும் பதுங்கு குழிகளுமாக அவலபட்டு ஓடித்திரிந்தவர்களுக்கு தங்கள் நிலை புரிந்ததும் தற்கொலைகளுக்கு ஆளானர்கள் அல்லது கருக்கலைப்பு காரணமாக ஏற்பட்ட இரத்தப்பெருக்கினால் இறந்தார்கள். மீறிப்பெற்றெடுத்தவர்கள் ஏளனப் பார்வைகளால் தாக்கப்பட்டோ மனப் பிராந்தியாலோ மனோநிலை பாதிக்கப்பட்டார்கள்.

எங்கள் உள்ளம் கொதித்தது, வெம்பியது. எப்படி எமக்கொரு சாந்தியை தேடுவது. ஒரு சிறு விந்து உட்புகுவதால் ஒரு சமூகமே பாதிக்கப்படலாமா?

“ஏய் பெண்ணே! உனது முட்டையும் சரிபாதியாக அங்கே இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமாத்திரமல்ல, உனது இரத்தத்தையும் போசாக்கையும் கொடுத்து நீயே அதற்கு உருவகம் கொடுக்கின்றாய். உயிர்ப்பிண்டமாக்குகின்றாய். நீயே பத்து மாதமாகச் சுமந்து வேதனைப்படுகின்றாய். நீயே பிரசவ வேதனையால் துடித்து பெற்றெடுக்கின்றாய். நீயே பாலூட்டி வளர்க்கின்றாய். எங்கே அந்த துளியை விட்ட அவன். உனக்கே உனக்கென்று உன்னாலே படைக்கப்பட்டதை நீயே வீரமுடன் பெற்றெடு. நீயே தீரமுடன் வளர்த்தெடு. சமூகம் அதற்குப் பழக்கப்படட்டும். இரண்டாந்தாரமும் கிடைக்க வாய்ப்பிருக்கும். தற்காலத்தில் மருத்துவ விஞ்ஞானம் அதைத்தானே செய்கின்றது.

குமுறலுக்கு வடிகாலாக எழுத்து உதவியது. ஆயினும் மாற்றானின் பெரைப் போட அந்த இனத்தின் மீதான வெறுப்பும் கோபமும் எம்மை விடவில்லை. அப்படித்தான் **அகணிதன் அல்லது நதியின் பிழையன்று** பிறந்தான். சமாதான காலத்தில் கதை உருவானது. சில வருடங்களின் முன் பாஞ்சாலன் பார்வைக்கு போய் பின்னர் தட்டச்சுக்கு விதானையிடம் சென்றுவந்து என்வசம் இருந்தது.

அமரர் இராமலிங்கம் அவர்களின் அத்தியந்த நண்பர் ஒருவர், வேற்றினப் பெண் ஒருத்தியை காதலித்து விவாகம் செய்து கொண்டார். எங்கள் குடும்பங்கள் நன்றாக பழகி வந்தன. பிரச்சினை காலங்களின்பின் தொடர்பு விட்டுப்போயிற்று. அப்போது மூன்று பிள்ளைகள். சில மாதங்களின் முன்னர்தான் அவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டு விட்டார் எனும் தகவல் கிடைத்தது. எந்தக்கலவரத்தில் என்று தெரியவில்லை. இதுவும் மனத்தை வருத்தியதால் இந்தச் சிறுபொறி **கூதிர்காலக் குலாவல்களில்** பயன்படுத்தப்பட்டுள்ளது.

பரபரப்பு நிறைந்த எனது கடந்தகால வாழ்க்கையில் கோப்புகளை ஒழுங்காக வைத்திருக்க முடிவதில்லை. ஒவ்வொரு தலைப்புக்களில் கோப்புக்கள் இருக்கும். ஆனால் அவசரத்தில் எல்லாம் கலந்து விடும். எழுதிய ஆக்கங்கள் முடிவுபெற முன்னரே கோப்புக்களுள் ஒளிந்து விடும். அத்தகைய அரை குறைகள் நிறையவே மறைந்திருக்கின்றன.

யாராவது தூண்டிக்கொண்டே இருந்தால்தான் என்னால் எழுத முடியும். யாழ்ப்பாணத்தில் அமரர் கனக செந்தில்நாதனும், கனடாவில் திரு. எஸ். திருச்செல்வமும் வேலைகளை தந்து கொண்டிருப்பார்கள். சமீப காலமாக சத்தியபாமா மகேந்திரன் நெம்புகோலாக விளங்குகின்றார்.

ஒவ்வொருமுறையும் தொலைபேசியில் அழைப்பார் பாமா. "எழுதப் போறீங்களா" என்று கூடக் கேட்கமாட்டார். "இன்னும் வரவில்லை உங்களுடைய கட்டுரை. ரைப் பண்ணவேணுமல்லோ". (தட்டச்சுப்பழகவில்லை) அவசரஅவசரமாக இரவு 2:00 மணி சென்றாலும் எழுதி முடிக்கப்பட்டு தொலை நகலில் அனுப்பட்பட்டுவிடும்.

சென்ற மே, ஜுன் மாதங்களில் தாய்நாட்டுச் சம்பவங்களின் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிக்கலவைகளால் ஒருவகை மன அழுத்தம், எழுதமுடியவில்லை.

"என்னிடம் ஒரு குறுநாவல் இருக்கின்றது அதை அனுப்பட்டுமா?"

"அனுப்புங்கோ வாசித்து பார்த்துவிட்டு போடுவோம்".

அதுதான் "கூதிர்காலக் குலாவல்கள்"

எழுதின உடனே நூலாக்கிப் போடுங்கள். இல்லாவிட்டால் யார் செய்யப் போகின்றார்கள். உங்கள் கோப்புக்களுடன் இவையும் ஒளிந்து விடும்.

பாமாவின் மென்மையான உறுதிவாய்ந்த சொற்களுக்கு பணிந்து சிறுநூலாகவாயினும் விளம்பரம் வெளியீடாகக் கொண்டுவந்துள்ளோம்.

ராஜா மகேந்திரனின் அன்பான அமைதியான அரவணைப்புக்கும் சத்தியபாமாவின் பண்பான சொல்லாடல் செயல் வீரத்துக்கும் தலை வணங்கி நன்றி கூறுகின்றேன். தட்டச்சு ஏற்றிய சத்தியகலா விஜயபாலன் தம்பதிகளுக்கும் நன்றி. விளம்பர குழுவினருக்கும் சரியான முறையில் நூலுருவாக்கிய அமுதீசன் குழுவுக்கும் நன்றி.

அத்தோடு வாழ்க்கைப்போராட்டத்திலும் தாயகப்போராட்டத்திலும் வீரதீரமுடன் ஈடுபட்ட ஈடுபடுகின்ற; ஈடுபடப்போகும் அத்தனை **வீராங்கனைகளுக்கும்** இந்நூலைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

*மீண்டும் சந்திப்போம்...*
*வணக்கம்*
*நேயமுடன்*
*குறமகள்.*

*"Thirupthy" ("திருப்த்தி")*
*516-20 Wade Avenue,*
*Toronto*
*M6H 4H3*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூதிர்காலக குலாவல்கள்

ஒக்ரோபர் ஒன்பதாம் திகதி சர்வதேச அஞ்சல் தினம்! அன்றுதான் ரொறொன்ரோ 'ஓய்வு பெற்ற தமிழ் அஞ்சல் அதிபர்கள்', தமது மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடலை நடாத்துவது வழக்கம்.

கூட்டம் ஆரம்பமாகிவிட்டது. இதற்கும் தனக்கும் ஒரு அலுவலுமில்லை என்பது போல அசிரத்தையாக ஒரு மூலையில் அமர்ந்திருக்கிறார் ஓய்வுபெற்ற கிழக்குமாகாண அஞ்சலகங்களின் அதிபதியான திலகராசா.

வருடாவருடம் கூடுவதும், குடிப்பதும் உண்ணுவதும்தான். ஏதாவது உருப்படியாகச் செய்யமுடியாதோ என்பது அவர் சிந்தனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாய உரைகள் முடிந்ததும் புதிய அங்கத்தவர் அறிமுகம். "திரு. தேவசிகாமணி அவர்கள் இப்போது தம்மை அறிமுகம் செய்வார்கள். தேவா, தயவு செய்து முன்னுக்கு வாரும்". பெயர் காதில் விழுந்ததும் உசார் ஆகிறார் திலகராசா. வந்து நின்றவரை கண்டதும் மகிழ்ச்சியும் வியப்பும் முகமெங்கும் பரந்தன.

நின்று நிமிர்ந்து குறும்பு கொப்பளிக்கும் முகத்தோடும் தலையிலும் மீசையிலும் ஓரிரண்டு நரைமுடிகளோடும் அதேஅதே தேவசிகாமணி! தேவசிகாமணி!! தான்.

"நண்பா! அடே என் நண்பனே! நீண்ட பல ஆண்டுகள்! என்னை நீ அடையாளங் கண்டு கொள்ளமாட்டாய். தொங்கு சதையும் கூனல் முதுகும் பூசணிக்காய் உருவமும்....மறந்திருப்பாய்" ஏக்கப் பெருமூச்சு.

"நண்பர்களே! நான் இன்று உங்கள் முன் நிற்பதற்குக் காரணமானவன் ஒரு நண்பன். அன்று பரீட்சையில் எனக்காக அவன் மோர்ஸ் அடித்திருக்காவிட்டால், என் வயலை விதைத்துக் கொண்டு தமிழ் ஈழத்தின் எல்லைக்காவலராய் பணிபுரிந்து நாட்டுக்காகவும் சேவை செய்திருப்பேன். ஆனால் அஞ்சல் அதிபராகி, மேலும் மேலும் படித்து 1983 இன் கொடிய கலவரத்தில் மனைவி, குழந்தைகள் உட்பட எல்லாம் இழந்தேன். பின், கப்பலில் றேடியோ ஆபீஸராக (அறிவிப்பாளராக) ஊரூராய் அலைந்து உலகை வலம் வந்து முற்றுந்தரிப்பை உங்களோடு முடித்திருக்கிறேன்."

எத்தனை கடினமான இதயத்தையும் தொட்டுவிடும் விடயத்தைத் தனக்கே உரிய பாணியில் நகைச்சுவை கலந்து தோள்குலுக்கி, கண்சிமிட்டிப் பேசியதால் சபையும் கைதட்டிக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தது.

திலகராசாவின் கண்கள் துக்கத்தால் சிவந்து விட்டன. கொழும்பு அனர்த்தத்தின் பின் தேவசிகாமணியைச் சந்தித்து ஆறுதல் கூறப்போன போது "சாவகச்சேரிக்கு 'சா' பற்றி விசாரிக்க வாறியேடா. கொழும்பிலை படிப்பிக்கிறதாலையும், பிள்ளைகள் றோயல் கல்லூரியில் படிப்பதாலும் கொழும்பிலை வீடு வாங்கென்று நாண்டு கொண்டு நின்றாள். எனக்கு வேறெங்கும் மாற்றம் கிடைத்தாலும் வந்து வந்து போகலாமாம். பிரச்சினை தொடங்கினவுடனேயே யாழ்ப்பாணம் வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு செய்து போட்டு வீட்டை ஓட, உங்காலை பிரச்சினை போகவேண்டாம் எனக் காவலர் விடவில்லை. ஆனாலும் நான் வேறு பாதையால் மதில் ஏறிக்குதித்து பின்பக்கத்தால் நுழைந்தேன். கொழும்பு வீடுதானே அவவுக்கு விருப்பம். சாவகச்சேரிக்கு வரமாட்டன் என்பது போல பிள்ளைகளையும் கட்டிப் பிடித்தபடி இரத்தக்குளத்துக்குள்ள நீச்சல் அடிக்கிறா." இதைக்கூட சிரிப்பும் நக்கலும் கேலியுமாகத்தான் சொன்னான்.

திலகராசாவுக்கு அதை நினைக்க இப்பவும் கண்ணீர் வருகிறது. ஆனால் தேவசிகாமணி சோகத்தில் ஆழ்ந்திருப்பதையும் அடிக்கடி தும்மல் அடிப்பதையும் பெருமூச்சு விடுவதையும் கண்டிருக்கிறார். கண்ணீர்தான் மூக்கு நீராக வெளியேறுகிறதோ எனவும் அவர் சிந்திப்பார்.

அவர்களுடைய நட்பு அலாதியானது. திலகராசா ஒரு வீட்டுப்பறவை எனின் தேவா ஒரு நாட்டுப் பறவை. காலில் சக்கரம் பூட்டிக்கொண்டு திரிவது போல் இருக்கும். திலக் புத்தகங்களுள் மூழ்கிக் கிடப்பான். அவன் கிரிக்கெற் போட்டி பார்க்கப் போய் ஆ, ஊ எனக்கத்தி ஆர்ப்பரித்து வர, இவனோ வானொலியில் கேட்டு ரசித்துக் கொண்டிருப்பான். யார் யார் எத்தனை றன்ஸ் அடித்தார்கள் என இவன் சொல்ல அவன் "அவனைக் கண்டேன், இவனைக் கண்டேன். விளையாடினவன் எத்தனைமுறை விழுந்தான்" எனும் மேலோட்ட விபரிப்புகள் சொல்வான்.

எந்தவொரு விடயத்தையும் திலக் ஆழமாகச் சிந்தித்து முடிவெடுப்பான். தேவாவோ மேலோட்டமாகப் பார்த்து "வந்தால் வா போனால் போ", எனத் தீர்மானித்து விடுவான்.

பகற் போசனத்தின் போது திலக் அவன் கண்படத்தக்கதாக அயலில் நிற்கிறார். இடைக்கிடை பார்க்கிறார். நேரெதிராக அடுத்த மேசையில் இருக்கிறார். ஆனால் தேவா நகைச்சுவைக் கதைகளைச் சொல்லி எல்லாரையும் சிரிக்க வைக்கிறாரே தவிர இவரை அடையாளம் கண்டு கொள்வதாயில்லை.

திலகராசா தமது முதற் சந்திப்பை நினைத்துப் பார்க்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ii.

1950 ஆம் ஆண்டு H.S.C வகுப்பு படித்துக் கொண்டிருந்த திலகராசா பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குரிய புள்ளிகள் எடுப்பதில் உள்ள சிரமத்தாலும், வீட்டு நிதி நிலைமை மோசமாக இருந்ததாலும் உத்தியோக வேட்டை தேடி விண்ணப்பங்கள் அனுப்பியிருந்தார்.

நேர்முகப்பரீட்சைக்கும் பயிற்சிக்குமென கடிதம் வரவே யாழ். மெயில் வண்டியில் தம்பியார் வழியனுப்பிவிட 3ஆம் வகுப்பு வண்டியில் பிராயாணம்.

சாவகச்சேரியில் தொடருந்து தரித்ததும் நிறைய மக்கள் நிற்கிறார்கள். இடவசதிகுறையப் போகிறதே எனத் திலக் யோசிக்க, யார் யாரோ ஏறுகிறார்கள். 2ஆம் வகுப்பு வண்டியில் பிரமுகர் யாரோ போகிறார் போலிருக்கிறது. மக்கள் கூட்டம் அவ்விடத்தில் நெருக்கியடித்து கைகாட்டுகிறார்கள், ஆரவாரப்படுகிறார்கள். கடிதம் போடுங்கோ, உடம்பைக்கவனியுங்கோ. திலக் யன்னலூடே தலையைவிட்டு எட்டிப்பார்க்கிறான். வண்டி புறப்படுகிறது. யாரோ ஒரு இளைஞன் கதவோடு நின்று கொண்டு அவர்களுக்கு கையசைக்கின்றான்.

நாவற்குழியில் வண்டி நின்றதும் பத்துப்பேர் மட்டில் அதே ஆளுக்கு பிரியாவிடை கொடுக்கின்றார்கள். தேவா, தேவா என்றழைத்து வண்டியோடு ஓடிவருகிறார்கள். யார் இந்த VIP?

கொடிகாமத்தில் அப்பெட்டியிலிருந்து யாரோ இறங்கி வந்து அவனது பெட்டியில் ஏறுகிறார்கள். சூட்கேஸை மேலே வைத்துவிட்டு இவன் காலருகே உட்காருகிறார். உடனே கால்களிரண்டையும் கீழே விட்டு அந்தக் கோணர் சீற் ஐ அவருக்கே கொடுத்த போது தான் இவர்தான் அந்த VIP எனக் கண்டு கொண்டார்.

"யாருக்கோ இடம் பிடித்து வைத்தனீங்களா?"

"இல்லை இல்லை காலுழைவு அதுதான் தூக்கி வைச்சிருந்தன்"
திலக் தன் கையில் வைத்திருந்த புத்தகத்தை தொடர்ந்து வாசிக்கிறான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன கொழும்புக்கோ"

"யெஸ் யெஸ்"

"முதற்பயணமோ?"

"யெஸ் யெஸ். ஏன் என் முகத்திலை எழுதி ஒட்டியிருக்கோ"

"இல்லை இல்லை. எனக்கும் இதுதான் முதற் பயணம். ஆனையிறவுக்கு இஞ்சாலை தானே தமிழில் பேசலாம்"
வாய்விட்டுச் சிரித்தான் திலக்.

"என்ன வாசிக்கிறியள்"

"பேனார்ட் ஷா எழுதிய 'Arms and the man'."

"அவள் யன்னலூடாக பார்த்துக் கொண்டிருந்தாள் என்பது தானே முதலாவது வாக்கியம்"

வியப்புடன் விழித்துப்பார்த்தான் திலக். தன்னைப்போலொரு புத்தகப்பூச்சியாக்கும் என எண்ணிக் கொண்டான்.

"பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவளை நான் குழப்பக்கூடாதல்லவா. அதனால மூடி வைச்சிட்டன்."

அடக்கமுடியாத சிரிப்பு திலகராசாவுக்கு, கொஞ்சம் இறுக்கம் தளர்ந்தது. பின்னர் பரஸ்பரம் விசாரணை, பேர், ஊர், படிப்பு. இருவருமே அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களத்துக்குத்தான் நேர்முகப் பரீட்சைக்கும் பயிற்சிக்கும் செல்கின்றனர்.

"எங்கே தங்கப்போகிறீர்கள்?"

"இப்போதைக்கு லீலா ஸ்ரோர்ஸ் முதலாளி எங்கள் குடும்ப நண்பர். அவர் காந்தி சின்னத்துரை மாமா, ஸ்ரேசனுக்கு வருவார். அங்கே நின்று கொண்டு அறை தேட வேண்டும்".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானும் கோட்டை ஸ்ரேசனுக்கு முன்னால் தமிழ்க்கடை இருக்காம். ராஜேஸ்வரி உணவுக்கடை. அவையளைக் கேட்டு எங்காவது தங்கலாம்".

இரவுணவுப் பொதிகளை விரித்தனர். திலக் இடியப்பமும் கத்தரிக்காய் பிரட்டல்கறியும். தேவா சோறும், இறைச்சிக்கறியும். "இதென்ன சோத்து மூட்டை. கோழிக்கறியும் நாலுபேருக்கு காணும். வாரும் நீரும் சாப்பிடலாம். தாய்மாற்றை மடத்தனம்!. ஒரு இரவுக்குள்ளே மகனை வளர்த்து விடலாமென்றோ அல்லது சனங்களுக்கு முன்னால கமகமக்கச் சாப்பிட்டு கௌரவத்தை நிலைநாட்டும் போலித்தனமோ தெரியாது"

இப்படித்தான் ஆரம்பித்தது அவர்களது நட்பு. திலக்கின் மாமா, தேவாவையும் அழைத்துச் சென்று பின்னர் நேர்முகப்பரீட்சைக்கும் ஏற்றிச்சென்றவர். அவர்களை தங்களோடேயே தங்குவதற்கும் வசதியும் செய்திருந்தார். ஆனால் அங்கேயிருந்த செல்வச்சிறப்புக்கும் மேல்தட்டு வாழ்க்கைக்கும் அவர்கள் வீட்டு நிலைமைகளுக்கும் ஒத்துவராது. அவர் மனமுவந்து உதவி செய்தாலும் இவர்களின் சுதந்திரத்துக்கும் மனோபாவத்துக்கும் ஏற்றதாக முடியாது. அதற்குரிய தகுதியும் இல்லை, என மறுத்து "வெள்ளவத்தைப் பக்கம் என்றால் நல்லது" என்று விட்டார்கள்.

இன்னொரு சகமாணவனை அழைத்துவந்த கொக்குவில் சின்னத்துரை அஞ்சலதிபர், தான் அறை எடுத்துத் தருவதாகக் கூறியபடி, இருநாட்களின் பின் காந்தி சின்னத்துரையர் இவர்களை வெள்ளவத்தை பிரான்ஸிஸ் தெரு மொங்லாண்ட் எனும் வீட்டில் இறக்கி விட்டார்.

"தம்பியவை இது ஒரு உணவோடு சேர்ந்த விடுதி. நல்ல நல்ல உத்தியோகத்தர்கள்தான் இருக்கிறார்கள். கே.ஸி. நித்தியானந்தன் எனும் பெரியவர் இங்கே தான் இருக்கிறார். பெரிய தொழிற்சங்கவாதியுமாவார். நிறைய அரசியல்வாதிகள் அவரிடம் வந்து போகிறவர்கள். அவர்களோடு தொடர்பு வையாமல் நீங்களும் உங்கள் பாடுமாய் இருந்து கொள்ளுங்கோ. அவருடைய தம்பி சச்சிதானந்தனும் பல் வைத்தியத்துறைக்குப் படிக்கிறார். எல்லாருமாக ஒரு சமையற்காரனை வைத்து சமைப்பித்து சாப்பிடுகினம் அடிக்கடி வந்து போங்கோ. அப்பர் என்னை நம்பித்தான் அனுப்பினவரல்லோ".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுரை கூறிச் சென்றுவிட்டார் அவர்.

அதிஷ்ட வசமாக இருவருக்கும் ஒரு அறை கிடைத்தது. கனகசபை ஐயாவும் சின்னத்துரை ஐயாவும் (G.P.O) பொதுஅஞ்சலகத்தில் வேலை. ஓர் அறையில் இருந்தனர். கனகசபை ஐயாவின் மூத்த மகனும் அங்கே தான் சட்டக்கல்லூரி மாணவனாக இருந்தார். இந்த இளைஞர் குழு நல்ல நட்புடன் விளங்கியது.

மொழியும் தெரியாத அந்நிய நாடொன்றில் நம்மவர் படும் கஷ்டம்போல், கொழும்பும் அந்நிய தேசம்போல், ஆரம்பத்தில் மிலாந்திக் கொண்டு திரிந்தவர்கள் தான். தேவசிகாமணி அடிக்கடி சொல்வான் "திலக்! அங்கை வில்லங்கமாகக் கிடைச்ச வாத்தி வேலையை விட்டிட்டு காற்சட்டை போடுகிற ஆசையில் இஞ்சை ஓடி வந்தது தான் மிச்சம். ஒரு பஸ்ஸிலை ஏற வேண்டுமென்றாலே குத்துக்கரணம், ஓட்டம், பாய்ச்சல், இடி, குத்து என்று சே".

"போகப்போக எல்லாம் சரிவரும். கவலைப்படாதை. பழகிவிடும்" திலக்

"அதுவும் சரிதான், பிறகு ஊரிலை போய் என்ன ஒருவனும் இடிக்கிறான் இல்லை. தள்ளுறான் இல்லை என்று கவலைப்படுவம் போல்' தேவா. திலகராசாவுக்கு வந்த சிரிப்பில் கம்பியிலிருந்து, கைநழுவினாலும் விழத்தேவையில்லை என்பதுபோல பலரின் நெருக்கலில் விழுகை தவிர்க்கப்பட்டது.

பயிற்சிக் காலத்தில் தேவா கொழும்பு நகரை ஓரளவு சுற்றிப்பார்க்கவும்; திலக் G.P.O நூல் நிலையத்தின் உதவிப் பொறுப்பாளர் அமிர்தகௌரி தேவையான நூல்களைத் தேடிக் கொடுக்க வாசித்தும் குறிப்பெடுத்தும் நேரத்தை செலவு செய்வர்.

தேவசிகாமணி, ஊர்சுற்றி அரட்டையடிக்கச் சென்று விடுவான். பின்னர் அவற்றை 'திலக்'க்கு ஒப்புவிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# iii.

கூட்டம் முடிந்து மதிய போசனம் தொடங்குகிறது. தன் மேசையிலிருந்தபடியே தேவாவை உற்றுப் பார்த்தவண்ணம் இருக்கிறார் திலக். ஒரு சந்தர்ப்பத்தில் பார்வைகள் சந்திக்கின்றன. இவரது குறுகுறு பார்வையை அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ சந்தேகம் போலும் அடிக்கடி பார்க்கிறார், முடியவில்லை. உணவு முடியும்போது தேவா அயலே இருந்தவரிடம் இவரைச் சுட்டி ஏதோ கேட்கிறார். நெற்றியைச் சுருக்கி சந்தேகமும் வியப்பும் பிரதி-பலிக்கும் கண்களோடு மீண்டும் மீண்டும் பார்க்கிறார்.

இனியும் சோதிக்க வேண்டாமென்று தலையாட்டி சிறுபுன்முறுவலை விடுகிறார் திலக். அந்த நிலையில் மேசையால் எழுந்து ஓடிவந்து கட்டித்தழுவுகிறான் தேவா. தேவாவின் கண்களில் கண்ணீர் மல்குகிறது. பேச வாயெழவில்லை. "திலக் திலக் என்னடா உன்ரை கோலம். ஏன்ரா வழுக்கை விழுந்தது? ஊளைச் சதையெல்லாம் வைச்சு, எந்தவகையிலும் அடையாளங் கண்டு பிடிக்க முடியவில்லையே. கண்கூட இடுங்கிப்போச்சு".

மெல்லிய புன்முறுவலோடு "றிலாக்ஸ், றிலாக்ஸ் அமைதியாக இரு பிறகு பேசுவம்" எல்லாரும் இவர்களைப் பார்க்கிறார்கள். உடனே அவர்கள் பக்கம் திரும்பி 'இவன்தான் நான் சொன்ன நண்பன். காத்தடிச்ச பலூன் மாதிரி உருளையாய் போனான்'
ஓ! மோர்ஸ் மோர்ஸ்! என்ற கேலிக்குரல்கள் கெக்கட்டம் விட்டுச்சிரிக்கின்றன.

"என்ன சிரிப்பு, தமிழனுக்குக் கிடைக்கக்கூடிய உயர்பதவி P.S பதவி அவருக்குக் கிடைச்சதல்லவா" என்றது ஒருகுரல்.

"மெய்யாகவா" தேவா, திலக்கைக் கேட்டபோது அதற்கும் சிரிப்புத்தான்.

மறுநாள் இருவரும் கிப்ளிங் அன்ட் எவான்ஸ் சந்தியிலிருக்கும் "குவிஸ்நொஸ்" பிறஞ்சைஸ் உணவுக்கடையில் சந்தித்துக் கொண்டனர். தேவசிகாமணி மெனுவைப் பார்த்து, தானே தெரிவு செய்து கொண்டு திலக் விருப்பை அறிய எழுந்து நின்றான். "ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மவ்வின் மாத்திரம் போதுமென்று சொல்ல "சும்மா இரு" என அதட்டி விட்டு "ஒரு பிளாக் அங்கஸ், மற்றது ரேர்க்கி றான்ச் உடன் ஸ்வெஸ் சீஸ்

'What are the toppings' என்னென்ன போடுறது? ஸ்பானிஷ் குயில் மிழற்றியது.

தக்காளி, வெங்காயம், காளான், இற்றாலியன் சோர்ஸ், பெப்பர்ஸ், லெற்றியூஸ், பிக்கிள் இன்னும் எதெது போடலாமோ அதது. தேவாவின் விளையாட்டுத் தனமான பேச்சுக்கு சமானமாய் அந்தப்பெண்ணும் சிரித்து சந்தோஷமாய் ஆயத்தம் செய்தாள். நகரும் அவணில் வைத்ததும் அது மெல்ல மெல்ல வெந்து மொறு மொறுக்க, மறுபக்கம் வந்து சேரவும் கடதாசியில் சுருட்டி தட்டில் வைக்கிறாள்.

"அங்காலை ஊறுகாய் வகைகளும், கறுப்பு, பச்சை ஒலிவ் உம் இருக்கு. மற்றப்பக்கத்திலை கொக்கோ கோலா நீங்களே நிரப்பி எடுத்துப் போங்க," என்றாள் அந்த நங்கை.

"டே மச்சான் விருப்பமானதை எடு, முந்தியப்போலதானோ அல்லது கனடா வந்ததும் மாட்டிலை இறங்கிற்றியோ?

"எனக்கு கொஞ்சம் கொலஸ்ரோல் பிரச்சினை உண்டு. அதோடை 3, 4 வருடம் கடைச்சாப்பாட்டை விட்டிட்டன். சரி சொல்லிற்றாய், நான் வான்கோழியை எடுக்கிறன். நீங்கள் மாட்டை எடுங்கோ"

"ஓ! நீ அப்படியே இருக்கிறாய். நான் என்றைக்கு கப்பலிலை கால் வைச்சனோ அன்றிலிருந்து உலகத்திலே உயிரோடு பிறந்ததெல்லாம் தின்னப்பழகிற்றன்'

"மனிசரைத் தவிரத் தானே"

"டே, உனக்கும் பகிடிவிடத் தெரியுது" கெக்கட்டம் விட்டுச் சிரிக்கினம்.

"பார், கிழடுகள் இரண்டும் கெக்கட்டம் விட்டுக் கொட்டம் அடிக்குதுகள். கலி காலம் தான்" என்று பெருமூச்சு விடுது அங்கே சாப்பிட்டுக் கொண்டிருந்த இளசு ஒன்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் திலக், குடும்பம் என்னமாதிரி? பிள்ளைகள்?"

திலக் சிறிது நேரம் பேசாதிருந்தார்.

"இலங்கையிலை கடைசியாக மட்டக்களப்பில் தான் P.S. ஆக இருந்தனான். ஓய்வு பெற்றுக்கொண்டு கொழும்புக்கு வந்திட்டன். யாழ்ப்பாணம் போகமுடியாது. பரவலாகக் குண்டு போடுகிறான்கள். வளவையும் வீட்டையும் பார்க்கட்டுமென்று எங்கடை வீட்டிலை ஒருபகுதி வாடகைக்கு கொடுத்தது. ஆனால் போறதும் கஷ்டம். வீடு இருக்கிற நிலையம், எல்லாப்பக்கத்தாலும் தாக்கப்படும்போது அகப்படக்கூடியது. அப்படி ஒருநாள் வாடகைக்கு இருந்தவனின் பக்கத்திலை விழுந்து அவனது மனைவியும் குழந்தையும் இறந்து போய்விட்டினம். அதனாலை கொழும்பிலை நிண்டிட்டம்".

"நான் முதல்முறை கொழும்பிலை இறங்கினபோது, எங்களோடை படிச்ச உபாலி ஜெய சேகராவைச் சந்திச்சன், அவனோடை இரண்டுநாள் நிண்டன். அப்ப சொன்னான் நீ தலைமைத் தபாலதிபராக பொலநறுவையிலை இருப்பதாக, ரெலிபோனில் தொடர்பு கொண்டன் நீ லீவிலை யாழ்ப்பாணம் போட்டியாம்"

"1985இல் மகன் சென். ஜோன்ஸ் கல்லூரியில் படிச்சுக் கொண்டிருந்தவர். நிலைமை மோசமாகிறதென்று படிக்காட்டிலும் பரவாயில்லை என்று கூட்டிவந்தனான்."

அப்போது தேவா "நான் அடுத்தமுறை வந்தபோது, அவனுக்கென்ன பேர்... அந்த அஞ்சற் திணைக்கள வழங்கல் பிரிவின் அத்தியட்சகர், எங்களுக்கு அடுத்த பாச் உன்னிடம் குறிப்புகள் வாங்குவான்".

"யார் கனகசுந்தரமோ? பாவம் அவன் ஸ்ரோக் வந்து போயிட்டான்".

"ஐயோ பாவம்! பச்சைத்தண்ணிப் பாவி. அந்தக்காலத்தில் மாஸ்டர் மாஸ்டர் என்று வழிஞ்சு கொண்டு திரிஞ்ச சிற்றூழியர்கள். மொழிப்பிரச்சினை வந்ததோடு எந்தத் தமிழ் அலுவலரை மதிக்கிறான்கள்? எகிறின கதைகளும், எந்த நேரமும் கத்தி பாயுமோ என்ற பயத்தோடு தான் சிற்றூழியர்களோடு வேலை செய்வது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னவன் அவன்தான். உமக்கு கிழக்குமாகாணப் பொறுப்பதிகாரி பதவி கிடைச்சிருக்கென்றும் சொன்னவர்.

“அதிகமாக அஞ்சலதிபர்களுக்கு பாரிசவாதம் தான் பரிசு. எவ்வளவு பொறுப்பும் எவ்வளவு மன அழுத்தமும். எங்கடை கையால கத்தை கத்தையாக காசு எண்ணுவம், காசு உருண்டு கொண்டிருக்கும். ஆனால் வீட்டுச் செலவுக்கு ஒருசதம் இரண்டுசதம் என எண்ணி எண்ணித்தான் செலவு செய்ய வேண்டும். என் மகன் முரளி அங்கை இருப்பதும் ஆபத்துத்தான். அவரைக் கனடாவுக்கு அனுப்பிவிட்டன். மகளுக்கு கனடாவிலேயே மாப்பிள்ளை பார்த்து அனுப்பினனான். என்னையும் தாயையும் எடுத்திட்டான். பத்துவருசம் ஆச்சு. தேவா நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்?”

“ஓ, கப்பல் வாழ்க்கை அலுத்துப் போச்சு. ஊரிலை ஒருவருமில்லை. கூடிய சனம் இங்கே தான் இருக்காம். இனசனம் எங்கெங்கோ தெரியாது. ஊர் சுடுகாடாய் கிடக்குதாம். சுளை சுளையாய் பணம் இருக்கு வெளிநாட்டு வங்கிகளில், அதைக் காட்டி சுயசம்பாத்தியத்தோடு நிரந்தர வதிவுரிமையாளராக இங்கே இறங்கி எனக்குத் தெரிந்த கப்பல் கம்பனி காரனோடு நிற்கிறன். வந்து ஒருமாதம் தான். பிடிச்சுக் கொண்டால் வீடெடுத்து நிற்பது இல்லாவிட்டில், உலகம் பரந்தது தானே.

## iv

அடுத்த சில நாட்களில் திலகராசாவும் தேவசிகாமணியும் அடிக்கடி சந்தித்து ஊருலாத்துவார்கள். ஒருநாள் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பெரியவீடு. மருமகள் ஒரு சட்டத்தரணி. அத்தோடு மனித உரிமைபேணும் சங்கத்தின் இயக்குனர் சபைத் தலைவி. மகன் டாக்டர் - நரம்பியல் நிபுணர். இரு குழந்தைகள். ஒருபகுதியில் திலகராசாவும் மனைவியும் மறுபகுதியில் இவர்கள். மேல்வீட்டில் திலகராசாவுக்கு இரண்டு அறைகளும் ஒரு ஹோலும், அவர்களுக்கு 3 அறைகள், கீழே ஒரு அறையில் திலகராசாவின் மனைவி. நிலக்கீழ் அறையில் வீட்டுத்தியேட்டர், பந்து விளையாடல் முதலிய விளையாட்டுச் சாமான்கள். ஆடைகள் துவைக்கும் இயந்திரம் எனப் பலதும் பத்தும்.

நடுவில் வரவேற்பறை, சாப்பாட்டறை, குசினி, குடும்ப அறை, கணப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என. வேலைக்கும் போய் எப்படி வீட்டை நிர்வகிப்பது?. வாரத்தில் இருநாட்கள் வீடு சுத்தம் செய்ய ஒரு பெண் வருவாள். அதைவிட தாய்க்கு குளிக்க முழுக வார்க்க துணிதுவைக்க சுற்றாடலை துடைத்து அழகாக்க, வாரத்துக்கு 3 நாட்களுக்கு இரண்டு மணிநேரம் அரசாங்கம் அனுப்பிய பயிற்றப்பட்ட பெண் வருவார். சமையலுக்கு பன்னாட்டுச் சமையலும் தெரிந்த ஒரு பெண் வந்து அவரவர்க்குத் தேவையான உணவை இருநாட்களுக்கு போதுமானதை செய்து வைத்துப் போவார். இவர்களுக்கு அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட குறைந்த வேதனமாகிலும் கொடுக்கப்பட வேண்டும். எடுக்கிற வேதனம் இப்படிப் போகத்தான் சரி.

“அதுசரி, சுந்தரிக்கு என்ன நடந்தது?” “கனடா வந்து அவ வலும் விரக்தியாகத் தான் இருந்தவ. வயது போனவர்களுக்கு இங்கே பலமன்றங்கள் இருக்கின்றன. நாங்கள் இருவரும் நல்லாய் போய் வந்தோம். கூட்டங்கள், விளையாட்டுக்கள், கலை நிகழ்ச்சிகள் என நடைபெறும். சிற்றுண்டிகளும் கோப்பி முதலியனவும் தருவார்கள். புளோறிடா, ஜமேக்கா, கியூபா என சுற்றுலா சேர்ந்து போவோம். மாதம் ஒன்றாக ஒன்ராரியோ சுற்றுப்பிரயாண இடங்களுக்கும் போய்வருவோம். மகன் வீட்டுக்கு வந்த பின் சரியான தூரம், பிரயாண வசதிகள் குறைவு. குடிமனைப்பகுதியல்லவா. யாராவது காரில் தான் கொண்டுபோய் விட வேண்டும். குளிர்காலம் வந்தால் வீட்டுக்குள் தான். செத்தவீடு, கல்யாண வீடு போல பல அழைப்புகள் வரும். ஒன்பது மாதம் வெளியே காலடி வைக்க முடியாது. என்ன காரணமோ தெரியாது. அவவுக்கு மெலிவும் இயலாமையும் வந்துவிட்டது. சோர்வு அதிகமாகி நடக்க முடியாமலும் வந்து விட்டது”.

முதியோர் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கலாமென்றால் வீட்டை விட்டுப் போகமாட்டாவாம். பேரன்மாரின் சத்தத்தைக் கேட்பதே மகிழ்ச்சியாம். ஓம்! திறமையான வைத்தியர்கள், நரம்பியல், மனநல வைத்தியர்கள் என எல்லாரும் பார்த்துப் போகிறவர்கள்.

சுந்தரியைப் பார்க்க என திலக் தேவாவை கூட்டிச் செல்கிறான். மெல்ல நிமிர்த்தி தலையணையில் சார்த்தி இருத்த, “எப்படி தேவா இருக்கிறியள்”.

“எங்கடை சுந்தரிதானா என்று பார்க்கிறன். அந்தநாளையில் சறோ-ஜாதேவி மாதிரி என்றும் இவன் லக்கி என்றும் சொல்லுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையா?" அந்த வாடி வதங்கிய முகத்திலை மகிழ்ச்சியும் நாணமும் ஒருங்கே தவழ்கிறது. சிரித்துக் கொண்டே

"நீங்கள் அப்படியே இருந்திட்டியள். பிறகு வேற கலியாணம் ஏதாவது"... கெக்கட்டம் விட்டுச் சிரிக்கிறான் தேவா. திலக்கும் புன்முறுவல் பூக்கிறான்.

"பாருங்கோ சுந்தரி, இந்த மொட்டைத்தலையன் உங்களைப்பற்றியே கவலைப்பட்டுப்பட்டு சந்தோஷமில்லாமல் வாழ்கிறான். நான் சிறகடித்து உலகமெல்லாம் சுத்தி வருகிறேன். ஒவ்வொரு துறைமுகத்திலும் இறங்கி, பசி இருந்தால் தீர்த்துக்கொண்டு புறப்பட்டு விடுவேன். மூன்று துறைமுகங்களில் நண்பிகள் இருக்கினம். பிரியும்போது ஒருதுன்பமுமில்லை. வேறென்ன வேண்டும். சில சமயங்களில் மட்டும் ஒருபிள்ளை இருந்திருக்கலாமோ என ஏங்கும். அவ்வளவு தான். பாருங்களேன் இவனுக்குக் கவலையிலே வழுக்கை போட்டிட்டுது. நான் அப்படியே இருக்கிறன்."

"நீங்களும் ஒன்றும் மாறவில்லை. அப்படியே வெளிவாய்தான்" சிரிக்கிறாள் சுந்தரி.

"இஞ்சாருங்கோ இவரும் இங்கே இருக்கட்டுமன். அவருக்கும் நாங்கள் தானே"
திலக் தேவாவைப் பார்க்கிறான்".

"அது சரிவராது. முதலிலை இது உங்கடை வீடில்லை. அடுத்தது சுந்தரி ஒரு இல்லத்தரசி போல நடக்கமுடியாது' தேவா.

"நான் நினைச்சதைத் தான் அவவும் சொல்கிறா. இங்க வீடு எங்கள் பொறுப்புத்தான். அவையள் ஏதோ விடுதி மாதிரித்தான் வந்து போவினம். சிலசமயம் இரவுச்சாப்பாட்டில் கூட சந்திக்கமாட்டினம். எதுக்கும் நான் முரளியோடை கதைப்பன். அவன் என்ன சொல்றது ok'

டிலிக்கு நல்ல சந்தோஷம், "அப்பாவும் அம்மாவும் சந்தோஷமாயிருந்தால் காணும்" என்று மருமகள் சொன்னாவாம்.

"நானொரு நாடோடி, காடோடி. ஒரு கட்டுக்குள் நின்று பழக்கமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச நாளைக்கு நின்று பார்ப்பம். ஊர்ச்சங்கம், பழையமாணவர் சங்கம் என்றெல்லாம் வைக்கிறவையாம். பார்த்து மனம் அமைதியானால் நின்றிடுவன். அல்லாவிட்டால் கடைசிக் காலத்தை காசி, இராமேஸ்வரம் என்று கழிக்க வேண்டியது தான். கடகடவெனச் சிரித்தார் திலக். "நீயாவது காவி உடுப்பதாவது? இத்தனை வருடத்தில் எத்தனை நாள் போயிருப்பாய்'

"கதிர்காமத்துக்கு ஒரு நாள் போயிருந்தன். அங்கை எங்கடை... இஞ்சைபார் சுந்தரியின்ரை ஆவலை. அரைவாசி வருத்தம் மாறிவிட்டுதோ"

"சொல்லுங்கோ சொல்லுங்கோ" சுந்தரி.

"என்ன சொன்னனான் அ, மறந்துவிட்டன்."

"இப்படித்தான் ஒன்றுக்குளாலை ஒன்று என்று புழுகித்தள்ளிக் கொண்டே போறது. பிறகு எங்க விட்டனான் என்று வாறது" திலக்.

"திலக், ஒருக்கா வெளியிலை போட்டு வருவமோ? தம் அடிக்க வேணும்" சுந்தரி முகத்திலை ஏமாற்றம்.

'இஞ்சைதானே இருக்கப் போறன். கப்பல் கதையெல்லாம் அவிழ்த்து விடுவன் பாருமன். புகைப்பதிலை மனம் போனால், பிறகு ஒன்றும் செய்யத் தோன்றாது.

"சரி சுந்தரி உந்த ஆறு மட்டும் போய் கொஞ்ச நேரம் நின்றிட்டு வாறம். சுந்தரி மகிழ்ச்சியோடு விடை கொடுக்க, திலக் மெல்லக் கட்டிலில் சரித்து விடுகிறார். மெலிந்த கைகளால் அவன் கரங்களைத் தடவி கருணையோடு பார்க்கிறாள். தேவாவின் வருகை அவனிடமும் மாற்றத்தை உண்டாக்குகிறது. வழக்கமாக கடமையைச் செய்து போட்டு ஒரு புன்முறுவல்கூடக் கொடுக்காது பாரா முகமாகப் போய்விடுவான். இன்று தன் கரங்களைச் சிறிது அழுத்தி ஒரு அறிசெயல் காட்டிப் போகிறான். அவள் உள்ளத்தில் உற்சாகம். நிம்மதியாக நித்திரை வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V

ஆற்றோரத்தில் போட்டிருந்த வாங்கில் இருவரும் அமர்ந்து கொண்டனர். "தேவா, எனக்குத் தெரியும், நீ ஏதோ சொல்லவந்து நிறுத்திப் போட்டாய். சுந்தரிக்காகத் தானே.... அல்லது எனக்கும் சொல்லக் கூடாதோ". பெருமூச்சுசொன்று பறந்தது. தேவாவின் முகம் வழக்கத்தைவிடச் சிறிது சோகமாகவும் ஆழ்ந்த யோசனையுடனும் காணப்பட்டது.

"திலக், என்னை மன்னித்துவிடு. சிலவேளை நீ மறந்து போன காரியங்களை நான் நினைவூட்டி துன்பப்பட வைப்பேனோ என அஞ்சுகிறேன். ஆனாலும் சொல்லாமல் இருக்கமுடியவில்லை".

"சே, சே, நான் எதையும் மறக்கவில்லை. சிறுவயது ஞாபகங்கள் துல்லியமாகத் தெரிகின்றன. நீ அறையில் குண்டூசி ஒன்றைத் தொலைத்துவிட்டு, இதைத் தேடி எடுக்காமல் விடமாட்டன் என்று நான் சிரித்து சிரித்து அதைரியப்படுத்தவும் நீ பிடிவாதமாக ஒருநாள் முழுவதும் மினக்கெட்டு கட்டில்சட்டங்கள் பொருத்தப்பட்ட நீக்கலுக்குள் கண்டுபிடித்ததைக்கூட மகாமகிழ்ச்சியோடு நினைப்பேன். பரவாயில்லை சொல்லு சொல்லு."

"சிறாணியின் கணவன்தான் அஞ்சல் தொலைத்தொடர்புத்திணைக்கள அத்தியட்சகராம்'.

"கேள்விப்பட்டன். ஆனால் அவன் D.S ஆக இருந்த போது சந்திச்சன். அதுக்கென்ன, அவன் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவன். நாங்கள் அவனைவிடப் புத்திஜீவிகளாக இருந்தாலும் அடிமை வர்க்கத்தவர்கள் தானே. நீ சொல்லு'

"முதல்முறை போனபோது உபாலியோடுதானே நின்றன். அப்ப குணசேகரா டி.எஸ். தான். கதிர்காமம் போனம். "அங்க வாறார் எங்கடை டி.எஸ். எங்களிலும் ஒரு வருடம் யூனியர். நான் தொழிற்சங்கத்தின் தலைவர் என்று நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதவியுயர்வுகள் தரப்படவில்லை. இவன் பிரதமரின் சொந்தக்காரன். டப்டப் என்று எல்லாப் பதவியுயர்வும் கிடைச்சு வருகுது" என்று உபாலி சொல்ல நான் திரும்பிப் பார்த்தேன்". அப்போது சிறாணி என்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றுப் பார்த்தாள். அடையாளங்கண்டதும் முகம் ஒருமுறை இருண்டு பின்தெளிந்தது. ஒரு புன்முறுவல் செய்தாள். கைகுலுக்கினோம்.

“குணா, இவரைத் தெரிகிறதா? இவர் தேவசிகாமணி. நமது கலியாணத்துக்கு வந்திருந்தாரே”. என்றாள் சிறாணி.

“ஓ! இவர்தான் உங்கடை P.M ஆயிருந்த திலக் உடன் உங்க வீட்டுக்கு வாறவர் நினைவு வருகிறது மனிசா. man.

சம்பிரதாயக் கதைகள் முடிந்ததும், தொழிற்சங்கம் விடயமாக உபாலியுடன் பேசத் தொடங்கவே, கித்துள் கட்டி பார்ப்பது போல கடையருகே சிறாணி போக நானும் பின் தொடர்ந்தேன். சிறாணி எனது வாழ்க்கையைப் பற்றிக் கேட்டாள். கலவரத்துள் நடந்ததெல்லாம் தனக்குத் தெரியும் என்றாள். **பண்படாத மக்களும் பதவியாசை பிடித்த அரசியல் வாதிகளும் இருக்கும் வரை நமது நாட்டுக்கு சாபக்கேடுதான்** என்றாள். பின் தயங்கித் தயங்கி, “திலக் எப்படி இருக்கிறார். குழந்தைகள் இருக்குதென்று கேள்வி. விவாகம் பேசிச் செய்ததா அல்லது காதலா?'

“வில்லங்கப்படுத்தித்தான் கல்யாணம் செய்வித்தவை. இன்னொரு குடும்பத்தை வாழவைக்க வேண்டுமென்றுதான். மிகவும் கஷ்டப்பட்ட ஏழு பிள்ளைகள் உள்ள குடும்பம். அவ்வளவு படிக்காத பிள்ளை. வீட்டுக்கு மூத்தது. நல்ல குடும்பப்பொறுப்புள்ள பெண். அவன்மீது உயிரையே வைத்திருக்கு.”

அவள் கண்களில் சோகம் பரவியது. மெல்லக் கண்கலங்கிச்சு. மெல்லக் கேட்டாள்.

“என்னை மறந்திருப்பாராக்கும்” தொலைத்துவிட்ட ஒரு பொருளுக்காக அழும் குழந்தையின் உணர்வு முகத்தில்.

“இருக்கமுடியாது அவன் ஆழ்ந்த சிந்தனைக்காரன். இப்பவும் வருந்திக்கொண்டிருப்பான் தேவா.

“ஒருமுறை நானும் திருகோணமலைக்குச் சென்றிருந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கேதான் திலக், குடும்பத்தோடு இருக்கிறானாம். போய்ப்பார்த்து வருவோமா" என்று கேட்டார் குணா. அப்பா திலகராசா பற்றி அடிக்கடி கதைப்பார். தனக்குக் கீழ் வேலை செய்தவர், புத்திசாலி. ஆங்கிலத்தில் சொல்வதைத் தமிழுக்குப் பெயர்த்து துண்டுப் பிரசுரம் செய்து கூலிச் சனங்களுக்கு கொடுப்பார். நல்ல அரசியல் அறிவு. மாலையில் வந்து செஸ் விளையாடுவார். பிள்ளையளுக்குக்கெல்லாம் உடன்பிறந்த அண்ணன் மாதிரி என்றெல்லாம் சொல்லிவைத்தவர். அப்பாவுக்கு எல்லாம் தெரியும்தானே. யாராவது குணாவுக்கு ஏதும் சொல்லி சந்தேகம் கொள்ள வைத்தாலும் என்று முதலே சொல்லிற்றார். அதாலை இவரும் நட்புடன் தான் இருந்தார்" சிறிது நேரம் மௌனமாயிருந்தவள் தொடர்ந்தாள்.

....ஆனால் எனக்கு நினைத்தவுடனேயே கண்ணீர் வரும். கண்டுவிட்டாரானால் என்ன அப்பாட்டைப் போகவேண்டுமோ. வாறா வார விடுமுறைக்குப் போவம் என்பார். திலக் வீட்டுக்கு வரச் சொல்லிக் கேட்கவே, அவர் குடித்தனம் பண்ணுவதைக்கண்டால் எப்படிப் பிரதிபலிப்பேனோ என்ற அச்சத்தில் "வேண்டாம் வேண்டாம் காலங்கிடக்கிற கிடையிலை, எங்களையும் அவங்களையும் கண்ட துண்டமாக்கிப் போடுவான்கள். எனக்கு தமிழன்கள் என்றாலே வெறுப்பு. இனி ஒரு தொடர்பும் வேண்டாம். உத்தியோக ரீதியில் நீங்கள் வேண்டுமென்றால் போங்கள்" என்று மனச்சாட்சிக்கு விரோதமாய் நடுங்கி நடுங்கிச் சொன்னன். பாவம் அவர்.

"தமிழன் என்ற சொல்லுக்கே இப்படி நடுங்குகிறீர். இதுதானோ கண்டியின் இராசபரம்பரை" என்றார்.

"நானும் 85 ஆம் ஆண்டு கப்பலேறும் போது கண்டது. அதன்பின் லீவே எடுக்காமல் திரிவது தான் யாருக்காக ஊருக்குப்போக வேண்டும். இந்தமுறை மலைக்குப் போய் அவனைச் சந்திக்க வேணுமென்று தான் நினைச்சன். ஆனால் நாளைக்கே கப்பல் புறப்பட்டுவிடும். போகவர நேரங்காணாது." என்றான் தேவா.

இப்படிப் பேசிக்கொண்டே இருக்கும் போது குணாவும் உபாலியும் ஏதோ வாய்த்தர்க்கத்தில் ஈடுபவதைக் கண்டு அங்கே போய் விட்டோம்".

கதையிலேயே ஆழ்ந்து போயிருந்த திலக் அதன் சோகத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கமுடியாமல் அச்சிற்றாற்றில் ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

திலக்! திலக்!

நிமிர்ந்து பார்த்தான். கீழே கொட்டிக் கொண்டிருந்த கண்ணீர் கன்னம்வழியே வழிந்தது. தன்னை சுதாரித்துக் கொண்டே

"அவள் சந்தோஷமாய் இருக்கிறாளா? அப்படியானால் எனக்கும் மகிழ்ச்சி தான்"

"மன்னிச்சுக் கொள்ளடா திலக். நான் சொல்லாமல் மறைத்து விட்டேன். அவள் முன்னிலும் அழகாக தாய்மைப் பொலிவுடன் இருந்தாள். பழைய குறும்பு, கலகலப்பு ஒன்றும் என் முன்னால் வெளிப்படவில்லை. உடலால் அவனோடையும் மனதால் உன்னோடையும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என நினைக்கிறேன்.

தேவசிகாமணி சிறிது நேரம் மௌனமானான்.

"சொல்லு, சொல்லடா' - திலக்.

ஒரு வசனம் சொன்னாள். ஒரு கேலிச் சிரிப்போடை, ஒரு வெறுப்புக்கலந்த ஒலியோடை. இப்ப, நான் ஒரு பிரதம மந்திரியாய் வந்தால் எப்படி நடக்கவேணும் என்று விறைச்ச தலையோடை, நிமிர்ந்து, வலிந்த ஒரு புன்முறுவலோடை பயிற்சி செய்யுறன். குணாவுக்கு 24மணியும் வேலை நினைப்பும் அரசியல் நினைப்பும். 2 மணி சென்றாலும் படுக்கைக்குப் போகமாட்டார். விருந்துபசாரங்களின் போதுதான் அவருக்குப் பக்கத்திலை இருக்க இடங்கிடைக்கும். போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகப் போகிறார். அமைச்சர் பதவி அவரை நாடிவரும். 15 வருடத்துள் நான் பிரதமமந்திரியின் மனைவியாகி விடுவேன். யார் கண்டது? அடுத்ததாக நானே பிரதமமந்திரியுமாக-லாம்" என்று சிரித்ததோடல்லாமல்" அதனால் பேராதனைப் பூந்தோட்டமும் தொங்குபாலமும் உங்கள் நினைவுகளும் பசுமை நிறைந்த கனவுகளாக என்றும் வந்து போகும்'. சலிப்பு விரக்தி கலந்த குரலில் சொன்னாளப்பா'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனத்தைக் கலைப்பது போல,
"திலகராஜ்! அங்கே சுந்தரி காத்துக் கொண்டிருப்பாள். ஆழ்மன வியாபாரத்தை விட்டிட்டு வெளியே வா. நானுந்தான் மூன்றையும் கொடுத்திட்டு, அத்தகைய ஒரு வாழ்வைத் தேடாது, நனவு நிலையில் வாழ்கிறேனே. பாவம் சுந்தரி, ஒருவீட்டில் இருந்தும் வந்திருந்து நாலு வார்த்தை கதைக்கத் தன் மகனுக்கு நேரம் இல்லையே என்ற கவலையே பெரிய கவலை. அத்தோடு நாமும் பிந்திப் போனால்.... எழும்பு, எழும்பு.

# vi

வரும்போது இருவரும் பேசிக்கொள்ளவில்லை. தத்தம் சிந்தனையுள் ஆழ்ந்து வந்தனர். சுந்தரி இவர்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். கணவனைக் கண்டதும்,

"என்னங்கோ, முகமெல்லாம் சிலிர்த்துப் போய் இருக்கு. தேவா ஏதும் ஏசிக் கோபப்படுத்தினவரோ" சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"இந்த ஆற்றோரம் எனக்கு நல்லாய் இருந்தது. ஸ்மோக் பண்ணியபடியே சிறுவர்கள் படகோட்டி (Jet Ski) விளையாடுவதை பார்த்திருந்தேன். இந்த பபாவுக்கு அந்தக் காற்று உதைச்சு முகம் சிவந்து போச்சு. தஸ்ஸு புஸ்ஸு என்று மூச்சு விடுகிறாள். குளிர்நாட்டிலை வாழ்ந்து பழகிய இவனுக்கே இப்படியென்றால் எனக்கு எப்படி இருக்கும்? விளைஞ்சு போய் அரக்கி அரக்கி வாறான்".

சிரித்துக் கொண்டே மூவருக்கும் கோப்பி போடப் போகிறார் திலகராசா. "பகிடி பண்ணாதையுங்கோ. பாவம் அவர். ஆன தேகப்பயிற்சி இல்லை. நான் மடங்கியதோடை உந்தமாதிரியான ஓய்வு நேரத்தைக் கைவிட்டு விட்டார். வழக்கமாகவே வாசிப்பு, தொலைக்காட்சி, ஏதும் கூட்டம், கடைத்தெரு அவ்வளவு தான். முந்தி அவர் மாட்டன் என்றாலும் நான் இழுத்துக் கொண்டு முதியோர் சங்கங்களோடைதான் பொழுது போக்கு. இப்ப தூர இடத்துக்கு வந்து விட்டதாலை அதுவும் போச்சு".

காப்பியைக் கொடுத்தபின் "தலைவலிக்குது நான் கொஞ்சநேரம் சரிஞ்சு கிடந்திட்டு வாறன், தேவா, நீ பேசிக்கொண்டிரு. மக்கள் பேரன்மார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தால் போலே சாப்பிட்டுப் போகலாம். நான் கொண்டே விடுறன்'.

"ஓ கே! சுந்தரியை எழுப்பிச் சமைச்சுத்தர வைக்கிறதுதானே இனி என் வேலை. ஒரு மாதத்திலே எழும்பி நடப்பா பாருமன். நீயும் பத்து றாத்தல் குறைவாய்"
சுந்தரியின் சிரிப்பு நீண்டநாட்கள் கேளாத ஒன்று.

கட்டிலில் நீண்டு படுத்துக் கொண்டே சென்ற காலத்தில் மூழ்கிப்போ-னான் திலகராசா. அஞ்சல் அலுவலர் பயிற்சி முடிந்ததும் பொல்கொல்லை என்னும் இடத்துக்கு அவனும்; சிலமைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்துக்கு தேவசிகாமணியும் நியமனம் பெற்றார்கள். அங்கே விக்கரமநாயக்கா என்பவர் அதிபராக இருந்தார். அருமையான மனிதர். எடுத்த எடுப்பிலேயே உதவியதிபராக வந்த திலக் அவரது கணிப்புக்குரியவரானார். அவர் எந்த இனப்பாகுபாடும் காட்டாதவர். தமிழ் தபால்காரரோடும் சரிசமமாகப் பழகுவார். 'திலக்' கின் புத்திக்கூர்மையை அவர் வியந்தார். சில சமயங்களில் வீட்டுக்கழைத்து சில ஆங்கில அறிவித்தல்களைத் தமிழில் பெயர்ப்பிப்பார். அது துண்டுப் பிரசுரங்களாக அக்கிராமத்து தமிழ் பேசுவோருக்கு வழங்கப்படும்.

ஒருநாள் சில ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவிகள் அங்கே வந்து அதிபரோடு பேசிக் கொண்டிருந்தனர். திலகராசா அழைக்கப்பட்டார். தம்பி என்றுதான் அழைப்பார்.

"இவர்கள் ஆசிரிய மாணவிகள். ஏதோ ஆய்வுக் கட்டுரை எழுதுகிறார்களாம். அஞ்சல் திணைக்களம் பற்றி எழுத வேண்டுமாம். நீர்தானே புதிதாக படித்தவர். ஒருக்கால் இவர்களுக்கு உதவி பண்ணும். அவர்கள் ஏதும் தருவார்கள் என்று கண்ணைச் சிமிட்டினார்'.

இவனுக்கு உதறல் எடுத்தது. சிங்கள நங்கையர் - அவர்களது அழகும் பந்துக் கொண்டையும் எதற்கும் துணிந்த அச்சமற்றவர்கள் - எனவும் சிறிது காலத்துள்ளேயே கண்டு கொண்டவன். அதற்குள் அவர்கள் காச்சு மூச்சென்று கேள்விகள் கேட்கத் தொடங்கிவிட்டனர். பயிற்சிக்காலத்தில் சிறிது எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொண்டானே தவிர, கவுண்டருக்கு வருகிறவர்களுக்கான என்னவேணும், எத்தனை சதத்துக்கு என்பன மட்டுமே தெரியும். 'மே வறேங்' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபால்காரனுக்கு சொல்வது போல் சொல்லலாமா? "ஐயா எனக்கு அந்த அளவுக்கு சிங்களம் தெரியாதையா பிளீஸ்".

"ஓ! அது ஒரு பிரச்சினை. யாருக்காவது இங்கிலிஸ் அல்லது தமிழ் தெரியுமா? கேட்டார் விக்கிரமநாயகா.

"சிறாணியைக் கேட்பமா சேர். அவ எங்கடை நண்பி சேர்"

''HSC யல்லவா படிக்கிறா. எந்த நேரமும் படிப்புத்தான். கேட்டுப் பாருங்கோ அவ ஓம் என்றால் சரி'

எங்கள் குழுவில் ஐந்து பேர் சேர். 6 மணிக்குமுதல் விடுதிக்குப் போக வேண்டும். அதற்குப் பின் ஆயின் நீங்கள் அங்கதான் வரவேணும்.

"சரி நாளைக்கு வாங்கோ. முற்றுச் சொல்கிறேன்". என்றான் திலக்.

அன்றிரவே ஒரு அட்டவணை தயாரித்தான். அந்தக்குழுவில் ஐந்து பேர் இருந்தமையால் ஐந்து தலையங்கங்களில் கீழ் கட்டுரையை வகுத்தான். பிரதமமந்திரியின் கீழிருந்து வரைபடமாக வேலைத்திட்ட அட்டவணை சாதாரண பிரஜைகள் வரை எப்படி போகிறதெனவும் அவர்களிடமிருந்து பார்சல் கடிதம் எப்படி உரியவரிடம் போகிறது, வெளிநாட்டுக்கு எப்படிப் போகிறது, வரைபடங்களின் கீழ் புகையிரதம், விமானம், பஸ், மிதிவண்டி என பிறிஸ்டல் மட்டையில் செய்து வைத்துவிட்டான்.

செய்துவைத்ததை எல்லாம் அழகுபார்த்து திருப்திப்பட்டுக்கொண்டு மகிழ்ச்சியாகப் படுக்கும் போது சாமம் 1:00 மணி. ஆசிரியர் தொழிலையும் வகுப்பறையையும் மாணவர்களையும் இழந்த தன்னிலைக்காக வருந்திய துக்கமே மேலோங்கி நின்றது.

மறுநாள் மாணவர் வருமுன் திலகராசாவை அழைத்து, "சிறாணி 6 மணிக்குத்தான் ரியூசன் முடிந்து வருவா. அவ உங்களையும் கூட்டிக்கொண்டு கலாசாலைக்குப் போறாவாம். 7.30 மணிக்கு வந்து ஓய்வெடுத்து பின் படிக்க வேண்டுமாம். இறுதியாண்டு பல்கலைக்கழகப் பிரவேச பரீட்சையல்லவோ ஆனாலும் உதவி செய்யப் பின்னிற்கமாட்டா. உமக்கு 'சிவ்ற்' முறையென்றால் பெரராவோடு மாற்றி எடும்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமநாயக்கா மகளை அறிமுகப்படுத்திவைத்தார். பண்பான ஒரு 'ஆயுபோவன்' மௌனமாகவே நடந்தனர். ஒருகட்டத்தில் 'திலக்' என்ன ஆசிரியர்மார் மாதிரி மட்டைச்சுருளோடு வாறியள்' குரலைக் கேட்டதும் உள்ளுக்குள்ளே ஒரு உதறல். பேசுவதற்கு முடியவில்லை. நாக்கு அண்ணத்தோடு ஒட்டிவிட்ட மாதிரியான ஓர் உணர்வு. திரும்பவும் "மன்னிக்கவும், உங்களுக்கு சிங்களம் தெரியாதென்று தெரிந்தும்....ஏது இவையெல்லாம் என ஆங்கிலத்தில் கேட்டாள். சிறாணியின் எளிமையான பேச்சால் உந்தப்பட்டு "எனது சின்னம்மா ஒருவர் கோப்பாய் ஆசிரியகலாசாலையில் படித்தவ. அவ இப்படித்தான் கீறி, காட்சிகளும் வரைந்து கொண்டு போவா. பரீட்சைக்காலங்களில் அயலில் இருக்கும் பிள்ளைகளையும் என்னையும் வைத்துப் படிப்பித்துப் பழகுவா. அம்மாவும் ஒரு ரீச்சர். அவகுறை நிறை சொல்லுவா. அதுதான் வேலையைச் சுலபமாக்க செய்துகொண்டே போறம். படிப்படியாக விளங்கப்படுத்த எனக்கும் சுலபம். இப்படி செயல்முறை வரைபடம் அவர்களுக்கும் சிந்தனையைத் தூண்டும்".

"அப்பாடா இவ்வளவு தூரம் பேசிட்டீங்களே! 'டடி சொன்னார்'; அவர் சில சொற்கள்தான் கதைக்கிற ஆள் என்று. நீங்களும் மௌனமாக வர, நானும் பயத்தில் பேசாது விட்டேன் என்றாலும் ஆராய்வூக்கம் தொழிற்பட்டிட்டுது'.

மெல்லச் சிரித்தான் திலக். "அப்பாவுக்கு எல்லாம் தெரியும். நீங்கள் மாணவிதானே. அதுதான் விளங்கப்படுத்தினேன். 'அன்பாகச் சிரித்தாள் சிறாணி.

கலாசாலை விடுதிமேற்பார்வையாளர் வந்து ஒரு மண்டபத்தைத் திறந்து விட்டுப் போக 10பேர் வந்திட்டார்கள். தலைமை மாணவி "நாங்கள் 5பேர் தான். இவை சும்மா வந்தவை".

"இவை ஐந்து பேருக்கும்தான் நான் உதவி செய்ய வேண்டும். மற்றவர்கள் நின்று கேள்விகள் கேட்டு ஒரு ஒழுங்குமுறை இல்லாமல் போய்விடும். தயவு செய்து நீங்கள் இவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று பணிவோடு சொன்னான். அவர்கள் எழுந்து சென்று விட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலிருந்த பணிவும் அதேநேரத்தில் தொனித்த இறுக்கமும் சிறாணியை வியக்கவைத்தன. பார்த்தால் அப்பாவி மாதிரி. ஆனால் ஒரு ஆசிரியருக்குரிய கண்டிப்பும் வார்த்தைகளின் தெரிந்தெடுத்த சொற்களின் பண்பும் ஒரு சேர, இவன் சாதாரணமானவன் அல்ல என்று நினைக்க வைத்தது.

பொருள்பற்றி அவர்களின் முன்னறிவை வினாக்கள் மூலம் கேட்டு கரும்பலகையில் எழுதி அவற்றை வகைப்படுத்திய பின் அமைப்புப் பற்றி ஒரு பட்சிப் பார்வையாக வரைபடத்தை வைத்துவிளக்கத்தொடங்கினான்.

முகவுரை:
மேல்நாடுகளில் ஆரம்பத்தில் குதிரையிலும் குதிரை வண்டிகளிலும் கடிதங்கள் பட்டுவாடா செய்யப்பட்டன.

1. 22 நாடுகள் ஒன்று சேர்ந்து 'பொது அஞ்சல் ஒன்றியம்' 09. 10. 1984 இல் தொடங்கப்பட்டது. நோக்கம்: அ. அஞ்சல் பொருள்களை பொறுப்புடன் கையாள்தல், ஆ. அஞ்சல் கட்டணங்களை நிர்ணயம் செய்தல். 1878 இல் பாரிஸ் நகரத்தில் நடந்த மாநாட்டில் 'சர்வதேச அஞ்சல் ஒன்றியம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2. இலங்கை: 1877 இல் குடியேற்ற நாடாக இதில் இணைந்தது. சுதந்திரம் பெற்றபின் 1949 இல் ஒரு தனிநாடாக தன் அந்தஸ்தை உயர்த்தியது. தொடக்கத்தில் கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை எனும் ஆறு தபால் நிலையங்கள் தான் செயல்பட்டன.

3. இலங்கையின் செயற்பாடுகளும், விரிவுகளும்.

4. முத்திரைகளின் வரலாறு: அஞ்சல் முத்திரைகளை உலகுக்கு அறிமுகம் செய்தவர் சேர். றோலன்ட் ஹில். 1840 இல் இம்முத்திரை விக்ரோறியா மகாராணியின் உருவப்படத்தைத் தாங்கி மறுபக்கம் ஒரு பென்னி எனவும் எழுதப்பட்டு (Black Penny) என்று அழைக்கப்பட்டது. 1860 இல் 'சேர்' பட்டம் கொடுத்து றோலன்ட் ஹில் கௌரவிக்கப்பட்டார்.

5. முடிவுரை. வெளிக்கள வேலையாக இவைபற்றிய தகவல்களை சேகரித்து விளக்கித் தொகுத்தால் அருமையான கட்டுரை அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டிருக்கவே ஆசையாக இருந்தாலும் பௌதீகவியலில் வகுப்புப்பரீட்சைக்கு படிக்க வேணும் என நினைக்கவும்,

இன்று நேரமாகிவிட்டது. இனி "ஒவ்வொரு நிலையின் கடமைகள், அவரவருக்குரிய உரிமைகள் இன்னொரு நாள் பார்போம்" என விளக்கத்தை முடித்துக் கொண்டனான். மாணவிகள் அனைவரும் 'சேர், சேர்' என்று ஒரே புழுகித்தள்ளினாலும் அவன் சிறாணியைப் பார்த்து 'நல்லகாலம் எனக்கொன்றும் புரியவில்லை' என்பதுபோல ஒரு அப்பாவிப் புன்னகை விட்டான்.

வரும்போது சிறாணியும் 'இதற்குள் இவ்வளவு விடயம் இருக்கா என்று மலைச்சுப் போனன். நன்றி, டடியின் வேலை ஏதோ முத்திரை விற்கிறதுதான் என நையாண்டி பண்ணுவன்'.

"ஆசிரியத் தொழில்தான் எனக்கும் விருப்பம். ஆனால் எங்கள் வீடு வசதியாக வாழுகிறதுக்கு அந்த வேதனம் காணாது. வாத்திமார் என்று சொல்லி சாப்பாட்டுக்கே காணாத பிச்சைச் சம்பளம். புனிதமான தொழில் என்று சொல்லிச் சொல்லி அதுகளும் முறியுதுகள். இனியாலும் கவனிப்பினமோ தெரியாது. அஞ்சல்திணைக்கள வேலை என்றால், வேதனம் ஒருபுறம், மேலதிக வேலை, பிரயாணச் செலவு என்றெல்லாம் வரும் என்றார்கள். அதுதான் வந்திட்டன். இப்ப இதுவும் கவர்ச்சியான வேலைதான்."

அவனுக்கே ஆச்சரியம் பெண்கள் என்றாலே ஒதுங்கி ஒதுங்கி மரியாதை கொடுத்து வாழ்பவன், இன்று முன்பின் தெரியாத ஒருத்தியோடு நிறையவே பேசிவிட்டானே. ஏன்? எப்படி? அவளது குழந்தைத்தனமான கேள்விகளாலும் நடத்தையினாலுமா?

உணவு மேசையில் சிறாணி தகப்பனுக்கு ஒரே வியப்பான அந்த சம்பவத்தைச் சொல்லிக் கொண்டே இருந்தாள்.

உண்மைதானம்மா, "நீ சொல்றதெல்லாம் நல்லதொரு தலைமைக்கு இருக்க வேண்டிய பண்புகள். எனக்கே சிக்கலாக இருக்கிற சில பிரச்சினைகளை அவன் நிமிடத்தில் தீர்த்துவிடுவான். நான் நடப்பாகச் சொல்லிவிடுவன் உதுகளை எல்லாம் தீர்த்து வைக்க எனக்கு வேற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை இல்லையோ? உப அதிபரிட்டை போங்கோ" என்று. எங்கடை போஸ்ட்மன்மாரைத் தெரியும் தானே. **பாவம் தமிழன்கள் பரம்பரை பரம்பரையாக படித்தவங்கள். பண்பாடானவங்கள். அடித்தாலும் திருப்பி அடிக்கமாட்டான்கள்.** எனக்கு திலக் மீது ஒரு பாசம், மகன்மாதிரி".

மேலும் இருநாட்கள் அந்த செயல்திட்டத்துக்கு உதவி செய்ய வேண்டி வந்துவிட்டது. வெளிக்கள வேலையாக மாகாண தலைமை அஞ்சலகத்திற்கு அழைத்துச் சென்றான். சிறாணியோடு போவதும் வருவதும் இருவரும் வாயோயாமல் கதைப்பதும் திலக்கின் வாழ்க்கையில் வசந்தம் வீசுவது போலிருந்தது.

கிராமத்தில் இருந்த தேவசிகாமணி ஒவ்வொருவார விடுமுறைக்கும் நண்பனின் அறைக்கு வந்து விடுவான். இருவரும் ஊரளப்பார்கள். மகாவலிகங்கை வடக்கு நோக்கித் திருப்பும் திட்டமொன்று பொல்கொல்லையில் ஆரம்பமாகப் போகிறதெனும் கதை ஒன்று அடிபட்டது. டேய்! நீ வந்த அதிட்டம் தானடா என்ற தேவா, சிறாணியைப் பற்றியும் நன்றாக அறிந்து கொண்டான். 'ஆழமறியாமல் காலை விடாதை', கவனம். அடிக்கடி 56ஆம் ஆண்டை நினைத்துக்கொள். மனம் காயப்படும் அல்லது உடல் காயப்படும். நான் என்ன உனக்கு சொல்லுறது. நீ புத்திசாலி, யோசனை பண்ணு. மனதை அலையவிடாதை'.

# vii

மகனும், மருமகளும் வந்துவிட்டார்கள் போல். இருகுழந்தைகளின் சிணுங்கல் கேட்கின்றது. கூடவே தேவாவின் குரலும் கேட்கிறது. அவசரமாக எழுந்து மேல்கால் கழுவி உடுத்துக் கொண்டு கீழே போகிறார். குழந்தைகள் மேலே போய்விட்டன. இனி அவர்களும் உடைமாற்றி கழுவித் துடைத்து புறப்பட்டு வருவார்கள். தேவாவை அறிமுகப்படுத்த வேண்டும். மகன் சிறுவயதில் பார்த்தது, மருமகள் டிலிக்கு தெரியாது. பிள்ளைகள் மாதுளன், இனியாள் எப்படி எதிர்கொள்வார்கள் எனப் பார்ப்போம்.

பிள்ளைகள் இருவரும் ஓடி வந்தார்கள். பாட்டா! அப்பம்மா! எப்படி சுகம்? புதியவர் ஒருவரைக் கண்டதும் தயங்கி நின்றார்கள். திலகர் "இங்கை வாங்கோ, இவர்தான் பாட்டாவின் நண்பர். இனிமேல் இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இருப்பார். கப்பல் கதையெல்லாம் உங்களுக்கு நிறைய சொல்வார்". மூன்று வயது இனியாள் தயக்கமின்றி ஓடிவந்து தேவா முன்னிலையில் நின்று அப்ப நீங்கள் 'அங்கிள் பாட்டாவா' எங்களுக்கு கப்பலிலை போகவேணும்'. ஐந்து வயதான மாதுளன் மெல்ல மெல்ல வந்து தங்கையின் அருகே நிற்க, தேவா, இனியாவின் நெற்றியில் முத்தமிட்டு அரவணைத்து 'நல்ல கதை எல்லாம் சொல்லுவன் குஞ்சு, என்றவாறே மாதுளனையும் மறுகையால் அணைத்துக் கொண்டார்.

முரளி, இங்கை வாங்கோ தேவா அங்கிள் வந்திருக்கிறார்.

எல்லாரும் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருக்க திலகர் மனைவியின் உணவை கொண்டுவந்து வைத்துவிட்டு அவவை எழுப்பி நாற்காலியில் இருக்க உதவி செய்கிறார்.

டிலி, தேவாவைப் பார்த்து, "நீங்கள் இங்கே இருப்பதுதான் எங்களுக்கு சந்தோஷம். பிள்ளைகளுக்கும் நல்ல மகிழ்ச்சி. வீட்டுக்கும் ஒரு உயிர் வந்தமாதிரி இருக்கும். அன்ரியும் பழையபடி கலகலப்பாகி சந்தோப்படுவா' என்று சொல்ல நாளைக்கே வந்து விடுங்கோ அங்கிள், நான் வந்து கூட்டிவாறன்" முரளி கூறினான்.

"அதுக்கென்ன தம்பி உங்களுக்குத்தான் சிரமம். நானும் இரண்டுவாரம் தங்கிப்பார்க்கிறன்."

முரளியே கூட்டிப்போய் அவர்தங்கும் இடத்தில் விட்டு வந்தான்.

அன்றிரவு திலகராசாவுக்கு நிம்மதியில்லாத இரவு தான். தேவா சொன்ன ஒவ்வொருவார்த்தைக்கும் அர்த்தம் கண்டு கொண்டிருந்தான். 'சிறாணி, நீர் பிரதமர் ஆவேன் என்று சொன்னது எனக்குப் புரியாதா? விக்கிரமனின் உயிர் போறதைப்பற்றிக்கூட அலட்டிக் கொள்ளாமல் அதுதான் பிரதமமந்திரிகளுக்கு விதிக்கப்பட்ட மரணம் போலலல்லவா பேசியுள்ளீர். அத்தனை வெறுப்பா? இங்கே நானோ அத்தனை விசுவாச-மாக இல்லையே. என் சுந்தரிக்கு ஏதும் நடக்கக்கூடாதே என்று அல்லும் பகலும் வேண்டிக்கொள்கிறேன். ஆண்களின் காதல் அவ்வளவு ஆழமில்லாததா? சுயநலம் மிகுந்ததா? ஒருவருடம் தானே காதலித்தோம். இத்தனை வருடமாக நின்று நிலைக்கக்கூடியதா காதல்? ஒரு விபத்துப்போல வந்த தொங்குபால நிகழ்ச்சி, என்னுள் ஏற்படுத்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபரப்புடன் கூடிய பரவசநிலையை உமக்கும் தந்துள்ளதா? மனமும் மனமும் ஒன்றிய காதலுடன் தொடுகையும் சேரவேண்டுமா?

படிக்கும் காலத்தில் திலக் யாழ்ப்பாணத்தைவிட்டு எங்கும் போன-வனல்லன். ஆறு, மலை என்று எதையும் பார்த்தவனல்லன். திரைப்படங்களில் மட்டும் பார்த்து ரசித்தவன். கொழும்பு வந்தபோது கழனிகங்கை அமைதியாகக் கடலோடு கலப்பதைப் பார்த்திருக்கிறான். மலைநாட்டில் வேலைக்கு வந்தபின் இயற்கையழகு கொஞ்சி விளையாடும் குறிஞ்சி அவனைக் கொள்ளை கொண்டது வியப்பேயல்ல. அருவிகள் குதித்தோடுவதும் ஆறுகள் சலசலவெனப் பாய்ந்து கற்களின் மீது ஏறிக் குதித்து செல்வதும் அழகான மலைகள் சிறுகுன்றுகள் முகிற்கூட்டம் அவனையும் மூடி ஓடும் அழகையும் பார்த்துப் பார்த்து சொக்கிப் போனவன். அந்த இயற்கைச் சூழல் அவனைக் கட்டிப் போட்டது. S.J.V. சொல்வதைப் பார்த்தால் இதையெல்லாம் நாம் விட்டுக் கொடுக்க வேண்டுமா?

தனியாகவும், தேவாவுடனும் பல இடங்களைச் சுற்றிவருவான். சிறாணி பரீட்சை முடியும்வரை ஏதாவது சாட்டுச் சொல்லி ஒரு ஐந்து நிமிட-மாயினும் அவனைக் காணாமல் இருக்க மாட்டாள். பாடங்களில் சந்தேகம் கேட்க, டடியைப் பார்க்க, கடிதம் போட என்று தன் உள்ளத்தைப் புரிய வைத்துக் கொண்டிருந்தாள். அவன் பார்த்த முதல்நாளே பறிபோன தன்னுள்ளத்தை லகான் பிடித்து அடக்கிக் கொண்டிருந்தான்.

பரீட்சை முடிந்ததும் அடிக்கடி அதிபரே "வீட்டுக்கு வாங்க தேநீர் அருந்தலாம். இன்று விசேட பணியாரமாம் கூட்டிவரட்டாம், இன்று பலாக்காய் பிட்டாம் இரவு சாப்பாட்டுக்கு வரட்டாம்" என்று அடிக்கடி அழைப்பார். கடதாசி விளையாட்டு, செஸ் விளையாட்டு, பாட்டுகள் பாடல், பகிடிக்கதைகள் என்று நேரம் கழிந்து போகும்.

அதிபர் சந்தேகப்படமாட்டாரா? அவருக்கு ஒரு நம்பிக்கை. இது வெறும் நட்புத்தான். அதற்கு மேல் அவர்கள் போகமாட்டார்கள். அவர்களுக்கு உலக அறிவு இருக்கு. நாட்டு நடப்பும் தெரியும். தங்கள் எல்லைகளை அறிவார்கள். S.J.V. யின் எல்லைகளும் தெரியும் எனத் தன் மகளிலும் பார்க்க திலகராசாவிடம் அதிக நம்பிக்கை வைத்திருந்தார். அவனுடைய நிதானமும், அளவான சிரிப்பும், கனவானுக்குரிய கம்பீரமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதைப் பண்பும் தன் மனைவியையே அடிமைப்படுத்தி வைத்திருக்கிறதே.

மாலை நேரங்களில் சிறாணியும் சகோதரர்களும் இவனை அழைத்துக்கொண்டு உலாத்தப்போவதையும் அவர் கண்டுகொள்வதில்லை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை தேவாவும் சேர்ந்து பேராதனைப் பூங்காவுக்குச் சென்றனர். தேவாவின் கலக்கல் கதைகளில் மருண்டு சிறாணியின் சகோதர சகோதரிகள் அவனை மொய்த்துக் கொண்டு முன்னே போக இவர்கள் இருவரும் மெல்ல மெல்ல பூக்களையும் மரங்களையும் பார்த்துப்பார்த்து பேசிக் கொண்டே, கொடி கொடிகளாலான ஒரு அறைபோன்ற பந்தலின் கீழ் அந்தக் குளிர்ச்சியில் மெய்மறந்து நின்றனர். உணர்வுகள் மூச்சு முட்டுறதுமாதிரி திணறிக் கொண்டிருந்தன. இதுவரை போட்ட போலிவேடம் உடைந்தது. தாபம் நிறைந்த கண்களால் சிறாணி அவனைப் பார்த்தாள். 'திலக்' என்று நெஞ்சு துடிக்க கைபதற வாய்குளற அழைத்தாள். அவன் அவளைக் கட்டிப்பிடித்து... உலகை மறந்த நிலையில் அவர்கள் எவ்வளவு நேரமோ தெரியாது? தேவா தேடிவந்து குரல் கொடுத்து பிள்ளைகள் வருகிறார்கள் என்ற பின்தான் அவர்கள் சுயநிலைக்கு வந்தார்கள்.

முகமெல்லாம் ஜிவு ஜிவு என்று சிவக்க உள்ளமும் உடலும் படபடக்க சாதாரண உணர்வுக்குத் திரும்பவே நேரம் சென்றது. தேவா உடனே போய் மற்றவர்களின் திசையை மாற்றி பராக்குக்காட்டிக் கொண்டிருந்தார். அவர்களும் வந்துசேர ஒன்றாகவே வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தனர். ஈற்றில் தொங்குபாலத்தில் ஏறி மற்றக்கரைக்குப் போகும்போது ஓடிவந்த சகோதரி ஒன்று இடித்த இடியில் கனவுலகில் நடந்து வந்த சிறாணியின் குதியுயர்ந்த சப்பாத்து சரிந்து, அலக்கப்பரக்க விழும்போது திலக் கீழே விழவிடாமல் தாங்கிப்பிடித்து பாலம் ஆடிய ஆட்டத்தில் பலரும் திரும்பிப் பார்த்தனர். இடுப்பில் இரு கைகொடுத்து அணைத்த நிலையில் மீண்டும் ஒரு தயக்கம். அவன் கண்களில் கண்ணீர் மல்கியது.

"ஸார், எவ்வளவு நேரம் உன்னைத் தாங்கிக் கொண்டு நிற்பது. டீ சிறாணி! நிமிர்ந்து சரியாய் நில்" என்ற சகோதரியின்குரல் கேட்டு சுதாரித்துக் கொண்டு அவன் பிடியிலிருந்தும் விலகிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவா மாத்திரமல்ல பலருக்கும் இக்காட்சி வினோதமாக பட்டது. தாங்கின கைகளில் அவனது முகத்துக்கு நேரே மார்பும் தலை நிமிர்ந்தவாக்கில் தொங்கிக் கொண்டும் இருந்தபோது அவன் குனிந்து மார்பில் முத்தம் கொடுத்து விட்டான். தேவா ஒன்றும் தெரியாத மாதிரி இறங்கிப்போய்விட்டான். பதட்டத்தில் சிறாணியும் திலக்கும் அந்த இடத்திலேயே நின்று விட்டார்கள். தாங்ஸ் என்றும் சொறி என்றும் சொற்கள் பரிமாறப்பட்டன.

பிள்ளைகள் தேவாவை அழைக்கவே, தேவா, "என்ன ஒருமாதிரி நிற்கிறீர்கள்" என்றான்.

"இல்லை, அக்கா விழுந்து ஸார் தூக்கிவிட்டவர்",

தேவாவை திலக் தன்னருகே அழைத்து மெதுவாக,

"சிறாணிக்கு கதைகொடுத்து அவளை உணர்வுகளை மாற்றி வீட்டுக்கனுப்பிவிடு, நான் கொஞ்ச நேரம் நிண்டுட்டுத்தான் வருவன்"

"மடையா, மடையா அடக்கி வைக்கிறவை பாடு காலநேரம் பாராமல் வெடித்து விடுவதுதான். அவளுக்கு வீட்டில் கரைச்சல் தொடங்கப் போகுது".

சிறாணிக்கு ஏற்பட்ட இன்ப அதிர்ச்சி லேசில் கலைவதாய் இல்லை. கதைகொடுக்கும் தேவாவைத் தவிர்த்துக்கொண்டே நடக்கிறாள்.

கொடிப்பந்தல் முத்தங்கள், காதலை ஏற்றுக்கொண்ட மகிழ்ச்சியையும் பரவசத்தையும் தந்தனவே தவிர, தொங்குபாலம் ஒரு வேறுபாடான உணர்வுகளைக் கொடுத்தமையால் அவள் உடல் எதுக்கோ ஏங்குவது போலிருந்தது. மார்பகங்களில் விறைப்புத்தன்மை எதையும் சுமக்க ஆயத்தமாயிருந்தது. வீட்டில் என்ன நடக்கும் என்ற சிந்தனையே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# viii

திலகராசா கற்பனையிலிருந்து மீண்டுவிட்டான். "என்ன மடைத்தனம் செய்து விட்டேன். 14, 12, 07 வயதுடைய சகோதரர்களின் முன்னிலையில் எப்படி என்னை மறந்தேன். ஒரு வருடத்துக்கு மேலாக உள்ளத்துக்குள்ளே புதைத்து வைத்த ரகசியம். அஞ்சலகத்துக்கு வருகின்ற ஒரு குடும்பமும், மற்றும் மக்களும் பார்க்கும்படி காட்டுமிராண்டியாக நடந்து யாவரும் அறிய வைத்துவிட்டேனே. எப்படி அதிபரின் முகத்தில் விழிக்கப்போகிறேன்."

இருட்டி நீண்ட நேரத்தின் பின்பே தன் அறைக்குள் புகுந்தான் அவன். தேவா கிராமத்துக்குப் போகாது காத்திருந்தான்.

"நாடு கிடக்கிற கிடையில், நீ நினைக்கிறியோ இது சரிவரும் என்று? இப்படி பொது இடத்தில் நடப்பாயென்று சிந்திச்சுப் பார்க்கவே முடியல்லையடா. நாளைக்கு ஊரே கிளம்பப்போகுது. பேசாமல் லீவை அடிச்சுப் போட்டு ஊருக்குப் போய் மாற்றல் கேள்"

"இஞ்சை வந்தால் அவையட முகத்திலை என்னாலும் விழிக்க முடியாது. காவாலியள் என்ற பட்டம்தான் கிடைக்கும். அவரிடம் போய் சொல்லிவிடு, விழப்போக, பரிதாபப்பட்டுத்தான் ஒரு சகோதரிமாதிரி அப்படிச் செய்திட்டன் என்று. எதற்கும் நாளை மத்தியானம் போன் பண்ணறன்"

தேவசிகாமணி கடைசி பஸ் பிடித்துப் போய்விட்டான்.

இரவு முழுவதும் இருவகையான உணர்ச்சிகளின் உச்சத்தில் போராடிக்கொண்டே இருந்தான் திலக். காதல் வயப்பட்ட பிரிவாற்றாமை ஒருபுறம். அஞ்சலதிபருக்கு என்ன சொல்வது, என் எதிர்காலம் என்ன?

காலை வேளை. அலுவலகத்தில் வேலை மும்முரமாக நடைபெறுகிறது. திங்கட்கிழமையானபடியால் வரிசை நீண்டிருந்தது. அதிபர் 9:00 மணிக்கு வந்தது தெரியும். ஆனாலும் கவுண்டர் வேலை சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. ஆளே அமைதியும் ஆழமுமானபடியால் ஊழியர்கள் அவனில் எதுவித மாற்றத்தையும் காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிரு தடவை போஸ்மாஸ்டர் அவரைக் கூப்பிட்டு மேலிடத்துக் கடிதங்களைக் கொடுத்து, எப்படிப் பதில் போடலாம் என்று கேட்டார். அவரிடத்தும் ஏதும் சலனத்தைக் காணவில்லை. அவர் காதுக்கு எட்டவில்லையோ.

மாலை வழக்கமாக ஒரு சிறுகுன்றினருகில் விழும் அருவி, அதன் கரையிலே இருக்கும் பாறையில் அமர்ந்து இயற்கை அழகை ரசிக்காமல் வினாக்களும் விடைகளுமாக இருந்தான்.

யாரோ வருவது போலிருக்கவே திரும்பிப் பார்க்க சிறாணி வந்து வழக்கம்போல் அருகில் அமர்கின்றாள். இருவரும் நீண்ட நேரம் பேசிக்கொள்ளவேயில்லை.

திடீரென்று “நான் உறுதியாய் இருக்கின்றேன். நீங்கள் பயப்படுகிறீர்களா?”

“ஐம்பத்தாறு கலவரம் பயத்தைத் தருகிறது”

உலகம் இந்தச் சின்ன இலங்கையில் தானா அடங்கியுள்ளது. இந்தப் பரீட்சை மறுமொழி வந்ததும் நான் லண்டனுக்குப் படிக்கப்போகப் போகிறேன் என்று கேட்பேன். நீங்கள் அங்கே வரமுடியாதா? அங்கேயுமா இதெல்லாம்

“நடக்கக்கூடிய காரியத்தையா சொல்கிறீர்கள். நான் அவசரப்பட்டிருக்கக் கூடாது. நான் இவ்விடத்தை விட்டு சீக்கிரமாகப் போகவேணும்.”

“இருவரும் எங்கள் சிந்தனைகளைச் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் நிறைந்த காதலுடன் தான் பழகினோம். அதன் உச்சத்தில் ‘கொடிவீடு’ பதில் சொன்னது. உள்ளங்கள் கலந்து விட்டன. இல்லை என்று சொல்லுங்கோ பார்ப்பம்.

திலக் “எதையும் யோசிக்க முடியாது. உயர்படிப்புக்கு வழி இல்லை என்றுதான் இத்தொழிலைத் தேர்ந்தவன். வீட்டுப் பொறுப்பு அதிகம், அவர்களை கைவிட இயலாது. சிறீனி, வீட்டில் என்ன நடந்தது. டடி என்ன சொன்னார்?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்கள் பேயறைஞ்சமாதிரி நிண்டினம். நான் அறைக்குப் போய்விட்டேன். அம்மாக்கு சொல்லியிருக்கினம். சாப்பாட்டுமேசையில் அம்மா சோர்ந்து சோர்ந்து காணப்பட்டா. உணவருந்தும் போது டடி கேட்டார் ஏன் உணவை நோண்டிக் கொண்டிருக்கிறீர், பிடிக்கவில்லையா என்று, அம்மா பகலெல்லாம் உலாத்துத் தானே களைச்சுப் போச்சினமாக்கும் என்று சொன்னா.

“சரி சரி ஓடிப்போய் எல்லாரும் படுங்கோ” என்றார் அப்பா.

அலுவலுகத்துக்கு புறப்படும் வரை நான் நித்திரை போலக் கிடந்திட்டன்.

“கொஞ்சநாளைக்கு நாங்கள் சந்திக்காமல் இருப்பம். 3ஆம் தெரு கனவான் சிலசமயம் அப்பாக்கு சொல்லக்கூடும் சிறீனி”.

“நிச்சயமாகச் சொல்லமாட்டார்கள். எங்கள் குடும்பத்தோடு போட்டியும் பொறாமையும். நல்லாய் கூலிக்காரனை கட்டட்டும்” என்றிருப்பினம். கூலிக்காரன்! ஒரு சின்ன முள் உறுத்திற்று திலகனுக்கு. சிறாணியை அவன் செல்லமாக சிறீனி என்றுதான் அழைப்பான். அவளுடைய தலைமயிர் காற்றுக்கு அவன் காதுபக்கம் உராஞ்சிச் செல்கிறது. இருவரும் தாபமிகுதியால் தவித்தனர். சிறாணியின் கண்களில் இன்னொருக்கால் கட்டித்தழுவானா என்ற ஏக்கம் மிகுபார்வை.
நிலைகுலையும் தருணத்தில் சிறாணியின் அப்பாவும் அம்மாவும் கிட்டவந்து விட்டார்கள்.

இருவருக்கும் உதறல் எடுத்தது. மரியாதைக்காக எழுந்து நின்றார்கள். சிறாணி தாங்கள் சும்மா பேசிக் கொண்டிருந்தவர்கள் போல “டாடி, என்ன இந்தப்பக்கம்? உங்களுக்கும் இயற்கைக்காட்சியிலை லயிப்போ” என்று கேட்கும் போதே குரலில் உற்சாகம் குறைந்து நடுக்கம் வந்தது.

“ஓ, நாங்களும் எங்கள் அன்பைப் புதுப்பிக்க ஏதாவது மந்திரம் இங்கே இருக்குமோ என்று பார்க்க வந்தம்” அப்பா சொன்னார்.

அவர்களும் அப்பாறையிலிருந்து சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் இருள்பரவத் தொடங்கவும் “ரஞ்சனி நீங்கள் சிறாணியையும் கூட்டிக்கொண்டு வீட்டைபோய் டின்னருக்கு ஆயத்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுங்கோ. நாங்கள் கொஞ்சநேரம் இருந்திட்டு அலுவலகம் போய் ஒரு சிறுவேலை இருக்கு செய்து போட்டு அங்க, வாறம்" அப்பா சொல்லவும், சிறாணி சந்தேகக் கண்ணால் திலக்கைப் பார்த்து விட்டு அம்மாவுடன் சென்றாள்.

"சுற்றிவளைக்க எனக்கு நேரமில்லை. உங்கள் சொந்தவிடயத்தில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனாலும் பாதகம் உமக்குத்தான் அதிகம் என்றபடியால் நான் சிலவிடயங்களைச் சொல்ல வேண்டும்."

"நீங்கள் எனக்குத் தகப்பன் மாதிரி. நான் பள்ளிக்கூட வாங்கை விட்டே சில வருடம் தான். அனுபவ அறிவு இல்லைதானே" என்றான் திலக்.

"எனக்கு படிப்பு பதவி ஒன்றும் பெரிசில்லை. உம்மைப் போல் ஒரு தங்கக்கட்டியைத் தேடினாலும் கிடையாது. நேற்றுத்தான் எனக்குத் தெரியும் என்று நினைக்காதையும். கடந்த ஆறுமாதமாய் இப்படித்தான் வரும் என்று எனக்குத் தெரியும். அப்ப தொடக்கமே சாதகமாகவும் பாதகமாகவும் அணுகி ஆராய்ந்தேன். இந்த வருடம் முடிய நீங்கள் மாற்றலில் போய்விடுவீர்கள். ஏனெனில் இந்த நிலையம் இருவருட சேவைக்குரியது.

பொறுத்துப் பார்ப்போம் என்றிருந்தேன். இருவருக்கும் காதலிக்கும் பருவம் இதுதான். இந்த உணர்வு இன, மத, மொழிகளுக்கு அப்பாற்பட்டது. ஆனால் சூழ்நிலையையும் பொறுத்தது.

"உம்மோடு அடிக்கடி பிரச்சினைப்படுகிற அந்தத் தபாற்காரனும் 56 கலவரத்துள் வான்பிடிச்சு கொழும்புக்கு போன முரடன்களுள் ஒருவன் தான்"

திலக் நினைவுபடுத்துகிறான். அன்றைய சத்தயாக்கிரகம் கால்பேஸ் திடலில் சிங்களமே அரசமொழி எனப் பிரகடனப்படுத்தியபோது தமிழரால் நிகழ்த்தப்பட்டது. நல்லகாலம் சிலவேளை கலவரம் வரலாம் என்று நித்தியர் சொன்னபடியால் வீட்டிலேயே நின்று விட்டார்கள்.

அஞ்சலதிபர் தொடருகிறார். "எங்கடை ஆட்களுக்கு இலங்கை தங்களுக்கே உரியது என்ற எண்ணம். கடைசித்தமிழன் இருக்கும்வரை அவங்கள் ஓயமாட்டான்கள். இது வெளியில் வராவிட்டாலும் உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனன்று கொண்டிருக்கிறது. மலையகத் தமிழரைக் கூலி என்று ஓட்டிக் கலைச்சிட்டினம். இனி நீங்கள் தான்.

இந்த நிலை இரு சமூகத்தினரையும் பாதிக்கப் போகிறது. காதலா / சமுதாயமா? நீர் புரிந்து கொள்வீர். ஆனால் வழக்கம் போல் வீட்டுக்கு வந்துபோம். தனிய சந்திப்பதை நான் விரும்பவில்லை. மற்றவர் சந்தேகப்படக்கூடாது. அதற்காக வந்து போய்கொண்டிரும். காதல், கட்டை மீறினால் என் குடும்பமும் அழியும். உங்கள் குடும்பமும் அழியும். உங்களை வாழவும் விடமாட்டார்கள்.

பல்கலைகழகத்துக்குத் தெரிவாகி விட்டாள் சிறாணி. ஆனால் 'திலக்' உடன் முகங்கொடுத்துப் பேசுவதேயில்லை. கண்களில் நீர்மல்கும் முகத்தைத்தான் காண்பான். அவர்களின் முன்னிலையிலேயே சாதாரணமாக ஏதாவது கேட்டுப்பார்ப்பான். வாடியமுகமும் கண்ணீருமே பதிலாகும். அதனால் போவதையே குறைத்துக் கொண்டான்.

தேவாவும் இவனும் மாற்றலுக்கு எழுதிக்கேட்டு கல்முனையும் களவாஞ்சிக்குடியும் கிடைத்தன. இருவருக்கும் அதிபர் வீட்டில் பிரியா-விடை விருந்து. அன்று இருவரையும் தனியாகச் சந்தித்த சிறாணி, தான் பல்கலைக்கழகம் போகவில்லை என்று அடித்துச் சொன்னாள். தேவாவின் முன்னிலையிலேயே 'திலக்' கின் இருகைகளையும் பிடித்துக்கொண்டு 'நான் காத்திருப்பேன், கட்டாயம் வெளிநாடு போவோம், அங்கே மாமா இருக்கிறார், உதவி செய்வார்.' என்று உடைந்து போய் அழுதாள்.

திலக் அசையவேயில்லை. என்னை நம்பியிருக்கிற எனது குடும்பத்தை, விவாகம் செய்யாமல் இருக்கும் என் அக்கா, இரு தங்கைமார், அம்மா இவர்களின் கதி என்னாவது. மறந்துவிடு சிறீனி. அறிவு பூர்வமாகச் சிந்தித்துப்பார் சிறீனி. உனது சமூகம் எங்களை வாழவிடுமா? சிறிது காலம் பிரிந்திருப்போம். ஐந்து வருடம் ஒரு தொடர்பும் வேண்டாம். பின்னர் பார்ப்போம்.

சிறிது நாட்களிலேயே சிறு சிறு கலவரங்கள் நடந்தன. தேவாவுக்கு ஒரு ரெலிபோன் வந்தது. சிறாணி சொன்னாள் அண்ணா இனப்படுகொலைகளை அறிந்தேன். என்னால் உங்கள் உயிர்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்து வரக்கூடாது. காதல் என்னுள்ளத்துள் எப்போதும் வாழந்து கொண்டேயிருக்கும். நண்பரிடம் சொல்லுங்கள் நான் இனி அவரை எதுவிதத்திலும் தொந்தரவு கொடுக்கமாட்டேன் என்று, அறிவு பூர்வமாகவும் சிந்திக்கப்பழகி விட்டேன் என்றும் சொல்லவும்'.

கல்முனைக்கு வந்து இருவருடங்களின் பின், விக்கிரமநாயக்கா ஓர் அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். குணசேகராவுக்கும் சிறாணிக்கும் கல்யாணம் என்று கட்டாயம் வரும்படி.

"என்ன சினிமாவில் வாறது போல் நான் போய் பந்தல் போட்டு பாய்விரிச்சு பன்னீர் தெளிச்சு வரவேற்க வேண்டுமோ. அவன் ஆர்? எங்களிலும் மந்தன். அந்த றோசாப்பூ மீது அவன் கைபட்டதைக் கண்டாலே எனக்குக் கோபம் வரும். நீ போ நான் வரவில்லை. சிறாணிக்கும் அந்தரமாய் இருக்கும். செத்துப்போன என் பெரியப்பா செத்துப்போனார். அவன் ஊருக்குப் போட்டான் என்று சொல்."

## ix

படுக்கையில் ஆடாமல் அசையாமல் பழைய நினைவுகளில் மூழ்கிக் கிடந்த அவனுக்கு நேரகாலமே தெரியவில்லை. கண்களில் சிறிது எரிவு தோன்றவே, நித்திரை கொள்ள வேண்டும் என நினைத்து ஒருக்களித்துப் படுத்துக்கொண்டு கண்ணை மூடினான். தேவாவையும் கூட்டிப்போக வேண்டுமே. மூடின கண்களுள்ளும் நித்திராதேவி வரமறுக்கிறாள். கீழே கனடிய தமிழ் வானொலியின் சத்தம் வருகிறது.

தலை நிமிர்த்திக் கடிகாரத்தைப் பார்க்கிறான். ஓ! எட்டுமணியாகி விட்டது. இந்நேரம் சுந்தரியின் காலைகடன் முடித்து கோப்பி குடிக்கும் நேரம். அவசரப்பட்டு எழுந்தான்.

"உன்னோடு நானிருந்த ஒவ்வொரு மணித்துளியும் மரணப்படுக்கையிலும் மறக்காது கண்மணியே' பாடல் தொடரப்போகிறது. கனவுலகம் முடிந்தது. நிஜ உலகம் கண்முன் விரிகிறது.

"சாய், என்னை நம்பி இருக்கும் சீவனை நினையாமல் ஓரிரவு முழுவதையும் வீணாக்கி விட்டேனே".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரஅவசரமாக முகங்கழுவி உடுத்துக்கொண்டு தலையிடிக்கு 'அக்ஸ்' தைலத்தையும் பூசிக்கொண்டு கீழே பறக்கிறான்.

"தலையிடி கடுமையா? முகம் எல்லாம் வீங்கியிருக்கு" எனக் கண்களில் நீர்மல்கக் கேட்டு முகத்தை வருடிவிட்ட சுந்தரி அவன் கண்களிலும் கண்ணீரை வரவழைக்கிறாள். மெல்ல எழுப்பி, கைத்தாங்கலாக கழி-வறையில் 'கவனம் கவனம்' சொல்லி விட்டபின் கோப்பி தயாரிக்கச் சென்றுவிட்டான்.

சுந்தரியின் நிலை கொஞ்சம் உற்சாகமாகவும் தென்பு கூடியது போலவும் அவதானிக்கப்பட்டமையால், எல்லாம் தன்னுள் தானே சுருண்டு விடுவதுதான் காரணம் என நினைத்துக் கொண்டான். தேவாவின் உல்லாசமான பேச்சுத்தான் சுந்தரியின் உற்சாகத்துக்கு காரணம் என்பதையும் புரிந்து கொண்டான்.

இரவெல்லாம் 25 வயதுக்குட்பட்ட இளைஞனாக துடிச்சுப் பதைச்சுத் துன்பப்பட்டு, பிரிவாற்றாமையால் வருந்தி ஒரு சொட்டு நித்திரையுமில்லாமல் நாற்பது வருடங்களுக்கு முந்தைய வாழ்வை உடலும் உள்ளமுமாக திருப்பி வாழ்ந்து பார்த்ததில் கண்டமிச்சம் உடல் அசதியும், நோவும், தஞ்சைக்கேடும்தான் எனும் உணர்வு மேம்பட்டு சுந்தரிக்காக பச்சாதாபப்பட்டது. பொன்னான நேரங்களை மண்ணாக்கிக் கொண்டு எனக்கு நானே நோய்களைத் தேடிக் கொள்கிறேனோ நினைவுகள் தொடர கருமங்கள் நடைபெறுகின்றன.

சுந்தரியைக் கூட்டிவந்து கதிரையில் இருக்கச் செய்தபின் உணவும் கொடுபடுகிறது. இதற்கிடையில் இருதடவைகள் "தேவாவைக் கூட்டி வரவேணுமல்லே" என்று நினைவூட்டப்பட்டும் விட்டது. இவனுக்கு மனதுக்குள் ஒரு குறுகுறுப்பு.

"ஓ, எனது அண்மை கூட அவளுக்கு உற்சாக மூட்டுவதில்லைப் போலும். தேவாவின் அலட்டல் தான் பிடிக்கிறது. அதுசரி நான் புத்தகங்களுள்ளும், நினைவுகளுடனும் வாழ்ந்து கொண்டிருந்தால் அவள் தான் என்ன செய்வாள்'

தேவாவிடம் தொலைபேசியில், கப்பல் நண்பன் நண்பகல் விருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்து தானாம் விடுவான். எனவே மாலை 5:00 மணிக்கு வரும்படி கூறினார். இதைக் கேட்டதும் சுந்தரியின் முகம் வாடிவிட்டது. பின்னர் தன்னைத்தானே சுதாரிச்சுக் கொண்டு

“ஏன் திலக் உங்களுக்கு ஏமாற்றமாய் இருக்கிறதா? பரவாயில்லை மாலை வருவார் தானே. (ஏன் சுந்தரி உன் ஏமாற்றத்தை என் மீது சுமத்துகிறாயா?) பரபரப்பாய் இருந்தீங்கள் (நானா? நீயோ? எனக்கு நல்ல அமைதி தேவை). இந்த நாரி எலும்பு சரிவந்திட்டால் நானே எழும்பி நடமாடுவேன். நல்ல சாப்பாட்டு வகை செய்து தருவேன். (ஒருநாளும் இப்படி நீ எனக்குச் சொல்லவில்லையே) நல்ல காலம் கலியாணம் செய்யவில்லை. செய்தால் ஒரு காலம் வர அலுத்துப்போய் சடமாகிவிடுவார்கள் போலும். (என்னைத்தானே குத்திக் காட்டுநீர். நானும்தான் சலிப்புத் தரும் வண்ணம் நடந்துவிட்டேனே) என்ன இருந்தாலும் தேவா கலகலப்பானவர். எந்நேரமும் மரணத்தைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்த எனக்கு நேற்று இன்று அந்த எண்ணமே வரவில்லை’

“சுந்தரி, அப்படிச் சொல்லாதையும்” அவள் வாயைப் பொத்துகிறான். இதுவரை அவள் சொல்வதையே கேட்டுக்கேட்டு மனதுக்குள் பதில்களைக் கூறிக்கொண்டு இருந்தவனுக்கு சிறு பொறாமையும் தோன்றுகிறதோ? என நினைக்கு முன்னரே அவள் மரணம் பற்றிக் கூறியதும் அவன் பயந்திட்டான். அந்த அளவுக்கு சுந்தரிக்கு விரக்தியைக் கொடுத்துவிட்டோமோ? நான் அவளுக்காக என்ன செய்தேன்? அவள் குழந்தைகளையும் பார்த்து என் வசதிகளையும் நிறைவேற்றி, என்னை உசுப்பி உசுப்பி ஊரெல்லாம் கூட்டிச் செல்லவைத்தவள். என் மனைவி என்று பெருமையாக அறிமுகம் செய்து வைப்பதைத் தவிர வேறென்ன செய்தேன்?.

“என்ன யோசிக்கிறியள்? அவர் பராக்குக் காட்டட்டும், நீங்கள் புத்தகங்கள் வாசிக்கலாம் என்றா?”

அவளுடைய குறும்பை ரசிக்கும் நிலையில் தான் அவர் இருந்தார். முன்பெனில் அலட்சியம் செய்து போய்விடுவார்.

“ஓ பின்னே? தேவாவுக்காக மினக்கெட்டு பவுடர் பூசி பொட்டு வைச்சு கலாதி தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வாயிலை வருகுது சொல்லிப்போடுவன். வேண்டாம்”

“இல்லை இல்லை இன்றைக்குக் கொஞ்சம் வடிவாய்த்தான் இருக்குது”

சிலவருடங்களாக காணமுடியாத மென்மையான சிறு சிரிப்பு சுந்தரியிடம் மகிழ்ச்சியை வரவழைக்கிறது. முகத்திலும் அதிசயமும் அன்பும் பிரதி-பலிக்கிறது. இருவரும் சிறிது இளமையாக உணருகின்றனர். சுந்தரிதான் சுதாரித்துக் கொண்டு ‘இதென்ன கிழட்டு கூத்து’ என்று சொல்லவும், கதவு மணி அடிக்கிறது.

எதிரே இவர்கள் தொலைபேசியில் அறிவித்த மருந்துகள் மருந்துக் கடையின் தொழிலாளி கைப்படுத்துகிறார். ஐந்து டொலர்களை அன்பளிப்பாகக் கொடுத்து நன்றி கூறி அனுப்புகிறார்.

முதியவர்களுக்கு இந்த அரசு எவ்வளவு சலுகைகளை வழங்குகின்றது. இலவச சிகிச்சை மாத்திரமல்ல இலவச Delivery யும், 12 வகையான மருந்துகள். சுந்தரியின் உடம்பே இந்தக் குளிகைகள், உறுஞ்சிகள், பூச்சுக்கள் முதலியவற்றால் தான் கட்டப்பட்டு வருகிறது போலும்.

தேவாவைச் சந்தித்தபின் தன்னிலும் ஒரு மாற்றம் ஏற்படுவதை உணருகிறான். எஞ்சிக் கிடக்கும் வாழ்க்கையை எண்ணிக் கொண்டிராமல் வாழும் வகையாய் வாழ்ந்து முடித்திட வேண்டும். கூட்டுப் புழுவாக இருந்து அறிவைச் சேகரித்து என்ன பயன்? அந்த அறிவைப் பிரயோகித்து அனுபவம் பெற்று மகிழாமல்.

படித்த உளவியலைப் பயன்படுத்தி மனைவிக்கு ஆறுதலைக் கொடுத்திருந்தால் இந்தப் பன்னிரண்டு மருந்தும் தேவைப்பட்டிராதே. இயந்திர ரீதியில் ஒரு தாதி போல் எல்லாம் செய்தேனே தவிர அன்போடு உரையாடியுள்ளேனா? தேவா தன் கலகலப்பினால் பிறரை மகிழ்விக்கின்றான். அவர்களின் சிரிப்பையும் ஆனந்தத்தையும் பார்த்துப்பார்த்து தானும் மகிழ்கிறான். பிள்ளை குட்டியா? பேரமாரா? சொந்த வீடா? ஒரு திரைப்படமும் விடுவதில்லையாம். இளைஞர் போல் ஒரு சேட், ஒரு கோட். அவ்வளவு தான்.

மருந்து டப்பிகளை மேசையில் வைத்து வகைப்படுத்திக் கொண்டே சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானங்களை எடுத்துக் கொள்கிறான். ஆழ்மனத்துப்புதையல்களைக் குப்பை கிளறவேண்டாம். தத்துவ நூல்களைத் தள்ளி வைப்போம். தியானம் ஒன்று மட்டுமே போதும். அனைத்து நாடுகளின் அரசியலையும் பொருளாதாரத்தையும் அலசி ஆராயவேண்டாம். ஆராய்ந்ததைக் கட்டுரையாகவோ, கலந்துரையாடலாகவோ, வானொலிப் பேச்சாகாகவோ இன்றையவரை வெளியிட்டதில்லையே.

விளையாட்டு மைதானங்களையும், நடன நாட்டியக் கச்சேரிகளையும், பொழுதுபோக்கு அம்சங்களையும் பார்த்தோ பங்கு பற்றியோ சுந்தரியையும் அழைத்துக் கொண்டு போய்வர வேண்டும். கண்மூடி மௌனியாக இருப்பதற்கெண்ணினேன், என்பதை மறந்து இறைவன் அருளில் படைக்கப்பட்ட இந்த இயற்கையின் அழகை ரசித்து பாடி ஆட வேண்டும். 'கழிந்ததற் கிரங்கேல்', எங்கேயோ எப்போதோ சந்தித்த ஒருத்தி என்னை ஆட்டிப்படைக்க, எனது சுகமே தனது பலமெனத் தன்னையே உருக்கித் தேய்ஞ்சு போன சுந்தரியின் அன்பை முழுமையாக தன்னால் பிரதிபலிக்க முடியாத தன்மை முற்றத்து முல்லைக்கு மணம் இல்லை என்பதாலா? நீறுபூத்த நெருப்பை அணைந்து போக விடாமல் ஊதி ஊதி உயிர் கொடுத்துத்தான் என் உள்ளார்ந்த வாழ்வு சோகமாகிப் போனதா?

இல்லை. தேவா வந்துவிட்டான். சத்திரசிகிச்சை செய்து விட்டான். இனி திலகராசா மாறவே செய்வான். மனைவியே மாணிக்கம் என்பான். வாழ்க்கையை சிரித்துச் சிரித்து அனுபவிக்கப் போகிறான்.

சுந்தரியைத் திரும்பிப்பார்க்கிறார். சாடையாகச் சுருக்கம் விழுந்த கண்களில் காதல் பொங்குகிறது. கொழுகொழுத்த கன்னங்களில் மலர்ச்சி. சுந்தரிக்கு அதிசயத்தின் மேல் அதிசயம். தேவசிகாமணி வந்து தன்னோடு சரளமாகப் பேசியது தான் இந்த மாற்றத்துக்குக் காரணமோ. பயந்து விட்டார் போலும். எல்லாம் நன்மைக்கே. கணவன் மனைவி என்றால் பொல்லுப்பிடிக்கும் வயதிலும் காதலர்க்கு இயல்பிலே வரும் சிறு சந்தேகங்கள், பொறாமைகள், பயங்கள், ஆக்கிரமிப்புக்கள் எல்லாம் வருமோ!

அப்படியானால் காதலுணர்வு உள்ளத்தை இளமையாக வைத்திருக்கிறது என்பதுதானே பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனின் மனம்தான் வாழ்க்கையா? சிந்தனை தான் வாழ்க்கையா? வெற்றிக்கும் தோல்விக்கும் அவனவன் மனம் உள்ளம் தான் காரணமோ? மனமே நல்லதை, நினை அல்லதை மற.

கட்டிலருகே சென்று சுந்தரியை மெதுவே அணைத்து நிமிர்த்திக் தன் நெஞ்சில் சார்த்தியவாறே அவள் முகத்தை நோக்கிச் சரிய, சுந்தரியின் முகம் நாணத்தால் சிவக்கிறது. அப்பாடி எத்தனை இளமையாகப் பிரகாசிக்கிறது. எந்த வயதிலும் கணவனின் முன்னே காட்டப்படும் நாணம் இதுதானா? அவனுள்ளம் பாகாய் உருகியது. அவளோ அந்த அர்த்தமுள்ள தொடுகையில் தன்னையே மறந்து விட்டாள்.

**உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்கு இல் காமத்துக்கு உண்டு. - திருக்குறள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகணிதன் அல்லது நதியின் பிழையன்று

பேருந்தினால் இறங்கிய சங்கர், தான் இறங்கிய இடம் சரியா பிழையா எனச் சுற்றும் முற்றும் பார்க்கிறார். சின்னாபின்னமாக்கப்பட்டு இடிந்து சிதைந்து கிடக்கும் தெருவோரக்கடைகளையும் கட்டிடங்களையும் காண்கிறார். நிலத்தில் விழுந்து கிடந்த சுவர் ஒன்றில் 'பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்' கல்லூர் என இருந்ததைக் கண்ட பின்பே சரியான இடம் என உறுதிசெய்துகொண்டு, சிறிது தூரம் நடக்க, ஓர் ஆலமரமும் அதன் அருகே குண்டும் குழியுமான மக்கித்தெருவும் காட்சியளித்தன.

அவன் நண்பன் சிவா, கனடாவில் கிளப் ஒன்றில் சிறிது போட்டுவிட்டானேயானால், கண்களில் கனவு மின்ன, தன் கிராமத்தையும் அக்கிராமத்துக்குப் போகும் வழியையும், இயற்கை வளங்களையும் கற்பனை விரிய விளக்குவான். ஆனந்தமும் துயரமும் மாறிமாறிப் பிரதிபலிக்க அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டும் ஒப்பாரி வைப்பதுபோல் அழுதும் தனது உள்ளத்தில் ஆழப்பதிந்து விட்ட கிராமத்தை வர்ணிப்பான்.

முன்பு சிவாவைப்பற்றி அவர் கண்டு கொள்ளுவதில்லை. ஒருநாள் 'பிறிட்ஜ்' விளையாடிக்கொண்டிருக்கும்போது இன்னொரு மேசையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுது அரற்றிக் கொண்டிருந்த சிவாவின் வாயிலிருந்து வந்த 'துளசிக்காடு' எனும் சொல் காதில் விழுந்தது. திடுக்கிட்டுத்திரும்பிப் பார்த்தவர் அன்றுடன் அவனுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளத் தொடங்கினார்.

துளசிக்காடு எனும் பெயரையும் அந்தப் பயங்கர இரவையும் அவர் மறப்பதற்கில்லை. அத்தனை பயங்கரத்தை அவர் ஒருபோதும் அனுபவித்ததில்லை. தன்னுயிர் எந்நிமிடமும் பறக்கலாம் என்ற நிலையில் தவித்த தன்னிடம், ஒரு அடைக்கலம் வந்தபோது அதனால் தான் அடைந்த ஆறுதலையும் இன்றுவரை திரும்பத்திரும்ப அனுபவித்து வாழ்கிறார்.

சங்கரின் சொந்த ஊர் மட்டக்களப்பு. அவர் ஒருபோதும் யாழ்ப்பாணம் வந்தவரல்ல. 18 வருடம் இருக்குமா? தொழில் கிடைத்து வெளிநாடு புறப்பட இருந்தவர் தனது ஒரேயொரு சகோதரி குடும்பம் இடமாற்றலில் வந்து தெல்லிப்பழையில் இருந்தமையால் அவர்களுக்குப் பயணம் சொல்ல வந்திருந்தார்.

மூன்று தினங்களுக்குள் நடந்த கசப்பான அனுபவங்கள் பயங்கரங்கள்.... இப்ப நினைத்தாலும்.......

மக்கித் தெருவால் இறங்கி நாற்புறமும் பார்த்தவாறே நடக்கிறார். எல்லாம் எரிந்து புகைந்து ... பனங்கூடலுள் வானளாவ நின்ற பனைமரங்கள் தலைவெட்டிய சூரன்போல் ஓலைகள் பாளைகள் வட்டுக்கள் எல்லாம் முறிந்து தொங்கிக் கொண்டிருந்தன. அதேபயங்கரம் மீண்டும். அமானுஷ்ய பாதை. இடையே வந்த ஒரு ஒழுங்கையில் இறங்குகிறார். வேலிகள் முறிந்து கால்படாவழிபோல் தொடர்ந்து நடந்து ஏதோ ஒரு இடத்தில் கால்தரிக்கிறது. இந்த இடந்தான்.

அதோ! முதற்காணிக்கப்பாலான இன்னொரு காணி. அந்த மூலையில் ஒரு படர்புளிய மரம் அன்று இரண்டோ கூடவோவான மாடுகள் படுத்திருந்த ஞாபகம். வீடுகளில் யாரும் இல்லை. சிறிது உள்ளே போனார். காலத்துக்குக் காலம் கொட்டியிருந்த புளியம்பழக் குவியலூடே பல புதிய புளியங்கன்றுகள் முளைத்து வளர்ந்திருந்தன. அடையாளங்கண்ட திருப்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுயிரைக் காப்பாற்றிய மாட்டுக்குடில் அடுத்த மூலையிலிருந்த ஆட்டுக் கொட்டில், யாவும் சிதிலமாகக் காட்சியளித்தன. அன்று ஓடியவர்கள் இன்றுவரை திரும்பவில்லையோ அல்லது வந்திருந்து வாழ்ந்துவிட்டு யாழ்ப்பாணமே இடம்பெயர்ந்தபோது போயிருப்பார்களோ.? விடை காணமுடியாத வினாக்கள்.

வெய்யில் ஏறுகிறது. கனடாக் குளிருக்குப் பழக்கப்பட்டமையால், எரிகிறது போல உணர்வு. அதுமட்டுமா அந்தக் காலத்தில் கயிறடித்தது மாதிரி உடம்பு. வயதே தெரியாத பையன் தோற்றம். இன்றோ கனடாக்கோழிக்கால்களால் உடம்பு பெருத்து, பியர் வண்டி வைத்தும், இரட்டை நாடியுடன் காதோரக் கன்னங்கள் புடைத்தும், ஊழல் சதை வைத்தும் யாராலும் கண்டுபிடிக்க முடியாத தோற்றம்.

வழுக்கும் நவீன தெருக்களில் சொகுசுக் கார்களில் அநாயாசமாய் நூறுமைல் வேகத்தில் இனிய இசையை ரசித்துக் கொண்டே பறந்து திரிந்த ஒருவன். இந்தக் கானல் வெயிலில் வியர்க்க வியர்க்க தூக்கமுடியாத சரீரத்தையும் தூக்கிக்கொண்டு முள்ளிலும் கல்லிலும் பூநாறி மரங்களிடம் கீறுகள் வாங்கிக்கொண்டு பாம்பு பூச்சிக்குப் பயந்து கொண்டு எங்கே போகிறார்?, முன்பின் அறியாத ஒரு கிராமத்தை நோக்கியா? அங்கேயும் மனிதர் இருப்பார்களா இல்லையா?

ஒழுங்கையின் முடிவிலே ஒரு பனங்கூடல். அதனூடாக ஒரு ஒற்றையடிப்பாதை. மனதிலே இருந்த வரைபடம் சரியாகத்தான் வருகிறது. தொப்பி கழன்ற துரைமார் போல காட்சியளித்த பனைமரங்கள்கூட அவருடைய மென்மையான உள்ளத்தை வருத்தியது. அதன் எல்லையிலே காணப்படும் ஒரு வயலூடாகச் சென்றால் மறுபுறத்தில் அவர் தேடும் அச்சிறு கிராமம் துளசிக்காடு வரும். பூவரசுகள் சடைச்சு, பற்றைகளையும் செத்தைகளையும் தரிசித்து, வயல் வெளியை அண்மியபோது, இரண்டுமைல் நடந்திருப்பாரா, வயல்வெளியில் செடிகளும் கொடிகளும் சிறுபற்றைகளும் நிறைந்து ஒரு காலத்தில் அது நெல்வயலாய் இருந்ததற்கான அடையாளமே இல்லாதிருந்தது.

வயல்வெளியைக் கடப்பது அலுப்பாகவும், மனித இனத்தைக் காணமுடியாததால் நம்பிக்கையற்றும், தத்தளிக்கும் மனத்தோடு "ஒன்பதரை மணியிலேயே இந்த வெயில் கொழுத்தா? இன்னமும் அரைமைல் போகவேண்டுமே ஒரு சொட்டுத் தண்ணீராலும் இறங்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை தூரத்தையும் திருப்பி நடக்கமுடியுமா?" வினவிக் கொண்டார்.

"யாருக்காக அங்கே போகிறேன்? விடுமுறைக்கு மட்டக்களப்பு வந்தும் ஏன் யாழ்ப்பாணம் வந்தேன்? ஏதோ ஒரு பழைய நினைவுந்தலாலா? சமாதான காலத்தில் என்னுறவைப் பார்க்க வந்தது போதாதா? எது என்னை ஈர்த்தது? அந்த ஒரு இரவா? அந்த உருவமா? என் குறுகுறுக்கும் குற்றமுள்ள நெஞ்சமா?"

சிந்திக்கிறார் அவர். உள்மனம் போ போ என விரட்டுகிறது. உடம்போ 'திரும்பு திரும்பு' என்கிறது. மனைவியிடம் நான் ஒன்றுமே மறைப்பதில்லை எனச் சத்திய வாக்குத் தரும் இதர ஆண்களைப் போலவே தானும் தன் வாழ்வில் நிகழ்ந்த மறக்கமுடியாத இந்தச் சம்பவத்தை மட்டும் யாருக்கும் சொல்லாமல் நெஞ்சகத்தில் புதைத்து, தனிமையில் திருப்பி வாசித்து மகிழ்ந்து ஒரு புனித நினைவாகப் பூட்டியல்லவா வைத்திருக்கிறார்.

வந்ததுதான் வந்தோம் இன்னும் சிறிது தூரம்தானே. அவர் பார்வைக்கு ஒருமனிதன் தட்டுப்படுகிறான். அவரையே உற்றுப் பார்க்கிறான். வெள்ளைக்காற்சட்டை சேட் கண்களில் பட்டிருக்கும். விரைவாக நடக்கிறார். அவனும் இவரை நோக்கி வருகிறான்.

"ஐயா ஐயா நில்லுங்கோ நான் வாறன்" சத்தம் வைக்கிறான்.

நிற்கிறார்.

"இதாலைவாறது கஷ்டம் ஐயா வாருங்கோ நான் வழிகாட்டுறேன்"

"துளசிக்காடு என்பது இதுதானே."

"ஓமையா முதலிலே நல்லாய் களைச்சுப் போனீங்கள் ஐயா. வசுவிலேயே வந்தனீங்கள்? இந்தக் கல்லிலே இருங்கோ 2 மைல் நடந்திருப்பியள். இப்ப வேறொரு பாதை வைச்சிருக்கிறம்"

பரபரவென சூரியகாந்தி மரத்திலிருந்து இளநீர் பறித்து, சீவி முடிதட்டிக்கொடுத்தான் தருமன். 'அப்பாடா' என்றிருந்தது அவருக்கு. தேவாமிர்தமாய் இதுவரை இத்தகைய ஒரு பானத்தைத் தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தவில்லை என நினைத்துக் கொண்டார். வேறும் இரு இளநீர்களைப் பறித்துக் கொண்டு தருமன்

"ஐயா நீங்கள் யார்? என்ன அலுவலாய் வந்தனீங்கள்? ஏதும் கணக்கெடுக்கவோ"

நன்றியால் நிறைந்த நெஞ்சோடு பையிலிருந்து ஐம்பது ரூபாவை எடுத்து நீட்டுகிறார்.

"என்னையா நீங்கள் மண்ணும் என்னுடையதல்ல. வானமும் என்னுடையதல்ல காற்றும் அப்படி. இயற்கை தருகிறது. இதற்கும் காசோ? ஐயா இதை நான் சொல்லலை இது 'பிரபு' சிந்தனை. வெளிநாடுகளிலே எதுவித தொடர்புமில்லாத மக்கள்கூட 'பிரபு சிந்தனைகளை அறிந்து வைத்திருக்கிறார்கள். அணுகமுடியாத இக்கிராமத்துக்கா தெரியாது. 'தம்பி, நான் கனடாவிலிருந்து வந்திருக்கிறன். என்னோடு 'சிவா' என்ற நண்பன் படித்தவன். பாடசாலைக் காலத்தின்பின் கடிதத் தொடர்பு இருந்தது. பின்னர் அற்றுப்போய்விட்டது. 26 வருடங்களுக்குப் பின் வந்தேன். அவரைக்கண்டு அளவளாவி ஏதேன் உதவி தேவையெனில் செய்வமென்று"

"எனக்குத் தெரியவில்லை ஐயா ஆனால் உங்களை எங்கேயோ கண்டமாதிரி இருக்கு."

"இருக்கமுடியாது. நான் மட்டக்களப்பு. இதுதான் யாழ்ப்பாணம் வாறது முதல் தடவை"

"நானும்தான் யாழ்ப்பாண நகரமே தெரியாது. எனது கிராமம் மட்டும்தான். என்ன தேவை அப்பு, எங்கடை எளிமையான வாழ்வு, உடலுழைப்பு, ஊதியம் எல்லாமே கடவுள் தந்திருக்கிறார்"

சங்கர் மெதுவாகத் தூண்டில் போடுகிறார். தருமனும் தனக்குத் தெரிந்தவற்றைச் சொல்கிறான்.

தம்பி நாங்கள் இப்ப ஆச்சி கடைக்குப் போவம். அவவுக்குத் தெரிந்திருக்கும். தொடக்கத்திலை 10, 15 குடும்பங்கள். ஒவ்வொரு தாக்குதலிலும் வெளியே போய்விடுவார்கள். திரும்பி வரும்போது 2, 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே தங்கிவிடும். இப்ப ஒன்பது குடும்பங்கள் தானிருக்கு. எந்தவொரு தாக்குதலின்போதும் நாங்கள் போறதில்லை. எங்கடை கிராமத்திலை இன்னுமொரு ஆமிக்காரனும் கால்வைச்சதில்லை. எங்கடைபெருமாள் அவ்வளவு சக்தி வாய்ந்தவர். இந்தியாக்காரனின்ரை செயின்புளொக் வயலூடாகப்போனது. இங்கை வரயில்லை. 'பிரபு சிந்தனை'யின்படி இங்க சாதிவேறுபாடுகள் கிடையா. நான் தருமன்தான் ஒரு ஐயர் குடும்பமும் இருக்கு. பெருமாளைச் சேவிக்க. ஆனால் நாங்களெல்லாரும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் மாதிரி.

இருவருமாக ஒரு சிறுவீட்டின் திண்ணையிலமைந்த ஒரு சிறு கடையடிக்கு வருகின்றனர்.

"பெத்தாச்சி, பெத்தாச்சி ஒருக்கா வெளியிலை வாவன்" ஆச்சி கூரைக்குக் குனிந்து வெளியே வருகிறார். ஒரு நீலப்பருத்திச் சேலையில் மேற்சட்டை போடாது தாவணி போட்டவராய் செந்தளிப்பானவராய் திருநீற்றுப் பூச்சோடு கனிந்த பார்வை செலுத்தி குறுகுறுவென மேலுங் கீழுமாகப் பார்க்கிறார்.

கைகூப்பி வணங்க வேண்டும் போல சங்கர் உணர்கிறார். "இவர் யாரையோ தேடி வந்திருக்கிறார் நீ கதையணை ஆச்சி. நான் சுறுக்காய் ஓடிப்போய் கட்டுக்கொடியாலை மாடு கன்றை அவிழ்த்து மேயவிட்டு வாறன்"

"தருமு, இஞ்சை வாப்பா உள்ளே போய் சின்ன வாங்கை எடுத்துவா. இவர் குனிஞ்சு வந்து திண்ணையிலை இருக்கமாட்டார்."

"இல்லை ஆச்சி நான் உள்ளே வாறன் வெளியிலை வெய்யில் சுட்டெரிக்குது"

"என்ன இப்ப பத்து மணி இருக்குமாக்கும் சரிசரி இரும்"

சாணியால் மெழுகப்பட்ட நல்ல திண்ணை. திண்ணையை மூடியிருந்த கிடுகால் ஆன தட்டியை உயர்த்தித் தடியால் முண்டு கொடுக்க உள்ளே காற்றோட்டமும் வெளிச்சமும் வருகிறது. ஒரு சிறு தடுக்கைப் (ஓலைப்பாய்) போட சங்கர் அதில் இருக்கிறார். நடைசாலைக்கு மறுபுறமான திண்ணையில் கடை பரத்தி இருக்கின்றது. எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்சங்கொஞ்சமாக வைக்கப்பட்டிருக்க சுவரோரமாக சிறுசாக்குகளில் அரிசி, மா போன்றவையும் காணப்பட்டன.

சாயோலையால் இழைக்கப்பட்ட ஒரு தட்டத்தில் வெற்றிலை பாக்கு வைத்து சங்கரின் முன்னால் வைத்த ஆச்சி,

"தம்பி இனிச் சொல்லும் யாரைப் பார்க்க வந்தனீர்?"

"சிவா என்றொருத்தர் என்னோடை கொழும்பிலை படித்தவர். இரண்டு பேரும் நல்ல சினேகிதம் அவர் 'துளசிக்காடு' பற்றிச் சொல்வார். ஓய்வுபெறுங் காலத்தில் இங்கேதான் இருப்பன் என்றும் சொன்னவர். கடிதத் தொடர்பு இருந்துவந்தது. நான் வெளிநாடு போனபின் ஒரு தொடர்புமில்லை. இப்ப குடும்பத்தோடு வந்து மட்டக்களப்பிலை நிற்கிறம். நான்தான் சிவாவைத் தேடி வந்தன். எப்படியும் அவன் உறவினர் யாராவது இருப்பார் விபரம் அறியலாமென்றுதான்"....
ஆச்சி யோசனையில் ஆழ்ந்துவிட்டார்.

"தம்பி இது ஒரு சிறு கிராமம் தானே. இந்த இடத்திலை வந்து குடியேறும் போது ஒரு பதினைந்து குடும்பம் வீட்டுக்கு நாலைந்து பேராக இருந்தோம். பாடசாலைக்கு மூன்று மைல் போகவேண்டும். கடைக்கோ வேறெங்கோ போவதற்கும் அப்படித்தான். ஆனால் வயலும் பண்படுத்திய புதுத்தோட்டங்களும் எம்மைக் கட்டிப்போட்டுவிட்டன. பிள்ளைகள் 5ம்வகுப்பு முடிந்தவுடன் மேலே படிக்கவெனப் பட்டினப்பக்கம் அனுப்புவினம். தாங்களும் வாடகை வீடுகளுக்குப் போய்விடுவினம். அப்படியே கொழும்புபோய் வெளிநாடுபோய் விடுவினம். எல்லாக்காணிகளும் நாங்கள் தான் பாக்கிறது"

"பெடியன்ரை தேப்பனுக்கு என்ன பேர்?

"கந்த என்றுவரும் அங்காலே நினைவில்லை. (கனடாவில் 'கன்டோ' என அழைப்பதால் அப்படி நினைத்தார்)

"கந்தப்பிள்ளையே"

யாரோ சிறுபிள்ளை ஒன்று வருகுது ஆச்சி தையலூசி வாங்கிவரட்டாம். ஒருசிறு கடதாசிப்பெட்டியை எடுத்து அதற்குள் இருந்த ஊசிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரையைப்பிரித்து "இந்தாடி பிள்ளை கண்ணும் தெரியல்லை ஒன்றை எடுத்துப்போ" சிறுமி எடுத்துக்கொண்டு ஏதோ சில்லறையைக் கொடுக்க அதை எண்ணிப் பார்க்காமலே அடுக்குப் பெட்டிக்குள் போடுகிறார். கிராமங்களில் இருக்கும் இந்த நம்பிக்கை வேறெங்கேதான் இருக்கும்.

"ஆச்சி கந்தப்பிள்ளை குடும்பம் பற்றி உங்களுக்குத் தெரியுமோ?"

"தெரியுமோவா? அது சொல்வதென்றால் துளசிக்காடு தொடங்கிய காலத்திலிலிருந்து சொல்ல வேண்டும்.

ஆனால் அவருடைய பின் வரலாறு தெரியவில்லை. எங்கடை பெடிச்சி ஒண்டு ஆஸ்பத்திரியால வருவா அவவுக்குத்தான் கொஞ்சம் பிற்பட்ட தொடர்புகள் தெரியும். படிச்ச பெட்டை என்றால் அவள்தான். நாங்கள் 'நேர்ஸம்மா' என்று கூப்பிடுவம். ஆனால் அவ நேர்ஸ் இல்லை. அற்றனடன்ற்தான் மகன் பெடியனோடை இருக்கிறாள். அவள்பிள்ளை கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு சைக்கிளில் தான் போவா.

ஆச்சி சிரிக்கிறார். "ஏன் ஆச்சி?

"நானும் இந்தவயதுக்கு பெரிய பெம்பிளைகள் சைக்கிள் ஓடியதைக் காணவில்லை. வரயுக்கை எனக்கு கடைச்சாமான் வாங்கி வந்து தரும்."

சங்கருக்கு அத்திண்ணையில், மெல்லிய காற்றும் வீச, வாகனச் சப்தமுமின்றி அமைதியாக இருப்பது ஒரு மனச்சாந்தியைத் தந்து கொண்டிருந்தது. பெயருமே தெரியாத ஒரு பெண்ணைப்பற்றி எவ்வாறு விசாரிப்பது? ஏறக்குறைய 35-40 வயது இருக்கலாம். ஆச்சி மிக சுவாரஸ்யமாக அக்கிராமத்தைப்பற்றிக் கூறுகிறார்.

இந்த இடத்திலிருந்து தூரத்தேயுள்ள கிராமங்களுக்குச் சொந்தமாக இந்தப் பெரிய நெல்வயல் இருந்தது. காலத்துக்குக் காலம் அவர்கள் இங்கே வந்து விதைப்பு நடத்திப்போவர். ஒரு நிரந்தரமற்ற கொட்டில் ஒன்று போடப்பட்டிருந்தது.
ஆச்சியின் தகப்பன் வயலையண்டிய பிரதேசத்தில் துளசிச் செடிகள் பற்றையாக வளர்ந்திருந்ததைக் கண்டார். புனிதமான அச்செடியை வீடுகளிற்கூட வளர்க்கக் கஷ்டப்படுவார்கள். இப்படி அமோகமாக விளைந்திருந்தமையால் அது ஒரு புனிதமான இடமாக இருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமெனக் கருதி அருகே நின்ற கொன்றல் மரத்தினடியில் ஒரு வடிவமைத்த கல்லை வைத்து அபிஷேகம் செய்து துளசியால் பூசை செய்தார்.

அவருக்கு ஏதோ அற்புதங்கள் நிகழ்வதாக உணர்ந்து ஒரு சிறு கொட்டில் போட்டு வயற்காரரைப் பொங்கலிட வைத்தார். இறைபக்தி வளரவே அந்தச் சிறுகோவிலைத் தனியே விட்டுச் செல்ல மனமில்லாமல் தனக்கும் அங்கே குடிசை ஒன்று கட்டிக்கொண்டார். அதிலிருந்து வயற்சொந்தக்காரர்கள் தாமும் காணிபிடித்து குடிசை கட்டி குடிவந்து 'துளசிக்காடாகி' 60 வருடங்கள்தான் இருக்கும்.

அப்படி வந்தவர்களுள் கந்தப்பிள்ளையும் ஒருவர். இளந்தாரியான அவருக்கு, தன் மகளைக் கொடுக்கலாம் என அப்பு காத்திருக்க, அவர் வேலைக்குப்போற இடத்திலே கொஞ்சம் படிச்ச பெண் ஒருத்தியை மனைவியாக்கிக்கொண்டார்.

பிள்ளைகள் பிறந்து படிக்கும் காலம் வந்ததும் கந்தர்மடத்தில் வீடு வாடகைக்கு எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். சிறியதாய் மனிசி இவையின்ரை வீட்டிலை இருந்தது. அதுவும் 90ம் ஆண்டோடு எங்கேயோ போய்விட்டது.

'தம்பி நீர் சொல்றது கந்தப்பிள்ளையின் மகனாகத்தான் இருக்கும். கமலம் வரட்டும் கேட்டால் தெரியும். அவ சிலவேளை இவையளைச் சந்தித்திருக்கக்கூடும்.

தருமன் வந்துவிட்டான்.

"தருமு, கமலம் வந்தால்தான் தெரியும் என்ன?"

"ஓம் நர்ஸம்மாதான் கடிதங்கள் எல்லாம் எடுத்து வாறவ"

"அப்பன், இந்த ஆமிக்காரன்கள் கால் வைக்காத இடமேயில்லை. ஆனாலும் எங்கடை பெருமாள்சாமியின் அருளாலை இங்கை வரவேயில்லை. தூரம்தானே. ஒருமுறை மட்டும் இந்தியன் ஆமியின் செயின்புளொக் டாங்கியை உந்த வயலுக்கு நடுவால ஓட்டிப்போனவங்கள்"

"தம்பி, நாங்கள் எந்தப் பக்கத்தால் போகினும் பிரதான வீதியை அடையமுடியும். ஆனால் ஆமிக்காரன் துளைச்செடுத்துப் போடுவான். எல்லாவீட்டு வரும்படிகளையும் பகிர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசியும் மாவும்தான் வெளியிலிருந்து வரவேணும்" சொல்லிமுடித்த தருமன், "ஆச்சி இவரைப் பார்க்க எங்கையோ பார்த்தமாதிரி இருக்கல்லே.

"ஓமடா தருமு நானும் நினைச்சன். ஆனால் நீயும் நானும் எங்க வெளியிலை போறம். தம்பியும் மட்டக்களப்பாமல்லே. உலகத்திலே ஏழுபேர் ஒரேமாதிரி இருப்பினமாம்."

"தம்பி, ராசா நீங்களென்ன மச்சம் மாமிசம் சாப்பிடுவியளோ அல்லது ஆரதக்கறி தானோ. நின்று சாப்பிட்டுப் போங்கோ?

"இல்லை பெத்தாச்சி நான் சுறுக்கப் போக வேணும். எப்ப நேர்ஸம்மா வருவா? எத்தனை மணிக்கு?

"தருமு, இண்டைக்கு அஞ்சு மணிக்கே போட்டா என்னடா?

ஓ.ஓ. அவவுக்கு காலை வேலை. அத்தோடை பெடியனும் இண்டைக்கு வருவான். மேன்காரன் நல்ல கெட்டிக்காரனாம். ரவுணிலே ஆற்றையோ வீட்டிலை தங்கிப் படிக்கிறான். ரவுண் பள்ளியிலை எல்லாப்பாடத்திலும் விளையாட்டிலும் ஏதோ போட்டிளிலும் அவன்தானாம் முதல்பையன். சனிக்கிழமைகளிலை 2 மணிபோல வருவான். இவ காத்து நின்று இரண்டு பேருமாக வருவினம். "அப்ப சாப்பிட்டுப் போமேனை".

"பின்னைச் சரி பெத்தாச்சி. நான் எதுவும் சாப்பிடுவேன்."
தருமு, ஓடிப்போடா ஐயரம்மா வீட்டை சாப்பாட்டுக்கு சொல்லிப்போட்டு ஒரு கோழி பிடிச்சு கறிவை"

"பெத்தாச்சி அப்படியெல்லாம் கஷ்டப்படாதையுங்கோ. நாங்கள் சிந்தச் சிதற தின்னுறதை நினைத்தால். இவ்விடக் கிராமங்களைப் பார்க்க வயிறெரியுது" அவர் கலங்குகிறார்.

"அதுக்காக எங்கடை பண்பாட்டை விடுகிறதோ சகல பொருள்களும் இங்கேயுண்டு. ஒரு பிடியாகினும் சாப்பிடாமல் ஒருவரையும் போகவிடமாட்டம்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கருக்கும் யாழ்ப்பாணத்திலை தெரிந்தவை யாரும் இல்லை. நேற்றைய மாலை தான் யாழ். நகரத்துக்கு வந்து சேர்ந்து ஒரு சுற்று சுற்றினார். கனேடியத் தமிழ் மக்கள் கற்பனை பண்ணும் யாழ்ப்பாணமல்ல இது. இது ஒரு குபேரபுரி.
கனடாக் குளிருக்குள் உணவகக் குசினிகளுள்ளும், துப்பரவு செய்யும் கொம்பனிகளிலும், தொழிற்சாலைகளுள்ளும் பாரமான கடின உழைப்பு. குடும்பத்தையும் யாழ். உறவினர்களையும் காப்பாற்ற இரண்டு மூன்று வேலைகள். மனைவி மக்களைக் காண, அவர்களோடு பேசி, விளையாடி மகிழ 'பொசிப்பு' இல்லாதவர்கள் பலர். பாடசாலை விடுமுறை நாட்களில்கூட வளர்ந்த பிள்ளைகளையும் மனைவியையும் கொண்டு சிறுசிறுவேலைகள் மூலம் உழைப்பிப்பவர்கள். இங்கே பணத்தை அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலே ஜெகஜோதியாய் விளங்கும் கடைத்தெரு நவீன பொருள்களால் நிரம்பிவழியும் கடைகள் தொழில்புரிய வேண்டிய இளைஞர்கள், தினவெடுத்து உந்துருளிகளில் பறக்கும் வேகமும், அடித்து விலத்த முடியாத அளவுக்கு மோட்டோர் சயிக்கிளின் தொகையும் தெருவில் கால்வைக்கவே பயமாய் இருக்கிறது. இலங்கையிலிருந்து தமிழீழத்துக்கு வந்து முதலாளிகளாய் பலர் இருக்கிறார்கள்.

கனடாவிற்கூட அருமையாகக் காணப்படும் செல்போன் இளைஞர்கள் மாணவர்கள் கையில் படாதபாடுபடுகிறது. உந்துருளிச் சவாரியும், காலித்தனமும் திடுக்கிடவைக்கிறது.

ஸ்ரீமாவோ அம்மையார் பிரதமர் பதவிக்கு வந்ததும் இறக்குமதி எல்லாவற்றையும் நிறுத்தி வைத்தவர். ஓரிரு வருடங்கள் கஷ்டப்பட்டாலும் பணப்பயிரை விட்டு உணவுப்பயிர் செழித்து வளர்ந்து தன்னிறைவு காண-வைத்தது. இன்றோ பெரியதொரு உணவகம் இந்திய முதலாளிகளால் நவீன வசதிகளோடு நடத்தப்படுகிறது. இரவுணவு அருந்த அங்கே சென்றபோது அந்தப் பெரிய உணவகம் இளைஞர்களால் நிரம்பியிருந்தது. அவர்களது அட்டகாசமான சிரிப்பும் கும்மாளமும் 'மெனுக்காட்' தரப்பட்டதும் அவ்வகை உணவுகள் கனடா டொலரில் மாற்றிப் பார்த்தபோது கனடாவைவிட பன்மடங்கு அதிகமாக இருந்தது.

கனடாவில் நம்பிள்ளைகளை இவ்வகை உணவகங்களுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிச்செல்வதே அருமை. போனாலும் காலநிலை காரணமாகவோ நாகரிகம் காரணமாகவோ பெரிதாக சத்தம் போடமாட்டார்கள். ஓய்வு நேரத்தில்கூட கணினியும், கணினிவிளையாட்டுக்களும் இணையத்தளமும் என மாணவரே யந்திரமயமாக - இங்கே துள்ளிக் குதிக்குதுகள். எரிச்சலும் கோபமுமாக இருந்தது அவருக்கு.

சங்கர் தங்கியிருந்த விடுதியில், ஜேர்மனியிலிருந்து வந்திருந்த தமிழர் ஒருவருமிருந்தார். இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது மணி 9 இருக்கும். எதிர்ப்புறத்தில் பாதைஒழுங்கு பொலிஸ் காவலர் இருவர் பேசுவது கேட்கிறது. உந்துருளிகள் பேய்விரட்ட ஓடுவது போல தலைதெறிக்க ஓடுகின்றன. ஒரு உந்துருளியை மறிக்கிறார்கள். ஒருவன் 'ஹாய் படி என்றவாறே நிறுத்துகிறான். பின்னால் இருந்தவன் சட்டைப்பையிலிருந்து எதையோ எடுத்துக் கொடுத்து விட்டு அவர்களின் தோளில் தட்டி 'பை பை' சொல்லவும் சைக்கிள் பறக்கிறது.

காவலாளிகள் தாழ்ந்த குரலில் "கீயத'?," "பன்சியாய்!" "ஒவ் மாறுகறனவா" 'அத அத்தித?" ஒவ் ஒவ் ஹெட்டட்ட அபி பலனுவா ரயார்ட் லெற் அஸ் கோ.

"பாருங்கோ 500 ரூபா மாத்திப்போட்டு பகிரப்போகினம். நித்திரை வருகுதாம் படுக்கப் போவமாம். பத்தாட்டி நாளைக்குப் பாப்பமாம். எங்கடை பெடியள் வெளிநாடு போனாலும் போச்சுதுகள். இந்த மொக்கு முண்டங்களுக்கல்லவோ கைக்கூலியாகவும் லஞ்சமாகவும் போய்க்கொண்டிருக்கு" ஜேர்மனியர் முறுகுகிறார்.
மின்னல் வேகத்தில் நடந்த அந்த நாடகத்தைப் பார்த்து அரண்டு போன சங்கர்

"அந்தக் காலத்திலை பொலிஸ் என்றால் எவ்வளவு பயம் எங்களுக்கு"
"காலம் மாறிப்போச்சு. இப்ப ஆமிப்பெரியவனையே விலைக்கு வாங்கலாம். இப்ப உந்தக் கதையைப்போய் அங்கை சொல்லிப் பாருங்கோ"

"கட்டாயம் சொல்லி இங்கை அளவாக அனுப்பப் பண்ண வானொலியிலை அறிவிக்க வேணும்"
கடகடவெனச் சிரிக்கிறார் ஜெர்மனித் தமிழர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் போனமுறைவந்தபோது எனக்குத் தெரிந்த சரியான வறியகுடும்பத்துப் பையன் ஒருவன். அங்கு 2 வேலை 3 வேலை என்று செய்து செய்து வாழும் வசதிகளைக் கூடக் கவனிக்காது, வீட்டுக்கே அனுப்புகிறான். என்னிடமும் சில பொருள்கள் தந்துவிட்டான்.
அவனுடைய தம்பிமார் இருவர் உழைப்புமில்லை. படிப்பும் விட்டிட்டு இரண்டு மோட்டோர் சைக்கிளிலை ஊர்சுற்று. படிக்கப்போகும் பெண்பிள்ளைகளை கலைச்சுக் கலைச்சு வித்தைகள் காட்டுறது, சுற்றிச் சுழண்டு வருகிறது. நையாண்டி பண்ணுறது. பெரிய மல்லன்கள். பார்க்கவே ஆத்திரம். சிகரட்டையும் ஊதித் தள்ளிக்கொண்டு ஒருகாலை ஊன்றி சினிமா ஸ்ரார் போல போஸ்....
திரும்பியபின் அவனிட்டைச் சொன்னன் அவன் என்ன சொன்னான் தெரியுமோ "பரவாயில்லை ஐயா, நீங்கள் எட்டுக்கண்ணும் விட்டெறிய வீடுகள், கார்கள், TVக்கள் என்று நல்லாய் வாழ்ந்த நீங்கள். நாங்கள் உங்களை வாய் பார்த்துக்கொண்டு தொண்டுகள் தொழும்புகள் செய்தம். நான்தான் அவையளைத் தொழில் பார்க்க வேண்டாம் என்றெழுதினேன். இப்ப எங்களுக்குக் காலம். அவங்கள் நல்லாய் அனுபவிக்கட்டும் சந்தோஷப்படட்டும். நான் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. அதுகளைப் பார்த்து ஊரார் பொறாமைப்பட வேண்டும். அம்மன் கோவில் வீதியிலை பெரியதொரு வீடு கட்டியிருக்கிறம். இஞ்சை நீங்களெல்லாம் மாடிக் குடியிருப்புகளில் தவண்டை அடிக்கிறியள்"
எப்படியிருக்குது கதை? பணத்தின் வரவோடு பண்பும் போச்சுது.

சங்கரின் மனதில் ஜெர்மனியர் சொல்லி விசனித்தது ஞாபகம் வருகிறது. சமூகத்தோடு வாழும்போது சமூகநலன்களில் அக்கறை வருவது நியாயம்தான். இப்பெல்லாம் நாமுண்டு நம்வீடுண்டு என வாழப் பழகிவிட்டோம். அடுத்த வீட்டிலிருப்பவன் யார்? எந்நாட்டைச் சேர்ந்தவன் என்பதையே அறியாமல் வாழுகிறோம். யார் எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன என்றிருந்துவிட வேண்டும்.

உருப்படியாக கனடா போய்ச்சேர்ந்தால் காணும் என சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே

"பின்னைக் கேட்டியோ தம்பி..... முதலில் வந்த குடும்பங்களில் வீட்டுக்கு நாலுபேராலும் இருந்தம். 1990 உடன் சிலர் வெளியேறி விட்டனர். 4ம் வகுப்போடு பள்ளியை நிறுத்தி வீட்டிலிருந்த குமர்ப்பிள்ளைகளை எம்மால் காப்பாற்ற முடியுமோ என்பது எங்கடை யோசினை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியிருக்க ஒருநாள் 11 பிள்ளைகளும் வன்னியில் தங்களுக்கு நல்ல பாதுகாப்பாம் என்று போய்விட்டினம்.
கமலம் தான் கண்டதாம் எல்லாரும் போராளிகளாம். ஆமிக்காரர் மாதிரி உடுப்பெல்லாம் போட்டுக்கொண்டு துவக்குகளோடை ஜீப்பில்
வந்தினமாம். ஜீப் ஓட்டியது வன்னியசிங்கத்தின் மகளாம். கண்கொள்ளாக் காட்சியாம். ஆச்சியின் குரலில் அதிசயம்.
உவங்களைக் கலைச்சுப்போட்டு ஒருநாள் துளசிக்காட்டுக்கு வந்து எங்களையெல்லாம் பார்த்துப் போவினமாம்.

ஓம்தம்பி இப்ப ஒரு முப்பது பேர்தான் இருக்கிறம். வெளியாலை போய்வாறவை யாரும் புதினப்பத்திரிகைகள் கொண்டுவருவினம். ஆளுக்காள் வாசித்துக் காட்டுவினம்"

தருமு பால் காய்ச்சிக் கொண்டுவந்து கொடுத்தான். பாலைச்சுவைத்துக் கொண்டே இது ஹோமோவோ, ரூ பேசன்ட்ஓ என எண்ணவும் தவறவில்லை. எந்தவகையில் கேள்விகேட்டு நான் வந்த நோக்கத்தை அறிந்து கொள்ளலாம். சந்தேகப்படாத வகையில் கேட்க வேண்டுமே. மூளை திருகித்திருகி ஆராய்கிறது.
வாழ்நாளில் உதறித் தள்ள முடியாத அளவுக்கு உடலும் உள்ளமும் துடிக்க நடந்த - அனுபவித்த அந்தப் பயங்கர இரவு...
பருந்துக்குப் பயந்து தாயின் சிறகுள் பதுங்கித் துடிதுடித்துக்கொண்டிருக்கும் அந்தக் கோழிக்குஞ்சுக்கு அடைக்கலம் மட்டுமா கொடுத்தார். அந்தத் துன்பமும் இன்பமுங் கலந்த அந்த நினைவை இரும்புப் பெட்டியுள் பூட்டிவைத்து நேரமுள்ள நேரம் தனிமையில் கணங்கணமாய் திரும்பி அனுபவிக்கிறாரே. பதினெட்டு பத்தொன்பது வருடங்களின் பின்பும் அதே இடத்தைப் பார்க்க இத்தனை தடைமுகாம் சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டிவருவாரா?

அவரே சுயவிசாரணை செய்கிறார்.

எல்லாவற்றையும் மனைவிக்கு ஒப்புவிக்கும் அவன், இந்த நினைவை மட்டும் ஏன் பேணிப்பாதுகாத்து வரவேண்டும், ஏன் சாட்டுப்போக்குச் சொல்லி யாழ்நகர் வரவேண்டும்? விடுப்பூக்கமா ஏன் அந்த உந்துதல்? குற்றமுள்ள நெஞ்சமா? மனச்சாந்திபெறுதலா? மறக்க முடியாத ஜீவன் ஒன்றைப் பார்த்துப் போகவா? பச்சாத்தாபமா? எல்லாங்கலந்த ஒன்றா? ஏதோ ஒன்று அறுதியிட்டுக் கூறமுடியாத மனித உணர்வு ஒன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிவா' கற்பனையில் ஒன்றைக் கேட்டு, துப்பு துலங்குதா எனப் பார்க்க வேண்டும் அல்லது இத்தனை கஷ்டத்துக்கும் பலனில்லாமல் போய்விடும்.

யோசித்துக் கொண்டே திண்ணையால் இறங்கி மாமர நிழல் விழும் முற்றத்தில் வாங்கிலே இருந்து சிறிது சரிகிறார்.
'தம்பி நீர் கொஞ்சம் ஆறும். நான் எனக்கொரு தேத்தண்ணி போட்டுக் குடிச்சிட்டு வாறன்"

"தம்பி, ராசா இனி கமலம் வரும் நேரந்தான். காகங்களும் வந்து இருக்கத் தொடங்கிவிட்டன. சிலவேளை எச்சம் போட்டுவிடும். இனித்திண்ணையில் வந்திரும். மதியம் கடந்தால் காகாவென்று இதுகள் வந்துவிடும்.
சங்கர் எழுந்து திண்ணையில் போய் அமர்கின்றார்.

தருமு ஓடி வாறான். "ஆச்சி எங்கடை வேலை முடிஞ்சுது.

"அப்படியே, இனி கமலம் வந்திடும்"

"நர்சம்மா இப்ப வந்திருக்க வேணுமே"

"அவ வரட்டுமன் நாங்கள் கோயிலை - மற்றவீடுகளைப் பார்த்து வரலாமே - சங்கர்.

"ஒரு பத்து வீடெண்டாலும் எட்டி எட்டித் தான் கிடக்குது. ஒரேயடியாய் சாப்பிடப்போகும்போது போவம்."

அந்தப்பெடிச்சி கமலம்தான் நாளது போதிலை வெளியே போய்வாறது நல்ல துணிச்சல் காரப்பெட்டை. இங்கை இருக்கிறவையுக்கை அவதான் கொஞ்சம் படிச்சவ. ஊருலகம் தெரிஞ்சவ துளசிக்காட்டின் மகாராணி. ஐயருக்கு பூசைபண்ணத்தான் தெரியும் அவதான் எல்லாருக்கும் உதவி செய்யுறவ."

ஆச்சி, 'இந்தக் கதையைச் சொல்லாமல் விட்டிட்டியள்' எனக்கூறித் தருமு தொடங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சை இருக்கிற கிழவர் முதற்கொண்டு எல்லாருக்கும் எழுத்தெல்லாம் படிப்பிச்சு வாசிக்கப்பழக்கிப் போட்டுது, வரயுக்கை ஈழநாதம், உதயன் வாங்கிவந்து தரும்"

"கமலம் ஒராள்தான் ஒரு சின்னக் கல்வீடு இரண்டு அறையும் ஒரு விறாந்தையும் கட்டியிருக்கு. எப்பவேன் ஒருநாளைக்கு விதானை, மணியகாரன் பொலிஸ் யாரும் வந்தால் ஐயர் வீட்டிலை சாப்பாடு அவவின்ரை வீட்டிலை தான் உபசரித்துக்கொடுப்பது. பெடியன் படிக்க என்று ஒரு மேசையும் 2 கதிரையும் வைச்சிருக்கு.
இவர்களுடைய வெளிப்படையான பேச்சினால் கவரப்பட்டாலும், சங்கர் தான் வந்த காரியத்துக்கு ஒரு துப்பாவது கிடையாதா? இந்தப் பயணத்திலேயே தனது ஆதங்கம் நிறைவேறாதா என எண்ணியெண்ணி அங்கலாய்ச்சுக்கொண்டிருந்தார்.
எந்த ஊரிலை வாழ்க்கைப்பட்டிருந்தாலும் அங்கெல்லாம் சென்று பார்த்துவிட்டுத்தான் மட்டக்களப்பு போவது எனும் வைராக்கியத்தோடு காத்திருந்தார்.

"பெத்தாச்சி! இரண்டு சைக்கிளும் வருகுது" தருமனின் குரலில் மகிழ்ச்சி. கடையடியில் வந்திறங்கும்போதே புதியவரைக் கண்டுவிட்டாள் கமலம்.

"இன்றைக்கு ஆச்சிக்கு நல்ல பம்பல் போலயிருக்கு" என்று கலகலத்தவாறே சங்கீத மொழி பயின்று உள்ளே வரவும் அவளை முந்தி, ஒரு பையன் ஒரு சாக்குப் பொதியை ஆச்சியிடம் கொடுக்கிறான். நிமிர்ந்து பார்த்த சங்கர் அவனை திரும்பவும் ஏறிட்டுப் பார்க்கிறார். 10ம் வகுப்பு படிக்கும்போது, தான் அடையாள அட்டைக்காகப் போட்டோ பிடிக்கச்சென்றபோது ஒரு முழுப்படமும் எடுத்தவர். அச்சொட்டாக அதே போட்டோ. திரும்பி இவரைப் பார்த்ததும் தனது இடது கையால் தனது நாடியைத் தடவும் அவனைப் பார்த்துத் திகைத்து விட்டார். தன் மகன்-டம் கூட இவ்வளவு ஒற்றுமை தெரியவில்லையே.

முற்றத்தில், பந்துக்கொண்டையும் வெள்ளைச் சேலைசட்டையுமாக வந்த பெண்ணைத்திரும்பிப் பார்க்கிறார்.

ஓ, நீர்தானா அந்தக் கமலம்! இளமை முறுக்கேற முகம் விகசிக்க கண் மலர்ந்து அவளை விழுங்க நல்ல காலம் கமலம் அவரை ஏறிட்டுப் பார்க்கவில்லை. பார்த்தால் 'இவன் பார்வை சரியில்லை' என்று விடுவாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகணம் அந்தப் பயங்கர இரவும் அந்த உணர்வுகளும் ஆட்கொள்ள, அநாதரவாகத்தன் கரங்களுள் சிறைப்பட்டுக் கிடந்த அந்த இளஞ்சிட்டா இன்று அறிவும் வீரமும் பொருந்திய பெண்ணாகத் தன் முன் நிற்பது.?

தன்னந்தனியே இவனைச் சுமந்து சுமந்து சமூகத்தின் கெடுபிடிகள் அவமானங்களை எப்படித்தாங்கினாய் அம்மா. உன்மகனுக்கே அவன் தந்தை யாரென்று சொல்ல ஊர்பேர் தான் தெரியுமா?
சில கணங்களுள் சங்கரின் உள்ளம் உருகிப் பச்சாதாபத்தால் கரைந்தது.

"பிள்ளை, இவர் யாரோ 'சிவா' வின் நண்பனாம். அந்த சிவா பள்ளிக் காலத்தில் இவரோடை படிச்சவராம். கந்தப்பிள்ளையின் மகனாயிருக்குமோ என்று நினைச்சன். அவரைத் தேடி வந்தவராம்.

"வணக்கம் ஐயா, 'ஏறிட்டுப் பார்த்துப் புன்னகை புரிகிறாள் கமலம்' அவளால் கண்டுகொள்ள முடியவில்லை. ஆயினும் பெத்தாச்சி சங்கர் பற்றிய பூரண கதையையும் அவிழ்த்து விட்டுக் கொண்டிருந்தார். சங்கரோ அந்தப் பயங்கர இரவை இரைமீட்டுக் கொண்டிருந்தார்.

அக்கா வீட்டுக்கு வந்த சங்கர் மறுநாள் மட்டக்களப்பு திரும்புவதாகத் தீர்மானம். துர்க்கையம்மன் கோவில் பற்றி அக்காவிடம் அறிந்திருந்தமையால், மாலைப்பூசைக்குப் போய்வருவதாக அத்தான்காரனின் மிதிவண்டியையும் கொண்டு புறப்பட்டான். சிறிது தூரம் வந்ததும், மக்கள் எல்லாம் எதிர்ப்புறமாக ஓடிவருகின்றனர். "தம்பி தம்பி திரும்பு திரும்பு ஆமி ஆமி" என்றவாறே மிதிவண்டிகளிலும் ஓட்டத்திலும் சென்றுகொண்டிருந்தனர்.

தான் மட்டக்களப்பான் என்று சொல்லி அடையாள அட்டையையும் காட்டினால் விட்டிடுவான்கள் எனும் நம்பிக்கையோடு மேலும்போக, துவக்குச் சத்தங்களும் ட்றக் ஓசைகளும் கேட்கத் தொடங்கின. "சகட்டுமேனிக்குச் சுட்டுக்கொண்டு வாறான்கள். தலைதெரிந்தாலே சூடுதான். வெறியாட்டம். யாரையும் தேடிப்போகாதையுங்கோ. அவைக்கு மாத்திரமல்ல உங்களுக்கும் ஆபத்துத்தான். யாரோ அவனை மறித்துச் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓடுங்கோதம்பி இவங்கள் எங்கடை பெடியள்தான் ஏதோ நடக்கப்போகுது" சனமெல்லாம் ஓடி ஒரு ஒழுங்கையில் இறங்க இவனும் ஓடுகிறான். சூட்டுச் சத்தங்கள் கிட்டக் கேட்கவே சுற்றிவளைக்கிறான்கள் போல என்று கதிகலங்கி திக்குத்திக்காக ஓடுகிறார்கள். ஒரு பெரிய ஒழுங்கையில் அவன் காதைச் சீய்ச்சுக் கொண்டு புல்லட் ஒன்று பறக்கிறது.

இனி சைக்கிளில் போக முடியாது எனக் கருதி ஒழுங்கையிலேயே மிதிவண்டியைப் போட்டுவிட்டு மதிலால் பாய்ந்து ஓடுகிறான் எப்படி ஓடினாலும் வெடிச்சத்தங்கள் கிட்டக்கிட்டவே கேட்கிறது. திக்குத்திசை தெரியவில்லை. கிராமம் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. ஓடிக்கொண்டே இருக்கிறான். இருண்டு நிலமும் தெரியவில்லை. ஒரு ஒழுங்கையில வந்து சேருகிறான். வீடுகளில் ஒரு விளக்குகளும் இல்லை. மனிதர் இருக்கிறார்களோவும் தெரியவில்லை. நாய்கள் கூடக் குரைக்கவில்லை.

சிங்களத்தில் பெலத்துக் கத்திக்கொண்டே தன்னை துரத்திவரும் இராணுவத்தைக் கண்டு ஓடிஓடி சூடுகள் துரத்திவர திடீரென ஒரு வளவுக்குள் பாய்ந்து வெள்ளைக் காற்சட்டையைக் கழற்றி கையிலே சுத்திக்கொண்டு அந்த வளவுக்குப்பின்னால் வளவுக்குள் ஓடுகிறான். ஒரு கயிற்றுக்கொடியில் ஒரு சாரம் காய்வது அந்த மம்மல் இருட்டிலும் தெரிகிறது. அதனை எடுத்து உள்ளாடையின் மேல் கட்டிக்கொண்டு சப்பாத்துக்கால்கள் கிட்ட வரவும் இனி ஓடமுடியாது எனும் நிலையில் மாடுகளில்லாத மாட்டுக் குடில் ஒன்றில் மறைந்து வைக்கோலை மேலே போட்டுக் கொள்கிறான்.

மனைவி ராணி எத்தனை முறை சொன்னாள். யாழ்ப்பாணம் போகவேண்டாம். அது பயங்கரமான பிரதேசம் என்று. வெளிநாடு போகிறவன் இனி எத்தனை வருடங்களின் பின்போ உடன்பிறந்து செல்லம் தந்து வளர்த்த அக்காவைப் பாராது போவதா எனத் துணிந்து வந்து விட்டான். தன் மனைவியும் பிள்ளையும் அநாதைகளாகி விடுவா-ர்களா?

அவன் எங்கே நிற்கிறான். நாளை அடையாளங் காணாத பிணமாக எரிக்கப்படுவானா? அக்கா குடும்பமும் வீட்டைவிட்டு ஓடிப்போயிருக்குமா? பாடசாலை நாட்களில் மைல் ஓட்டத்தில் பங்கு பற்றிய பின் 28 வயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஓட்டம் ஓடியிருக்கிறான். தொடைச்சதைகள் நடுங்குகின்றன. மூச்சு திணறுகிறது. இதயம் படபடவென ஓடுகிறது. இன்னமும் ஆபத்து வந்து கொண்டிருக்கிறது.

திரும்பச் சூட்டுச் சத்தங்களும் சப்பாத்துச் சத்தங்களும் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க யாரோ ஓடிவரும் சத்தமும் இடப்புற முற்றத்தில் விழுகிற சத்தமும் கேட்கின்றன. 'யாரோ சுடுபட்டு விட்டார்கள்' என நினைக்கு முன்னரே வலப்புறம் பார்த்தால் வந்த சப்பாத்துச் சத்தமும் சூட்டுச் சத்தமும் கேட்கின்றன. ஆடு அலறும் ஓசை. "எலுவா எலுவா" எனப் பெலத்துச் சொல்லி என்டோண எனச் சத்தமிடவே 'வருகிறன்' என மறுபதில் வருகிறது.

"யாரோ ஓடிவந்தது போலிருந்தது. "இந்த மூலையில் அசைவுகள் கேட்கவே கொட்டியா என்று வெடிவைச்சன் ஆடுவிழுந்தது. ஆட்டுக்கொட்டில் இரண்டு பெரிய ஆடுகள் நாலு குட்டிகள் அதுதான் அழைத்தேன்"

'ஆ நல்ல கொழுத்த ஆடு. ட்றக் அடிக்குத் தூக்கிக் கொண்டு போவம். குட்டிகள் பாவம் நிக்கட்டும்."

பாரம் தூக்கிச் செல்வதால் நில அதிர்வு அலைகள் கேட்கின்றன. மௌனம். எழுந்து ஓடுவோமா அல்லது விடியும்வரை இப்படியே இருப்போமா பரபரப்புடன் அல்லாடுகிறது அவன் மனம். தண்ணீர் விடாய் அதிகமாகிறது.

யாரோ விழுந்த இடத்திலிருந்து முனகல் சப்தம் கேட்கிறது. அவன் கருணையுள்ளம் தன் ஆபத்தையும் மறந்து தலையை நிமிர்த்திப் பார்க்க வைக்கிறது. மெல்லிய நிலவில் ஆளைத் தெரிகிறது. எங்கே சூடு விழுந்திருக்குமோ. மெல்ல அரவமில்லாது எழுந்து பதுங்கிப் பதுங்கி ஊர்ந்து ஊர்ந்து வருகிறான்.

அது ஒரு பெண்பிள்ளை. குப்புற அரைப்பாவாடை சட்டையுடன் இரத்தம் ஒன்றும் இல்லை. மயங்கி விழுந்திருக்கலாம். கைகால் அசைகிறது. இடைக்கிடை முனகல். இன்னொரு ஆபத்து நேரமுன்னர் அவளைக் காப்பாற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றும் முற்றும் பார்க்கிறான். முற்றத்தில் ஒரு முள் முருங்கை அருகே சுற்றிவர வட்டமாகக் கொச்சிகள் அடுக்கி நடுவே பானை ஒன்று வைத்து அதன் மேல் சிரட்டையால் மூடி ஒரு மூக்குப் பேணி கவிழ்த்து வைத்திருக்கிறது. கிணறு இருப்பதாகத் தெரியவில்லை. பானையிலிருந்த நீரை மூக்குப்பேணியில் வார்த்து முதலில் தன் தாகத்தைத் தணித்துக் கொள்கிறான். பின் அவள் முகத்தில் தெளித்து சொட்டு வாயில் விடுகிறான்.

மிக இரகசியமாக, "தங்கச்சி மெல்ல எழுந்திருங்கள் சத்தம் போடாதீர்கள் நான் ஆமி இல்லை" இதையே அவள் காதுகளில் பலமுறை கிசுகிசுக்கிறான். மயக்கந் தெளிந்ததும் நிலைமையைப் புரிந்துகொண்ட அப்பெண் அவனை வறுகிப் பிடித்துக் கொண்டாள். மெல்ல மறைவிடத்துக்கு இழுத்துவந்த அவன், வைக்கோலை நிலத்தில் போட்டு படுக்க வைக்கிறான்.

திரும்ப இராணுவம் அதிவேகமாகக் கத்திக்கொண்டே சுட்டுச்சுட்டு வருவது கேட்கிறது. அவளோ இவனை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டு உடல் நடுங்க, இதயம் துடிக்க அடைக்கலமானாள். அவனுக்குப் பயத்தால் படபடவென நாடியடிக்க, மனைவியும் 2 வயது மகனும் கண்முன்னேவர, கூடவே ஒரு பொறுப்பும் வந்து விட்டதே எனும் வெறுப்பும் மண்ட, நழுவிப் போகாத வகையில் அவன் மார்பில் குடங்கிக் கொண்ட அவளை என்ன செய்யலாம் என யோசிக்க.

அருகே ஒரு ஷெல் விழுந்து வெடித்தது. அவனுமே அவளைக் கட்டிக் கொண்டான். உடம்பில் ஒரு வேறுவகையான துடிப்பு ஏற்படுவதையும் உணர்ந்தான். உலகிலேயே இந்த மோனப் பெருவெளியில் நாம் இருவரும் தான் தனித்துவிடப்பட்ட ஆத்மாக்கள் போலவும் யாரோ என்று தெரியாத தாமிருவரும்தான் ஒன்றாக உயிர்நீக்கப் போகிறோம் எனவும் நினைப்பு எழவே அவள்மீது ஒரு பரிதாப அன்பு தோன்றுகிறது. அணைத்தபடியே சத்தங்கள் ஓய்ந்தபோதும் விடுதல் அறியா விருப்போடு கரங்கள் நெகிழாது ஒன்றாகி விடுகின்றனர்.

அனுபவமே அற்ற அச்சிறு உயிர் அவனது பழக்கப்பட்ட மென்மையான தழுவல்களில் மெய்மறந்து சுகிக்கிறது. மீண்டும் மீண்டும் ஷெல் வீழ்ச்சிகளும் துப்பாக்கி வேட்டுக்களும் அணைப்புள் இறுகி நிறைய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும் கொடுக்கவும் சுகானுபவத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவும், சொர்க்கத்தைக் காணவும் செய்தன.

நல்ல நிலா நீண்ட அமைதி. இராணுவ வாகனங்கள் புறப்பட்டு போகும் ஓசை மெல்ல மெல்லத் தேய்கிறது. ஒருசில இரகசிய கிசுகிசுக்களைவிட வேறொரு பேச்சுமில்லை. மூச்சுமில்லை. அவர்களுடைய உள்ளமும் உள்ளமுமே பேசின. உடம்பின் ஒவ்வொரு நரம்பும் துடித்துத் துடித்து ஒரே குரலில் பேசிக்கொண்டன.

மெல்ல விடிகிறது. அவள் முழங்காலைக் கட்டிக் கொண்டு இருக்கிறாள். நிலவில் அவள் முகம் ஜொலிக்கிறது. மென்மையான சோர்வோடு கூடிய பூரிப்பு. வெளிச்சத்துக்கு எதிரில் அவன் முகம் இருந்ததால் அவனை நன்றாகப் பார்க்க முடியாதிருந்தது.

இராணுவ வாகனங்கள் புறப்பட்டுச் செல்லும் ஓசை மெல்ல மெல்லத் தேய்கிறது.

"அவர்கள் போயிருப்பார்களா?" இரவின் மயக்கம் தீர்ந்து யதார்த்தத்தை எதிர்கொள்ளும் சுயசிந்தனை.

"போய்விட்டார்கள்"

"நான் மிக வருந்துகிறேன். நான் யாழ்ப்பாணத்தானல்ல. எனக்கு மனைவியும் ஒரு குழந்தையும் இருக்கிறார்கள். ஒரு வாரத்தில் பிறநாடு போகவேணும். இது எந்த ஊரோ எப்படிப் போவதோ தெரியவில்லை" கிசுகிசுப்பில் தான் சொல்கிறான். அவள் தலையாட்டுகிறாள்.

"நீர் எவ்விடம் போகவேண்டும்?" 'துளசிக்காடு'

"போகப்பயமா?" "இல்லை கிட்டத்தான்"

முழந்தாளில் தலையைக் கவிழ்த்தபடியே. "உயர்தரவகுப்பு ரியூசனால் வரும்போது பஸ் பிந்தி வந்தது. இறங்கி உள்ளே நடக்க வேணும். அப்பதான். கிசுகிசுப்பு. ஒரு கேவல்.

ஓ! 17, 18 வயதிருக்குமா? குழந்தைமைதான் தெரிந்ததே. ஆனால் சூழலைப் புரிந்து கொள்ளும்தன்மையுடன் அதனை ஏற்றவளாகவும் ஒரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் மாறிவிட்டாள். பாவம்!

அவனது தெளிவான உருவம் தெரியவில்லை. ஆனால் அடிக்கடி இடதுகையால் நாடியை உருவுவது தெரிகிறது, அவளுக்கு. ஆனால் அவனை உள்ளும் புறமும் அறிந்தவளாகத்தான் உணருகிறாள்.

உடைகளை அணிந்து கொண்டு அவள்முன் வந்து, "I am sorry நடந்ததற்கு கவலைப்படுகிறேன். மன்னியுங்கோ நான் அவசரம் போகவேண்டும்."

"எதற்கு மன்னிப்பு அப்படியானால் நான்தான் மன்னிப்பு கேட்கவேண்டும். வேண்டாம். உங்களுக்குத்தான் நன்றி. இராணுவத்தால் சீரழிக்கப்பட்டு கொலை செய்யப்படுவதிலும் பார்க்க.....
விம்மலும் துயரமும் மேற்கொள்ள மெல்ல மெல்லத் தொடர்ந்தாள்.

"ஒரு அற்புதமான மனிதரைக் கண்டேன். உங்கள் உயிரையும் பொருட்படுத்தாது என்னைக் காப்பாற்றி ஆதரவு தந்து வாழ்நாள் பூரா மறக்க முடியாத, இந்த இரவு ஒன்றுக்காகவே தங்கள் நினைவுகளை உள்ளத்தில் சிறைப்படுத்திக் கொள்வேன்."

"உயிராபத்தில் ஒருவருக்கொருவர் துணையிருந்தோம். ஆனால் எங்கள் வழிகள் வெவ்வேறு என்பதை நான் நன்கு அறிவேன். அவலச் சாவிலிருந்து மீட்டீர்கள் என்ற நன்றியுணர்வு மட்டும் மனதில். கவனம் இராணுவ நடமாட்டம். எல்லாத்துக்கும் எல்லாவற்றிற்கும் நன்றி,"

இரவெல்லாம் ஒரு சொல்கூட பேசாத ஒருத்தி இனி சந்தர்ப்பம் வராதென்றா இவ்வளவும் கூறினாள். அவனுள் ஒரு பச்சாதாப உணர்வு. அந்த உலகம் அறியாத கன்னிப்பெண்ணை நடுவில் விட்டுவிட்டு எத்தனை சுலபமாகத்திரும்ப முடிகிறது. இரு கைகளையும் பற்றிக்கொண்டு, 'இந்தப் பெரிய உலகத்திலை நாம் சந்திக்கும் வாய்ப்பு இனி ஒருபோதும் வராது. போட்டு வாறன். ஆனால் இந்த இரவை இருவருமே வாழ்நாளில் மறக்கப் போவதுமில்லை.

கைகளை வீசி நடக்கிறான் திரும்பிப்பார்க்காமலே. அவனது அவசரம் அவனுக்கு. அவள் கையால் காட்டியபடியே ஒற்றைப்பனை வரை நடந்து மக்கித் தெருவில் ஏறி.... இருவருமே தம் அடையாளங்களைத் தெரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள நினைக்கவில்லை.

கம்பீரமாக நடக்கும் அந்த இளைஞனின் உருவத்தைப் பார்த்தபடியே கண்களில் நீர்மல்க உள்ளம் உருகுகிறது. அவரவர் வாழ்க்கை அவரவரது. ஒரே இரவில் ஞானக்கண்ணைத் திறந்துவிட்டதுபோல் திடீரெனத் தான் முதிர்ந்துவிட்டதாக உணருகிறாள் அவள்.

பலபலவென்று விடிகிறது. மக்கள் நடமாடத் தொடங்கிவிட்டனர். இரவுப்பிரளயத்தில் எத்தனை மண்டை உருண்டன எத்தனை வீடுகள் கொள்ளையிடப்பட்டன. எத்தனை ஆடுமாடுகள் காணாமற் போயின. எத்தனை வீடுகள் எரிந்தன எனக் கணக்குப் பாக்கப் புறப்பட்டுவிட்டனர் இளைஞர்கள்.

பதட்டத்துடன் வழிகேட்டு வந்து மட்டக்களப்பைச் சேர்ந்தபின்தான் சங்கர் மூச்சுவிட்டான். அவன் தமக்கையுடன் தொடர்பு கொண்டு தான் சுகமே வந்ததை அறிவித்தபின்தான் அவர்கள் பதில் கிடைத்தது. தாம் தேடித்திரிந்ததாகவும் சைக்கிளைக் கண்டுபிடித்ததாகவும், காயக்காரர் இறந்த சடலங்கள் எல்லாம் அடையாளங்காண அலைந்ததாகவும், பயத்தில் வீட்டுக்கு அறிவிக்காமலே பதட்டப்பட்டு திரிந்ததாகவும் எழுதியிருந்தனர்.

சங்கர் நினைத்தபடியே கனடாப்பிரயாணம் தொடர்ந்தது. மேலும் இரு குழந்தைகள் பிறந்தனர். ஆனால் அவனுடைய இயல்பு வாழ்க்கையில் இப்போது இந்நினைவு ஒரு முள்ளாக உறுத்தும். ஒரு பூவாக வருடும் ஒரு தென்றலாகச் சிலிர்க்க வைக்கும் கசக்கிய பூவா? மலர்த்திய மொட்டா?

அவள் யார். பெயரென்ன? என்னவானாள்? பல்கலைக்கழகம் போயிருப்பாளா? யாரையாவது விவாகம் செய்திருப்பாளா? குழந்தைகுட்டி இருக்குமா? ஊரைவிட்டு வெளியேறினால், எங்கே இருப்பாள்? வெளிநாடுகளுக்கு அவள் குடும்பம் வந்திருக்குமா?

என்ன பிராயச்சித்தம் செய்யலாம். விடைகாணாத வினாக்களாகவே புதுப்புது எழுச்சியுடன் அவனை உரசி உலைத்து வந்தன. அந்த நீலவானும் நிலாவும் இயற்கையளித்த படுக்கையும் குடத்துநீரும் மின்னல் மின்னலாக வந்து போயின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை ஒருமுறை பார்த்திட வேண்டும், அவள் கதை அறியவேண்டும் எனும் ஆவல் வளர்ந்து கொண்டே சென்றது. வயதும் 45 ஆகியும் அந்த இரவின் பயங்கரமும் இரு உள்ளங்களின் சங்கமமும் மகிழ்வும் அடிக்கடி இரைமீட்டு அசைபோட்டு அவரை இன்பமும் துன்பமும் விசாரமுமாக ஆட்டி வைத்தன. துன்பத்தின் எல்லையில், அனுபவித்த இன்பத்தின் எல்லையும் ஆத்மாவோடு பிணைந்த ஒன்றாக, இத்தகைய ஒரு பிரயாணம் ஒரு இலட்சிய வெறியாகவே வளர்ந்திருந்தது.

ஓ! அந்தச் சின்னஞ்சிறு சிட்டு நீர்தானா? கமலம்! அந்தப் புத்தம் புதிய பருவமலர் நீர்தானா? அனுபவங்கள் உம்மைப் புடமிட்டனவா? இவன் என் மகனாயின் நீர் எத்தனை கஷ்டப்பட்டிருப்பீர். படிப்பு நின்று போயிருக்கும். கிராமத்தவருக்குப் பதில் சொல்ல வேண்டியிருந்திருக்கும். மனஉளைச்சல் ஏற்பட்டிருக்கும். ஒவ்வொரு பிரசவத்தின்போதும் எல்லாப் பொறுப்பையும் நானே எடுக்கவேண்டும் என ராணி வில்லங்கப்படுத்துவாளே எதுவித உதவியுமன்றி, ஒரு கணவனின் ஆதரவுமின்றி தன்னந்தனியே எப்படி அந்தக் கட்டத்தைத் தாண்டி வந்தீர்.

இன்று உரம்மிகுந்த சேவகியாகி, பிறரின் கையை எதிர்பாராது தனக்கென ஒரு தொழிலையும் பார்த்து இந்த இளவலையும் வளர்த்து ஊருக்கும் உழைத்து எவ்வாறு எதிர்நீச்சல் போட்டீர். எவ்வாறு இந்தத் தைரியம் வந்தது? இந்தத்தீவிரம், கலகலத்த பேச்சு. உடலிலும் உள்ளத்திலுமுள்ள முதிர்ச்சி எனது ஆசிரியை ஒருத்தியை நினைவூட்டி மரியாதை கொடுக்க வைக்கின்றதே. பயந்து நடுங்கி விடாது பற்றிக்கொண்ட அந்தக் கோழிக்குஞ்சா நீர்? காலம் பதில் சொன்னதா அல்லது இதுவும் பிரபாவின் சிந்தனையா?.

“ஐயா” அவளுடைய அழைப்பு.

அவர் தன் குரல் தடுமாற ‘நான் சங்கர்’

“சரி, சங்கர் ஐயா” சிரிக்கிறாள்.

“இந்தக் கஷ்டமான காலத்திலும் இந்தக் குக்கிராமத்தைத் தேடி வந்துள்ளீர்கள். நட்பு அவ்வளவு பலமானதா?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தவனுக்குத் தன்னையே புரிந்து கொள்ள முடியவில்லை. அவளுடைய ஆளுமையின் முன் ஏன் கோழைபோல் தடுமாறுகிறான். நீண்டகாலப் பரிதவிப்பு எதிரில் முழுத்தைரியத்தோடும், வீரத்தோடும் நிற்கிறதே என்றா?

"நீங்கள் குறிப்பிடும் அந்த சிவா, பெத்தாச்சி சொன்னவராகத்தான் இருக்கும். அதுகள் கனக்கச் சகோதரங்கள். மூத்தவர்தான் சிவா. ஆனால் அவை அந்தநாளையிலேயே கந்தர்மடத்தில் இருந்து பிள்ளைகளைப் படிப்பித்தவை. பின்னர் கொழும்புக்கு மாற்றலில் போனவை. அதன்பின் என்ன ஆனார் எனத் தெரியாது. அவரின் சகோதரங்கள் சுண்டிக்குளியிலும், சென்ற்யோண்ஸ் இலும் படிச்சவை. இந்தக் கலவரங்களூடே எங்கே போச்சினம் என்று தெரியாது. நான் விசாரித்துச் சொல்லுறன்."

முன்னெப்போதும் கேட்டிராத அமைதியான அமிர்தமான, திடமான குரல் அவரைக் கிறுகிறுக்க வைத்தது. புதிய பரபரப்பால் எதைக் கதைப்பதென்று அவருக்கும் தெரியவில்லை.

"சீவியத்துக்கும் சிலோனிலை கால்வைக்கமாட்டன்" எனும் சிவாவைத் தேடி இங்கு வந்தானென்பதை அவளறிந்தால், என நினைக்கும் போது சிரிப்பு வந்தது அவருக்கு.

"ஏனையா சிரிக்கிறியள்" என்று கேட்ட பையனுக்கு, "அவனுடைய சிறுவயதுக் குழப்படிகளையும் குறும்புகளையும் நினைக்க சிரிப்பு வந்தது"

இனி என்ன செய்யுறது தம்பி, நீர் முகவரியைக் கொடுத்திட்டுப்போம் ஏதும் கேள்விப்பட்டால் கமலம் அறிவிப்பா" பெத்தாச்சியின் குரல்

"சரிசரி தம்பி கமலத்தோடை போய் சாப்பிட்டு வாரும்."

அவர் தன் சட்டைப்பையிலிருந்து முகவரி அட்டையை எடுத்துக் கொடுக்கிறான்.

உற்றுப்பார்க்காது ஏகசோட்டுக்குப் பார்த்துக்கொண்டே வலும் இயல்பாகப் பேசிக்கொண்டுதம் விருந்தினரை அழைத்துச் செல்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி நீ முன்னுக்கு ஓடிப்போய் தருமுவை எல்லாம் எடுத்து வைக்கச் சொல்லும் அங்கிளுக்கு நல்ல நொங்கு கொண்டுவரச்சொல்லுங்கோ

அவன் மிதிவண்டியில் பறந்துவிட்டான்.

"தம்பிக்குப் பெயரென்ன?"

'அகணிதன்'

கிசுகிசுக்கம் குரலில் 'அகணிதன்' எனச் சொல்லிப் பார்த்தார்.

நெற்றியைச் சுருக்கிப் பார்த்தாள் கமலம்.

"எங்கேயோ கேட்ட குரல் மாதிரி இருக்கு" செம்மை படர்ந்தது.
'கேட்டிருப்பீர் கேட்டிருப்பீர் சுற்றிவர ஆமிக்காரன். இப்படித்தானே பேசமுடியும்" நினைத்துக் கொண்டார் அவர்.
"அகணிதன் என்றால் பொருளென்ன?
"கணிதங்களுக்கு அப்பாற்பட்டவன் - இறைவன் - யாராலும் அவர் இப்படித்தான் இருப்பார் இதைத்தான் செய்வார் எனக் கணக்குப் போடமுடியாது"

ஓஹோ பேரும் ஊரும் தெரியாத - மெல்லிய நிலவில் முகத்தைக் கூடத் தெளிவாகக் காணமுடியாத - கணக்கில் அகப்படாதவன் மகனா? அப்படியே இருக்கட்டும்!

அவர் கை அவரை அறியாமலே நாடியை வருடியது. அகணிதன் வந்ததும் இருவரும் உணவு உண்ண ஆரம்பித்தனர். மரவள்ளிக்கிழங்கு இலையில் விழுந்ததும் அகணிதன் இடது கையால் நாடியை வருட சங்கரும் அப்படியே வருடினார். இதை அவதானித்துவிட்டாள் கமலம். ருசியிலுமா? என வியந்தார் சங்கர்.

"அகணிதனின் அப்பா எங்கே?"

"இவன் பிறக்க முன்னரே போய்விட்டார்"

"இன்னொரு அப்பாவைத் தேடியிருக்கலாமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிலருடைய வாழ்க்கையில் பல திருப்புமுனைகள் தோன்றலாம். ஆனால் வாழ்ந்தது ஒரு நாளோ ஒரு மாதமோ ஒருவருடமோ ஒவ்வொரு நிமிடமும் நன்கு அனுபவித்து மகிழ்ச்சியடைந்த வாழ்க்கையை நினைந்து நினைந்து நன்றியோடு வாழ்ந்துவிடமுடியும். ஒருவருக்கு மனப்பூர்வமாக சமர்ப்பித்த உடலையும் உள்ளத்தையும் இன்னொருவர் கைபட விடலாமா? அந்தப் புனிதத்தை இன்றளவும் அனுபவிக்கிறேன். திருப்தியான வாழ்வு. ஏக்கமுமில்லை எதிர்பார்ப்புகளுமில்லை."

அவருடைய இடக்கை அவரை அறியாமலே நாடியை வருடியது. துணுக்குற்ற அவள் அவர் முகத்தை உற்று நோக்கினாள். கண்களில் ஒரு மிரட்சி, பின் தெளிவு, பார்வை தாழ்ந்தது. முகத்தில் செம்மை படர்ந்தது. வாயும் மௌனித்துவிட்டது.
மௌனமாகவே உணவுப் பரிமாறலும் நடந்து முடிந்தது.

இதைக் கவனிக்காத அவர், "இத்தனை ருசியான சோறு கறியைச் சாப்பிட்டபின் ஊருக்குப் போகமனமில்லை. உள்ளிமிளகு குத்திப்போட்ட எலும்புச்சொதியும் இறைச்சிப் பிரட்டலும் நல்லாய் இருக்கு."

அகணிதன் சிரித்துக்கொண்டே "அது பொன்னம்மா மாமி ஆக்கினவ. கோழிதான் எங்கடை."

அவரும் தன்மகனை அடிக்கடி பார்த்துக் கொள்கிறார். தன்னைப் போலவே மென்மையான நகைச்சுவை இருப்பதையும் அவதானிக்கிறார்.

தருமு நொங்கு கொண்டு வந்து வெட்டிக் கொடுக்கிறான். கமலம் தோண்டி எடுத்து ஒரு வெள்ளிப் பாத்திரத்திலிட்டுக் கொடுக்கிறாள். ஏதோ ஒரு குடும்பம் நடப்பதுபோல் உணர்வு.

"தங்கச்சி எனக்கு ஒரு ஐஞ்சாறு வயதுக்கு இளமை. இப்பமாதிரித்தான் சின்னதிலை இருந்து என்னை இருத்தி எழுப்பிப்போடும் என்ன பேசாமல் இருக்கிறீர்"

கமலத்தின் மௌனம் அவனுக்கு அசாதாரணமாய்ப் படுகிறது போலும். 'அங்கிள்' 'அங்கிள்' என்று அகணிதனும் நன்றாக ஒட்டிக்கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த யந்திரமயமான வாழ்க்கையோடு பார்க்க இங்கே எவ்வளவு நிம்மதியாய் இருக்கு. சோறுகறிகூட வாரத்திலே ஒருநாள்தான். இன்றைக்கு நல்ல நிம்மதியாய் இருக்கு. இளநீரா, நொங்கா எல்லாம்தான்.

உள்ளமெல்லாம் பூரிக்க ஒரு முறுவல் வருகிறது கமலத்துக்கு. அவளுக்கும்தான் எவ்வளவு நிம்மதி. எத்தனை நாளைக்குத்தான் உருவமற்ற ஒரு கடவுளைக் கற்பனை பண்ணுகிறது.

"இரவு யாழ்ப்பாணத்திலை ஹோட்டலில் தங்கி நாளை அதிகாலை மட்டக்களப்பு போய்விடுவன். மூன்று நாட்களால் கனடா பயணம்."

"இனி வரமாட்டீங்களா ஐயா" தருமு.

"சமாதான காலமாயின் அடிக்கடி இலங்கைக்கு வந்து போகலாம். பிள்ளைகள் அங்கே படிக்கிறார்கள். இங்கேயும்சில பிள்ளைகளுக்கு படிப்புக்கு உதவி செய்கிறன். ஆனபடியால் ஓய்வு காலம்வரை வேலை செய்யத்தானே வேண்டும்.
தருமனோடு பேசும்போது இயல்பாக வருகிறது.

கமலத்தைப் பார்க்கும்போது காலம்பூரா அவளோடு வாழ்ந்ததான ஒரு திருப்தியும் மகிழ்ச்சியும் பிரமிப்பும்.

"தம்பி அங்கிளைக் கூட்டிக்கொண்டு பெத்தாச்சி கடையடிக்குப் போங்கோ. நான் இப்ப வந்திடுவன்.
இரவு உணவு செய்து கொடுத்து விடுவதற்காக புத்துணர்வும் புத்துயிரும் வந்ததுபோல கமலம் துள்ளித்துள்ளி இடியப்பம் அவிக்கிறாள். முட்டையும் பொரித்து கறியையும் வைத்து பொதிகட்டிக்கொண்டு வருகிறாள்.
வழியில் சந்தித்த முருகன் "ஐயா நீங்கள் முந்தி ஆமியில் இருந்தனீங்களோ?

"இல்லையே படிச்சு முடிச்சதும் வெளிநாடு போய் 25 வருடம் ஆச்சு."

"தம்பியவை யாரும் ஆமியிலை...?"

"தம்பிமார் ஒருவரும் எனக்கில்லை. ஆனாலும் தமிழர் ஒருவரும் ஆமிய-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ிலை சேருவதில்லை. ஏன் கேட்கிறீர்?"

"சும்மாதான்"

ஏன் இவனுக்கு சந்தேகம் வந்தது?

அகணிதன் கோபத்தோடு "ஏன் சொல்லன், என்ரை அம்மாவை ஆமிக்காரன் கெடுத்துப்போட்டானென்று, இண்டைக்கு வா வீட்டை" "அங்கிள் எல்லாரும் என்னை அப்படித்தான் சொல்றவை. எனக்குப் பதினொரு வயதாயிருக்கிறபோது அம்மா சொன்னவ "தம்பி! உன்ரை அப்பா நல்லவர். குணமானவர். தமிழர். என்னை ஆமியிடமிருந்து காப்பாற்றிய புண்ணியவாளன். பயப்படாதை. நீ வளர்ந்தபின் அவருக்கு என்ன நடந்தது என்று சொல்லுவன்" என்று சொன்னவ. அம்மா பொய் சொல்லமாட்டா."

தயங்கிறார். அவனுடைய சுடுகோபமும், நின்ற நிலையும் தன்னிடம் சிறிதும் காணப்படாத ஒன்று. வளரும் பருவத்தில் இவர்கள்பட்ட இடர்களும் அரச பயங்கரவாதத்தினால் அடிக்கடி ஏற்படுத்தப்பட்ட துன்பதுயரங்களும் இவர்கள் உள்ளத்தில் வன்மையை விதைத்து கோபம் வீரம் முதலிய உணர்வுகளையே மேலோங்க வைத்துவிட்டது போலும்.

"அது சரியப்பு அம்மாவும் நீங்களும் எவ்வளவு நல்ல குணங்கள் பண்புகளோடு இருக்கிறியள் தப்பாக ஒன்றும் நடந்திராது" ஒன்றுக்கும் கவலைப்படவோ கோபப்படவோ கூடாது.

கையைப் பிடித்தவாறே நன்றியுடன் பார்க்கிறான் அகணிதன்.
மகனே உனக்கு காலம் வரட்டும். உனக்குமட்டும் உண்மையைத் தெரியவைப்பேன். அந்தக் கோழிக்குஞ்சு எனது கொடுங்கைக்குள் கிடந்து துடித்த துடிப்பும் இருவருமே மரணத்துக்கு அஞ்சி ஒருவரில் ஒருவர் ஆறுதல் தேடி ஆசுவாசப்படுத்தியமையும் அந்தப் புத்தம்புதுமலர் கசங்காமல் மலர்ந்ததையும், ஒரு தற்செயல் விளைவு எனப் புரிந்துகொண்டு பிரிந்தமையும் நானே சொல்வேன். "நீ ஒரு கழிசடையின் பிள்ளையல்ல என்பதை உணர்வாய்' எனத் தன்னுள் நினைத்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சி கடையடியில் விடைபெறப்போகிறார் சங்கர்.

"தம்பி நல்லாய் படிக்கிறார் போல. நான் மட்டக்களப்பில் இரண்டு பையன்களின் படிப்புச் செலவை ஏற்று மாதாமாதம் பணம் அனுப்பு 0கிறனான். இவரும் மேலே படிக்க வசதியில்லாவிட்டால் நாங்கள் உதவி செய்யலாம். நல்ல துறை ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலாமே"

பையன் ஆசையோடு ஆர்வம் மின்ன அவரைப் பார்க்கிறான்.

"நல்ல கமலமல்லே ஒருவர் உதவி செய்யுறன் என்று வந்தால் சன்னதம் ஆடுவளே."

கேட்டுக் கொண்டே வந்த கமலம் "அது ஆச்சி அந்தக் காலம் காசைக்காட்டி என்னை அடிமையாக்கப் பார்த்தவை. தனிச்சன் தானே மேயலாம் என்று கெட்ட நோக்கத்தோடை வந்தவை.
இன்றைக்கு அப்படியல்ல. இனிமேல் என்ரை உழைப்பும் இவர் ஆசைப்பட்ட துறைக்கு விட்டுப் படிப்பிக்கப் போதாது. கனடாக் காரர் காசுக்காரர்தானே. ஏதோ புண்ணியத்தைத் தேடிக்கொள்ளட்டும்.
ஒரே நேரத்திலை இரண்டு பேரும் நாடியை வருடிச்சினம்.

"அம்மா என்று ஆனந்தத்தோடு ஓடிச்சென்று தாயைக் கட்டிக்கொண்டான் அகணிதன்.

சங்கரின் கண்கள் கலங்குகின்றன. நாணத்தால் சிவந்த முகத்தோடு அவரைப் பார்த்த பார்வையில் அதே பேசுங்கண்கள் தன்னைப் புரிந்து கொண்டுவிட்டாள் என்பது தெளிவாகிறது.

"இதுவும் பிரபுவின் சிந்தனை தான், புலம்பெயர்ந்தோர் தேட்டம்... தாய்மண்ணை வாழவைக்க வேண்டுமாம்" தருணம் பார்த்துச் சொன்னான் தருமன்.

அவரைத் தெருவில் விட்டு வருகிறேன் என மிதிவண்டியைத் தயாராக்கினான் அகணிதன்.

புறப்படும்போது.... சங்கர். அவர்மனம் கிரகணம்விட்ட சூரியன்போல் மகிழ்ச்சியால் பிரகாசிக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படும்போது இருவர் கண்களும் ஒன்றையொன்று கவ்வி கீழே தாழ்கின்றன. இருவர் முகங்களும் சிவந்து தம் மகிழ்ச்சியை மறைக்கப் பாடுபடுகின்றன. ஒரேயொரு கணந்தான் அந்த இரவு மீண்டும் அலைமோதுகிறது. அன்றுபோலவே இன்றும் திரும்பிப் பாராது செல்கின்றார் சங்கர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் அச்சேறிய சில நூல்கள்

1. குறமகள் கதைகள் - சிறுகதைத்தொகுதி (1990) முதலாம் பதிப்பு
   (2000) இரண்டாம் பதிப்பு
2. உள்ளக்கமலமடி - சிறுகதைத்தொகுதி (2001)
3. இராமபாணம் - கட்டுரைகள் (2001)
4. மாலை சூட்டும் நாள் - கவிதைத்தொகுதி (2005)
5. யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கல்வி - ஆய்வுநூல் (2007)
6. கூதிர்காலக் குலாவல்கள் - குறுநாவல் ( 2010)

## தொகுப்பு நூல்கள் (இழப்புகளின் போது)

1. குருமோகன் பாலர் பாடல்கள் (மைந்தன்) (1965)
2. அருள் நெறிக்கோவை (தந்தை) (1971)
3. சக்தி நெறி (தாய்) (1972)
4. பஞ்சாட்சரம் (குடும்ப வைத்தியர்) (1988)
5. குகநெறிக்கோவை (கணவன்) (1991)
6. ஈழத்து றோசா (மகள்) (1997)

## ஒவ்வொரு அத்தியாயங்கள் எழுதிய நாவல்கள்

1. மத்தாப்பு (ஐவர் எழுதிய நாவல்) (1962)
2. கடல்தாரகை (பத்துப்பேர் எழுதிய நாவல்) (1975)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிற்றின்பம் பேரின்பமாகிறது**

"_ அகணிதனின் அப்பா எங்கே?"
"இவன் பிறக்க முன்னரே போய்விட்டார்"
(உன்னை விட்டா, உலகை விட்டா)
"இன்னொரு அப்பாவைத் தேடியிருக்கலாமே"
"சிலருடைய வாழ்க்கையில் பல திருப்புமுனைகள் தோன்றலாம். ஆனால் வாழ்ந்தது ஒரு நாளோ, ஒரு மாதமோ, ஒரு வருடமோ? ஒவ்வொரு நிமிடமும் நன்கு அனுபவித்து மகிழ்ந்த வாழ்க்கையை நினைந்து வாழ்நாள் பூராகவும் வாழ்ந்து விடலாமே. ஒருவருக்கு மனபூர்வமாக சமர்ப்பித்த உடலையும் உள்ளத்தையும் இன்னொருவர் கைபட விடலாமா? அந்தப் புனிதத்தை இன்றளவும் அனுபவித்து வருகிறேன். திருப்தியான வாழ்வு, ஏக்கமுமில்லை, எதிர்பார்ப்புகளுக்கும் இல்லை.

---அகணிதன்---

**சிறாணியின் புரிதலுக்கான அறிதல்**

"......இதற்குள் இவ்வளவு இருக்கா எனக்குத் தெரியாது. டடியின் வேலை முத்திரை விற்கிறது தான் என அவரை நையாண்டி பண்ணுவன்"

"ஆசிரியத்தொழில்தான் எனக்கு விருப்பம். ஆனாலும் எங்கள் குடும்பம் பெரிசு. வசதியாக வாழ்வதற்கு அந்த வேதனம் போதாது. சாப்பாட்டுக்கே காணாத பிச்சைச் சம்பளம். புனிதமான தொழில் என்று சொல்லிச்சொல்லி வாத்திமாரும் 24 மணிநேரமும் குத்திமுறியுறதுதான். அரசு மாறினால் கூட்டிக்குடுக்கலாம்."

"அதுதான் அஞ்சல் திணைக்களத்துக்கு வந்திட்டீர்களோ "ஓமோம், வேதனம் ஒரு பக்கம், மேலதிகவேலை, பிரயாணச்செலவு, வசிப்பிடம் என்று பல நன்மைகள் இருக்கிறதென்று - அதுதான் வந்திட்டன். அதுவும் உண்மைதான். ஆனால் இதுவும் கவர்ச்சிகரமான வேலைதான்"
---- கூதிர்காலக்குலாவல்கள்----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org